
பொங்கல் சிறப்பிதழ்


கல்கி

KALKI 17.1.93 ரூ. 3.00

ஜில்லு-ஜானு ஸ்பெஷல்!




உலகின் சுவைமிக்க மல்ட்டி விட்டமின் காப்ஸ்யூல்.



முட்டை— அன்றாடம் உணவிலே அத்தியாவசியமான வைட்டமின்களைப் பெற அபாரமான வழி.

இதிலே, நோய் எதிர்ப்புச் சக்தியை தரவல்ல வைட்டமின் 'ஏ' நல்ல ஜீரண சக்திக்கு அவசியமான வைட்டமின் 'பி' சத்துக்களின் அனைத்து வகைகள் மற்றும் வலுவான எலும்புகளுக்கு வைட்டமின் 'டி' செறிந்துள்ளன.

உங்கள தேய்ந்துபோன திசுக்களைப் புதுப்பிக்கவும், உங்கள் கண்மணி சரிவர வளர்வதற்கும் அவசியமான புரதச் சத்து



அவித்த முட்டை : அத்துடன் 30-க்கும் மேலான சமையல் குறிப்புப் புத்தகம் இலவசமாகப் பெற எழுதவும்: என்.இ.சி.சி. E-13/14, மார்க்கெட் கோ-ஆப்ரேட்டிவ் ஹவுசிங் சொசைட்டி, S. No. 559/AB குல்டேக்டி, புனே-411037.

முட்டையிலே செறிந்துள்ளது.

தவிர ஆரோக்கியமான இரத்தத் திற்கும், சுறுசுறுப்பாக செயல்படவும் அவசியமான இரும்புச்சத்தும், ஃபாஸ்ஃபரஸும் நிறைந்துள்ளது.

அன்றாடம் ஒரு முட்டை உண்பீர், இந்த 'மல்ட்டி விட்டமின் காப்ஸ்யூல்' செய்யும் அற்புதத்தை அறிந்து கொள்வீர்.

எந்த நாளும் சிறந்தது.
முட்டை உண்ண உகந்தது.

NECC

நேஷனல் எக்
கோ-ஆர்டினேஷன் கமிட்டி

Enterprise/NECC/90 Tm

புத்தாண்டுப் பழிவாங்கல்!

Vமர்சனம்

ஒரு மாறுதலுக்காக இந்த வாரம் செய்யுள் நடையில் விமர்சனம். இதில் சீர், தளை, தேமாங்காய், புளிமாங்காய் இன்ன பிற வெண்பா இலக்கணமெல்லாம் தேடாதீர்கள்!

●● செல்வமணி, ரோஜா, வைரமுத்து முன்மொழிய,
வல்ல விஜயலக்ஷ்மி இசைத்த பாட்டெல்லாம்
கேளாது போனதுகாண், 'மைக்' செய்த சதியாலே,
பாழாச்சு 'ஓர் இனிய மாலை'!

●● ஒட்டக்கூத்தரின் தக்கயாகப் பரணிக்கு
கிட்டியதோர் தண்டனை இவ்வாரம் - பட்டுப்
புடைவைகளின் அணிவகுப்பில் பாட்டெல்லாம்,
பாவமெலாம்
தட(ம்)மாறிப் போனகதை கேள்!


●● 'புத்தாண்டுப் பழிவாங்கல்' தப்பாமல் இவ்வாண்டும்;
சொத்தை நாடகமாய்த் தந்தார்கள் - முத்தாய்ப்பாய்
'இனிய தமிழ் மக்களு'க்கு இயக்குனர் இமயம் தந்த
மனித நேய உரைக்கே நம் மார்க்!

●● தொண்ணூற்றி இரண்டின் 'துயரத் தொகுப்பு'தனை
கண்ணுற்றேன் பிபிஸி செய்திகளில் - மண்ணுலகில்
எத்தனை சண்டைகள்! பூகம்பம், புயல்வெள்ளம்!
செத்தபின் சிலைவைக்கும் மாண்பு.

●● ஐயா! தொலைக்காட்சி இயக்குனரே! உம்மாண்ட
மெய்யாலே ஒருவிஷயம் கேக்கணுங்க! - ஓடாம
உடைப்புல போட்ட படமெல்லாம் உமக்குமட்டும்
கிடைக்கிறது எப்படீங் க?


●● இந்திக்குத் திடீரெனக் கூடுதல் நேரம்
தந்ததனால் தொத்திருக்கும் வேளை - மாலாவின்
அருமைகுழல் இசையரங்கை அரைகுறை யாக்கி
கொடுமையாய் மேலும் தோகடித்தார்!

- கிச்சா







● மனிததேய உரை



ENTRY
RS. 25/-




சகல வேஷம் பழசு; ஜோக் புதுசு!
இத்தனை பெரிய கல்லணையை கட்டியிருக்கேன்... சும்மா இருக்கீங்களே...? ஒரு 'கட்அவுட்' வைக்கக் கூடாது...?
யாரங்கே.... இங்கே நம் கட்சிக் கொடியை ஏற்றி நட்டு.... அதன்மேல் இந்த முல்லைக் கொடியைப் படர விடுங்கள்..
தேர் ஓட்டி என் மகனைக் கொல்ல முடியாது.... வேண்டுமானால் ஒரு
போடுகிறேன்... ஆளை விடு....
வந்து இந்த மயிலுக்குப் போர்த்து தப்பா...!
நான்தான் ஔவை; நீ அதியமான்... என்ன சொல்றே...?
வேணும்னா ச்யவனப்பிராஷ் லேகியம் வாங்கித்தரேன் நெல்லிக்கனி எனக்குத்தான்!

திரு.வி.க. நகர் பெனி:பிட் :பண்டு லிமிடெட்

ஸ்தாபிதம் : 1989

தலைமை அலுவலகம் : 10, 2வது தெரு, ஆண்டாள் அவின்யு, (திரு.வி.க. நகர் அருகில்), சென்னை - 600 082. போன் : 610390
பாரீஸ் கிளை: 49, வெங்கடாசல முதலி தெரு, முதல் மாடி, (கந்தசாமி கோவில் அருகில்), சென்னை- 600 003, போன்: 565760

டெபாசிட் திட்டங்கள்

பென்ஷனர் டெபாசிட்

குறைந்த பட்ச டெபாசிட்	காலம்	வட்டி விகிதம்
ரூ.10,000	1 வருடம் 2 வருடங்கள் 3 வருடங்கள்	21%

- ★ இத்திட்டத்தின் கீழ் ஒய்வு பெற்றோர், 50 வயது அடைந்தோர், விதவைகள், உடல் ஊன முற்றோர் மற்றும் கல்வி, சமய அறக்கட்டளைகளும் பயன் பெறலாம்
- ★ பிரதி மாதம் வட்டி வழங்கப்படும்
- ★ வட்டிக்குரிய காசோலைகள் முன்னதாகவே அளிக்கப்படும்.

வைப்பு நிதி

காலம்	வட்டி விகிதம்	
	ரூ.10,000 க்கு கீழ்	ரூ.10,000 மும் அதற்கு மேலும்
1 வருடம்	17%	18%
2 வருடங்கள்	18%	19%
3 வருடங்கள்	19%	20%

- ★ குறைந்த பட்ச டெபாசிட் ரூ.1,000
- ★ பிரதி மாதம் வட்டி வழங்கப்படும்
- ★ குறைந்த பட்சம் ரூ.10,000 டெபாசிட் செய்தால் வட்டிக்குரிய காசோலைகள் முன்னதாகவே அளிக்கப்படும்.

மறுமுதலிட்டுத் திட்டம்

டெபாசிட் தொகை	காலம்	கால இறுதியில் பெறும் தொகை
ரூ.1,000	12 மாதங்கள்	1,185
	24 மாதங்கள்	1,430
	36 மாதங்கள்	1,760
	44 மாதங்கள்	2,000

ஐஸ்வர்யா டெபாசிட்

டெபாசிட் தொகை	காலம்	கால இறுதியில் பெறும் தொகை
ரூ.1,000	10 வருடங்கள்	6,919
	15 வருடங்கள்	18,885
	20 வருடங்கள்	52,827
	23 வருடங்கள்	95,760

- ★ மாதாந்திர சேமிப்புத் திட்டத்தில் பிரதி மாதம் ரூ.25 செலுத்தி 12 மாதங்கள் கழித்து ரூ.330 பெறுங்கள்.
- ★ சேமிப்புக் கணக்கில் உள்ள நிலுவை தொகைக்கு நாள் தோறும் 12% P.A. வட்டி வழங்கப்படும்.
- ★ நகையின் பேரில் ஒரு சவரனுக்கு ரூ.2,500 வரை கடன் வழங்கப்படும்.
- ★ வீட்டின் பேரிலும் கடன் வழங்கப்படும்.
- ★ பங்குதாரர்களுக்கு மட்டும் ★ ரூ.1 செலுத்தி ஒரு பங்கு பெற்றுக் கொள்ளுங்கள்.
- ★ இது சீட்டு நிறுவனம் அல்ல

Ideal/93

வேலை நேரம்

தலைமை அலுவலகம்:	காலை 9 முதல் 5 வரை. ஞாயிறுகளில் 9 முதல் 12.30 வரை. செவ்வாய் விடுமுறை.
பாரீஸ் கிளை:	காலை 10 முதல் 5 வரை. ஞாயிறு விடுமுறை.

✤ பாதுகாப்பான முறையில் சேமித்து வளருங்கள் ✤

சொல் விளையாட்டு பரிசு ரூ.250

ஆங்கிலத்தில் இந்தப் போட்டி மிகவும் பிரபலம். 'தமிழிலும் அறிமுகப் படுத்தி வாசகர்கள் மூளைக்கு வேலையும் பரிசும் தந்தால் என்ன?' என்று எண்ணியதன் விளைவு இது :

முதலில் புரண்டு போயிருக்கும் எழுத்துக்களை வரிசைப்படுத்தி எழுதி ஒவ்வொரு வார்த்தை உருவாக்குங்கள்.

பிறகு ஒவ்வொரு வார்த்தையிலிருந்தும் வட்டத்துக்குள் அடங்கும் எழுத்தைப் பிரித்தெடுத்து அவற்றைக் கொண்டு அடிவாரத்தில் கடைசி கட்டங்களுக்கு ஏற்ப இரண்டு சொற்களை உருவாக்கினால் பெண்ணின் மண்டையில் இருப்பதும் அம்மாவின் கோபத்துக்குக் காரணமும் புரியும்! படப் பொருத்தமும் இருக்கும்.

பரிசு ரூ 250

ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதினால் பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். பத்து பேருக்கு மேல் சரியான விடை எனில் பத்து பேர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். உறை மீது "சொல் விளையாட்டு" என்று குறிப்பிடவும். இந்தப் பக்கத்திலேயே விடையும் விலாசமும் எழுதி கத்தரித்து அனுப்ப வேண்டும்.

முடிவு தேதி 27.1.93

ம் வு மா அ கு க்

ம் வ ய சி ணா அ

த ல ன் ப மா

ஜை த் ய நி பூ தி

ள வ ளி ம் ம க

த ந் னை ர் ன ந



பெண்ணின் மண்டையில் இதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்பது அம்மாவின் கோபம்!

உங்கள் பெயர், விலாசம் : ....

....

சில கேள்விகள்

பி. ஸி. ஸ்ரீராமுக்கு :

● இப்படி ஒரு ராணி காமிக்ஸ் கதாசிரியரை எங்கிருந்து பிடித்தீர்கள்?

● முழு விருந்து தரவல்ல பூர்ணம், டெல்லிகணேஷ் போன்றவர்களையெல்லாம் ஊறுகாய் ஆக்கியிருப்பது சரியா?

● ஏ.கே. 47 ஆல் சுட்டாலும், ஹெலிகாப்டரிலிருந்து விழுந்தாலும், தண்டவாளத்தில் தலைகொடுத்தாலும் உயிர் பிழைப்பதுதான் ஹீரோவின் இலக்கணமா? ஐயா, நாம் கால் வைக்கப் போவது 21வது நூற்றாண்டில்!

● கலர்ப் படம் எடுங்கள், தப்பில்லை. அதற்காக 'நீல'க் கலரை மட்டும் ஹை-லைட் பண்ணுவது நியாயமா?

● எல்லாம் போகட்டும் சமர்த்தாக நீங்கள் கேமராவோடு நிறுத்திக் கொண்டிருக்கக் கூடாதா?

எடிட்டருக்கு :

● உங்கள் கத்தரிக் கோலுக்குச் சாணை பிடித்து எத்தனை நாளாகிறது?

ஐஸ்வர்யாவுக்கு :

● இந்தப் படம் வெளிவருவதற்கு எல்லாரையும் விட அதிக ஆசைப் பட்டது நீங்கள்தான் என்று அறிகிறேன். இப்போது, ஏன் பட்டோம் என்று தோன்றுகிறதா, இல்லையா?


இளையராஜாவுக்கு :

● உங்கள் இசையில் இத்தனை இளமை தெரிய என்ன காயகல்பம் உபயோகிக்கிறீர்கள்?


தயாரிப்பாளருக்கு :

● நீங்கள் ஏன் படம் பார்க்க வருகிறவர்களுக்கு ஒரு அமிர்தாஞ்சன் 'சாஷே' இலவசமாக வழங்கக் கூடாது?

– ஆர். பி. ஆர்.







எனக்கு மட்டும் வாசிக்கத் தெரியாதா, என்ன?
அம்மாவுக்கு அனுபவம் கிடையாது, ஆலோசகர் சரி-யில்லை!
வாழப்பாடி
கருணாநிதி
பழனி இடைத் தேர்தல்



கல்கி



1993
ஜனவரி 17
மலர் : 51
இதழ் : 25
ஆங்கீரச
தை 4

சாதுக்கள் சாம்ராஜ்யம்;
'சாம்பிள்' பாருங்கள்!

பௌராணிகர்கள் ராமாயணம் சொல்லும் போது, தந்தை வாக்குப் பரிபாலனம் என்ற ராமனின் கடமை உணர்வையும், ராஜ்யத்தைத் துறக்கச் சித்தமான தியாக உள்ளத்தையும், பட்டாபிஷேகத்தையும் வனவாசத்தையும் சமமாக ஏற்ற திடசித்தத்தையும், கைகேயியிடமும் அன்பு செலுத்திய பெருந்தன்மையையும் சொல்லிச் சொல்லி நெகிழ்வார்கள். கேட்போரையும் மனம் உருகச் செய்வார்கள். ஆனால் இந்த உன்னத குணங்களையெல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு, நம்முடைய "ராம பக்தர்கள்", பின்விளைவுகள் பற்றி யோசியாமல், ஆவேசம் மட்டுமே எஞ்சி நிற்கப் பாபர் மசூதியை இடிக்கப் போக, அதைத் தொடர்ந்து நடக்கக் கூடாத பல காரியங்கள் நடந்து விட்டன. உள்நாட்டில் ஆயிரக்கணக்கான உயிர் பலிகள்; மேலும் பல்லாயிரம் பேருக்கு உடலும் உடைமையும் சேதம்; இன்னும் கண்கலங்கி நிற்கும் கணக்கற்றவர்.

அண்டை நாடுகளுடன் ஏற்கெனவே ஏனோதானோ என்று இருந்து வந்த உறவுகள் மேலும் சீர்கெட்டன. தூதரக அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு பாகிஸ்தான் நம் அரசுக்கு உத்தரவிடுகிறது! வங்க தேசத்திலிருந்து ஒரு பெரும் கூட்டம் "பாபர் மசூதியைத் திரும்பக் கட்டுவோம்" என்ற கோஷத்துடன் படையெடுக்கிறது! அவர்களைத் தடுத்து நிறுத்த வங்க தேச அரசு துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் போகப் பலரும் பலி! வளைகுடா பிரதேசத்தில் பெட்ரோலியம் உற்பத்தி செய்யும் நாடுகள் பல ஒன்றுகூடி இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன. இந்தியாவுக்கு வந்து சேர்ந்த பிரிட்டிஷ் அமைச்சர் கென்னத் கிளார்க்கிடம் நமது உள்துறை மந்திரி, "லண்டனில் இடிக்கப்பட்ட கோயில்களைத் திரும்பக் கட்டுங்கள்" என்று விடுத்த கோரிக்கையைக் கேட்டுக் கிளார்க், நாகரிகம் கருதி தலையாட்டியிருக்கலாமே தவிர, உள்ளூர சிரித்துக் கொண்டுதான் இருப்பார்! "இவர்கள் முதலில் வாக்களித்தபடி பாபர் மசூதியைத் திரும்பக் கட்டி விட்டுப் பிறகு நம்மிடம் வரட்டும்" என்று எண்ணியிருப்பார்!

"நடந்ததை மறப்போம்" என்கிறார் வாஜ்பாயி. ஆனால் அது அவ்வளவு சுலபசாத்தியமல்ல என்று பி.ஜே.பி. தொண்டர்களே அமைச்சர் சிந்தியா மீதும் அவர் குடும்பத்தினர் மீதும் தாக்குதல் நடத்தி நிரூபித்துள்ளனர். "தாக்கியவர்கள் பி.ஜே.பி. தொண்டர்கள் அல்ல" என்று ஒருபுறமும், "அத்வானியைப் பார்த்து விட்டு வந்த ஒரு பி.ஜே.பி. தலைவரை இளைஞர் காங்கிரஸ் தொண்டர்கள் தாக்கியதன் பின்விளைவே சிந்தியா மீது தாக்குதல் நடந்தது" என்று மறுபுறமும் பி.ஜே.பி. வட்டாரத்திலேயே பேசப்படுகிறது. உண்மை எதுவானாலும், சகிப்புத் தன்மை இருதரப்பிலும் போய் விட்டது என்பதும் துவேஷம் வளர்கிறது என்பதும் தெளிவு.

வாரணாசியில் ஆதி விசுவநாதர் கோயில் அருகே ஞானவாபி மசூதி உள்ளது. இங்கு போட்டி போட்டுக் கொண்டு ஹிந்துக்களும் முஸ்லிம்களும் குழும, அசந்தர்ப்பமாக ஏதும் நடந்து விடக் கூடாதே என்ற கவலையுடன் ராணுவம் இரவு பகல் காவலிருக்கிறது. பி.ஜே.பி.க்குப் பக்கபலமாக உள்ள "சாதுக்கள்", பாபர் மசூதியை இடித்தது போதாதென்று, "டில்லி ஜும்மா மசூதியையும் எங்களிடம் ஒப்படையுங்கள்" என்று போர்க் கோஷம் எழுப்புகின்றனர்!" அரசியல் சாசனத்தை மாற்றுவோம்" என்று கொக்கரிக்கின்றனர்! பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் வைக்கப்பட்ட விக்ரகங்களைத் தரிசிக்க அனுமதி "இல்லை"; "உண்டு"; "இல்லை"; "உண்டு" என்று ஒரே குழப்பம்! முஸ்லிம்கள் போட்டி போட்டுக் கொண்டு கூட்டமாகத் தொழுகைக்கு வர, திருப்பி அனுப்பப்பட்டனர்.

இவ்வளவுக்கும் இடையில் மத்திய அமைச்சர்களும் பிரதமரும் இன்னது செய்வதெனப் புரியாமல் கைகளைப் பிசைந்து கொண்டு பரிதாபமாக நிற்கின்றனர். நிலத்தை ஆர்ஜிதம் செய்யவும் இல்லை; மசூதியைத் திரும்பக் கட்டும் பணி ஆரம்பமாகவும் இல்லை. இவர்களுடைய கையாலாகாத்தனம் மதவெறியர்களின் துணிச்சலை அதிகரிக்கவே செய்யும். யோசித்து, 'சரி' என்று முடிவு எடுத்து விட்டால், பிரதமர் அதில் உறுதியாக இருக்க வேண்டும்; சுறுசுறுப்பாக இயங்கவும் வேண்டும்.

நாட்டின் பொருளாதாரம் மிக ஆபத்தான நிலையில் உள்ளது. ஏற்றுமதி 1992ல் பாதாளத்துக்குச் சரிந்து போயிற்று. ஜி.என்.பி. எனப்படும் தேசிய உற்பத்தி படு ஆழத்துக்கு வீழ்ச்சி அடைந்தது. இந்த நேரத்தில் கைகோத்துச் செயல்படாமல் மதப் பூசல்களை வளர்த்துக் கொண்டிருந்தால், அயல்நாட்டு, உள்நாட்டுக் கடன்களில் எல்லாருமே ஒன்றாகச் சேர்ந்து மூழ்கி சர்வ நாசமடைய வேண்டியதுதான்!

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

கலைவிழா:

புதிய பாதைகள்; வித்தியாசப் பார்வைகள்

ஒரு குட்டை மேஜை, கட்டடட் வேலை செய்வோர் உபயோகிக்கும் ஸ்டூல்-கம்-ஏணி இவ்வளவுதான் மேடை ஜோடனை! நாட்டியம் செய்த கலைஞர் (ஆண்) அணிந்திருந்ததோ ஒரு பைஜாமாவும் கையில்லாத பனியனும். நாட்டியத்துக்குக் கை முத்திரைகளையும் முக பாவங்களையும் பயன்படுத்தாமல், வெறும் உடல் அசைவுகளின் பிரயோகத்தால் மட்டுமே ஏராளமான உணர்ச்சிகளையும் உணர்ச்சி வேறுபாடுகளையும் வெளிப்படுத்தினார் அந்தக் கலைஞர். அவர் பெயர் ஆஸ்தாத் டெபூ (Astad Deboo)

ஆஸ்தாத் டெபூ இந்தியர்தான். முறைப்படி கதகளி பயின்றவர். உலகம் புகழும் நவீன நாட்டியக் கலைஞராகப் பிரகாசிப்பவர். கிருஷ்ண கான சபையில் இவர் அளித்த செயல்முறை விளக்கத்தில் நவரஸங்களுள் கருணை, பயங்கரம் ஆகிய இரண்டையும் நவீன நாட்டிய முறையில் எப்படி வெளிப்படுத்த இயலும் என்று காட்டினார். கதையோ சம்பவங்களோ இன்றி, வெறும் உணர்ச்சிகளை மட்டும் வெளிப்படுத்தும் முயற்சியில், ஆஸ்தாத் உடலுடன் மனத்தையும் செலுத்திய போது அவர் உடம்பு மேற்கத்திய பின்னணி இசைக்கு ஏற்ப வளைந்தும், நெளிந்தும், முறுக்கிக் கொண்டும், பிரிந்தும், துள்ளியும் துவண்டும் ஈடுகொடுத்தது.

அசைவுகளால் மட்டுமே உணர்ச்சிகளை வெளிப்படுத்தக்கூடிய அந்த ஆச்சரியத்தை சபையோர் கண்டு கட்டுண்டிருந்த சமயத்தில் பார்வையாளர்களுள் ஒருவர் எழுந்து ''நமது புராண கதையொன்றை உங்கள் நவீன முறையில் சித்திரிக்க முடியுமா?'' என்று சவாலாகக் கேள்வி கேட்க, ஆஸ்தாத் சற்றும் தயங்காமல் செய்து காட்டினார்: அதே மேற்கத்திய இசைப் பின்னணி ஒலிக்க, குழந்தைக் கண்ணனைப் போலி வாத்ஸல்யத்துடன் அழைக்கும் பூதனையாக மாறினார். ஒரு காலை மடக்கி நெஞ்சின் மேல் சாய்த்துக் கொள்ள, அது மார்போடு அணைத்த குழந்தையாக மாறியது. பூதனையின் உயிர் மெள்ள உறிஞ்சப்பட்டு வெளியேறுவதை அவர் பயங்கரம் மேலிடச் செய்து காண்பித்ததைக் கண்ட சோனல் மான்ஸிங், ''ஆஸ்தாத்! நீங்கள் எங்கள் எல்லோரையும் மிஞ்சி விட்டீர்கள்!'' என்று மனம் விட்டுப் புகழ்ந்து பாராட்டினார்.

இவ்வளவு சிறந்த கலைஞருக்கு இதற்கு முன் இந்தியாவின் இரண்டு நகரங்கள்தான் (டெல்லி, பாம்பே) வாய்ப்பு அளித்துள்ளன - அதுவும் நீண்ட போராட்டத்துக்குப் பிறகு என்பதை அறிந்த போது வேதனையாக இருந்தது.

கலை விழாவில் இடம் பெற்ற மற்றொரு வித்தியாசமான நிகழ்ச்சி ஃபெரோஸ் கான் இயக்கத்தில் ஷபானா ஆஸ்மி, ஃபருக்ஷேக் நடித்த 'துமாரி அம்ருதா' என்ற



* ஷபானா ஆஸ்மி



* இளையராஜா



* ரவிசங்கர்



* ஆஸ்தாத் டெபூ

ஹிந்தி நாடகம். Love Letters என்ற அமெரிக்க நாடகத்தின் மறு வடிவமைப்பு இது.

நாயகி அம்ருதா, லக்னௌ செல்வந்தர் குடும்பத்தில் பிறந்த ஹிந்து பெண். அதே நகர முஸ்லிம் ஜாகிர்தாரின் மகன், ஜுல்ஃபிகர் ஹைதர். அம்ருதாவுக்கு எட்டு வயது ஆகும் போது பிறந்தநாள் வாழ்த்துக்கள் பரிமாறிக் கொள்வதில் இவர்களுக்கிடையே ஆரம்பிக்கும் கடிதப் போக்குவரத்து. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் வளர்ந்து, பருவமடைந்து, முதிர்ந்து பழுக்கும் படிப்படியான நிலைகளில் தொடர்ந்து, அந்தந்த நிலைகளுக்குரிய அவர்களின் மாற்றங்களையும் பாதிப்புகளையும் அதி அற்புதமாக வெளிப்படுத்துகிறது. அதுவும் அம்ருதா சராசரிப் பெண் அல்ல - குடும்பம், நண்பர்கள், கணவன் யாருடனும் அவளால் எளிதில் ஒத்துப் போக முடிவதில்லை. எனினும், சராசரி இந்திய ஆண் ஆன ஜுல்ஃபியுடன் அவளால் நட்பு கொள்ள முடிகிறது (காதல் அல்ல, அடிக்கடி சந்தித்துக் கொள்வதற்கு அவசியமில்லாத ஆழமான நட்பு). அம்ருதாவின் அகால மரணம் வரை நட்பு தொடர்கிறது.

மனித ஆன்மாவின் நிரந்தரத் தனிமையையும் தேடலையும் உணர்த்திய இந்த நாடகத்துக்கு மேடை அலங்காரமோ இசையோ கிடையாது. இரண்டு தனித்தனி மேஜைகளின் முன் அமர்ந்து நாயகனும் நாயகியும் அவரவர் கடிதங்களைப் படித்தார்கள். அவ்வளவுதான்! குரலின் உணர்ச்சி வெளிப்பாடுகள் மூலமாகவே ஓர் ஆழமான கதை அங்கே சொல்லப்பட்டது. நாடகத்தின் முடிவில் நடிகர்களின் தொண்டையில் துக்கம் அடைத்துக் கொண்டு கண்களில் நீர் ததும்பிய போது, பார்வையாளர்களின் தொண்டையும் கம்மிப் போய் உணர்ச்சி வசப்படவே செய்தார்கள்.

ஒரு நிமிட மௌனம் அனுஷ்டிப்பைத் தொடர்ந்து கங்கைத் தண்ணீர் தெளிப்பு, (கலைஞர்கள் மீதும் பார்வையாளர்கள் மீதும்!) செம்மங்குடி, டி.வி.ஜி.யின் இளையராஜா புகழ் மாலைக் குவியல்... இவையெல்லாம் தேவைக்கு அதிகம் என ஒதுக்கி விட்டு 'இளையராஜாவின் இன்னொரு பக்கம்' நிகழ்ச்சியைப் பார்த்தால் அவருடைய கர்நாடக இசை மேதைக்கு அது சான்று பகரவே செய்தது. கல்யாண வசந்தத்தில் 'யார் தந்த ராகம்' கல்யாணியில் 'அருள் தவழும் கருணை மொழி' - இந்த இரண்டு கீர்த்தனைகளும் உணர்ச்சிபூர்வமாக அமைந்து நெஞ்சைத் தொட்டன. இசைஞானி வாக்கேயக்காரராகவும் உருவாகக் காரணமானவர்கள் தயாரிப்பாளர்கள்தானாம் - ஆமாம் - இசையமைப்பு இடைவேளைகளின் போது அரட்டைக்கு வரும் இவர்களைத் தவிர்க்கவே ராஜா அந்த நேரத்தில் கிருதிகள் இயற்ற ஆரம்பித்ததாகக் கூறினார்.

''கர்நாடக இசை உடம்பு; மெல்லிசை சட்டை. சட்டையை மாற்றி மாற்றிப் போடலாம் - உடம்பை மாற்ற முடியாது'' என்றார் இளையராஜா!

மிக மிக ஆழமான உணர்ச்சி வெளிப்பாடாக அமைந்தது அகாடமியில் பண்டிட் ரவி சங்கரின் சிதார் கச்சேரி. இவ்வாண்டு அகாடமி இசை விழாவுக்குச் சிகரமான முடிவு என்றே சொல்லலாம். சாருகேசி போன்ற கர்நாடக ராகங்களை ஹிந்துஸ்தானியில் அறிமுகப்படுத்தி ஏற்கெனவே பிரபலப்படுத்தியுள்ளார் ரவிசங்கர். ஆனால் அன்று அவர் சாருகேசியையும் மற்ற ராகங்களையும் வாசித்த போது வேகத்துக்கும் ஜாஜ்வல்யத்துக்கும் அதிக முக்கியத்துவம் தராமல் ஆழத்துக்கும் அழுத்தத்துக்கும் பிராதான்யம் கொடுத்தார். காரணம் எழுபதைக் கடந்து விட்ட அவரது வயதோ?

- கௌரி ராம்நாராயண்,
சாருகேசி





கடிச்சுக்கக் கொஞ்சம்...

நான் தினமும் காலையில் ஒரு முட்டை சாப்பிடுவேன். எங்கள் வீட்டிலும் கோழி கிடையாது. காசு கொடுத்தோ, ஓசியிலோ வாங்குவதும் இல்லை! பின் அது எப்படி சாத்தியம்?

நான் சாப்பிடுவது எங்கள் வீட்டு வாத்து இடும் முட்டை.

✤ மிருகங்களை எந்த மாதத்தில் அதிகமாய்ப் பார்க்கலாம்?

'ஜூ'ன், 'ஜூ'லை மாதங்களில்.

✤ என்ன போட்டால் ஒரு பக்கெட் தண்ணீரின் எடை குறையும்?

பக்கெட்டில் ஒரு ஓட்டை போட்டால்.

✤ எங்கே புதன் கிழமைக்கு முன் வியாழக்கிழமை வரும்?

ஆங்கில அகராதியில்.

✤ Balance Sheet எப்படி சிரிக்கும்?

அசட்(டு) சிரிப்பு (Asset).

✤ பஸ்ஸில் ஏறின இரண்டு நாய்களில், ஒன்று மட்டும் டிக்கெட் வாங்கியது. மற்றொன்று ஏன் வாங்கவில்லை?

அது போலீஸ் நாய்.

✤ பழைய பேப்பர் கடைக்காரர் ஓட்டல் திறந்தால் அங்கே என்ன ஸ்பெஷல் ஐட்டம்?

வேஸ்ட் பேப்பர் ரோஸ்ட்.

✤ தேங்காயை உடைத்தவுடன் ஒரு மூடி இன்னொன்றிடம் என்ன சொல்லும்?

நீ பாதி; நான் பாதி

✤ "ஏன் குச்சியிலே மிளகாயைக் கட்டி, பையனை அடிக்கிறீங்க?"

"எப்படி அடிச்சாலும் அவனுக்கு உறைக்கவே மாட்டேங்குது. அதனால தான்."

✤ "உன் பொண்ணுதான் ஸ்கூல்ல ஃபர்ஸ்ட்டாமே!"

"ஆமாம்! காலைல ஏழுமணிக் கெல்லாம் ஸ்கூலுக்குப் போயிடுவா!"

✤ "அவரை ஏன் மாமேதைன்னு சொல்லறாங்க?"

"அவருக்கு மாமரத்தைப் பற்றி எல்லாம் அத்துப்படி!"

✤ "உங்களுக்கு என்ன துணி வேணும்னாலும் எடுங்க... பாதி பணம் இப்போவும், மீதியை நாலு தவணையிலும் தரலாம்."

"அப்போ, எனக்கு ஒரு கர்சிப் கொடுங்க!"

✤ "உலகில் கருமிகள் மாநாடு நடத்த சிறந்த இடம் எது?"

"கஞ்சன் ஜங்கா!"

✤ "அந்த ஓவியரின் மனைவி, அவரை ஏன் டைவர்ஸ் செய்துட்டாங்க?"

"அவரோட 'சித்ர'வதை தாங்காமல் தான்."

✤ "பி.டி. உஷாவுக்குப் பிடிச்ச போஸ்ட் எது?"

"ஸ்பீடு போஸ்ட்."

✤ "ஆபிசிலிருந்து வரும்போது ஏன் தும்மிகிட்டே வர்றீங்க?"

"வரும் போது 'பொடி' நடையா வந்தேன்; அதனாலதான்."




✤ "நெஞ்சைத் தொடற மாதிரி நல்லதா ஒரு பெயர் சொல்லு - என்னோட குழந்தைக்கு வைக்கணும்."

"பனியன்!"

தொகுப்பு :
- எஸ். சந்திர மௌலி

ஸ்டார் ப்ளஸ் இல்லையா? - இருக்கவே இருக்கு...




ராம பாகவதர் கச்சேரி பற்றி 148 கடிதங்கள் வந்துள்ளன!
அடடே! தபாலில் இரண்டு லெட்டர் மிஸ் ஆயிடுச்சுப் போலிருக்கு!
வர வர நம்ம பிழைப்பு தூர்தர்ஷன் மாதிரி ஆயிடுச்சு. யாருமே கண்டுக்கிறதில்லே!
என்ன, அந்த கோச்சுண்டு போன மருமக இன்னிக்கு வந்துட்டாளாமே?
அங்கே ஸ்டார் டி.வி. இல்லே. போல்ட் அண்ட் பியூட்டி∴புல் பார்க்காட்டா மண்டை வெடிச்சுடுமே!
இந்த தடவை கரண்ட் பில் 200 ரூபாயாம்!
ஒண்ணு விடாம எல்லா மேட்சும் நீதானே பார்த்தே! இப்ப அசாருதீனா வந்து பணம் கட்டுவாரு?!

திரைப்பட விழா: தொடங்கு முன்னரே தகராறு!

வடக்கு வாசல் :

சென்ற தடவை 23 - வது திரைப்பட விழா பெங்களூரில் நடக்க விருந்த போது காவிரிப் பிரச்னை பெரிதாக அமர்க்களப் பட்டது. இதனால் அந்த விழா பெரிதும் பாதிக்கப்பட்டது. இப்போது 24 - வது திரைப்படவிழா தில்லியில் நடைபெற இருக்கும் நேரத்தில் அயோத்தி பிரச்னையால் நாடே அலைக்கழிக்கப் பட்டிருக்கிறது!

ஜனவரி 10 - ஆம் தேதி முதல் நடைபெறும் திரைப்பட விழாவுக்கு ரூ. 1.25 கோடி செலவாகுமாம்.

திரைப்பட விழா நிகழ்ச்சிகள் திரையுலகின் புகழ்வாய்ந்த புரொட்யூசர் - டிஸ்டிரிப்யூட்டராகக் கடந்த ஐம்பது ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் ஜி.பி. சிப்பியை முக்கிய விருந்தினராகக் கொண்டு, துவங்கும். சிப்பி விளக்கேற்றி வைக்க இந்தி நடிகை மாதுரி தீட்சித் உதவுவார்!

இந்த விழாவிற்கான ஆலோசனைக் கமிட்டி டிசம்பர் 16 ஆம் தேதி கூடும் போதே பலவிதமான கருத்து வேற்றுமைகள்! துவக்க தினத்தன்று ஷரோன் பிரபாகருடைய 'பாப் மியூசிக்' நிகழ்ச்சி இருக்க வேண்டும் என்று சிலர் கருத, அதைப் பலர் வன்மையாக எதிர்க்க, இறுதியில் தபலா மேதை ஜாகிர் ஹுசேனின் நிகழ்ச்சி நடக்க வேண்டும் என்று தற்காலிகமாகத் தீர்மானம் செய்யப்பட்டது. ஆலோசனைக் கமிட்டியில் முக்கியப் பங்கேற்றிருக்கும் கோவிந்த் நிஹலானி, அமோல் பலேகர் போன்ற சிலர் இவ்விழா வில் சினிமா சம்பந்த மில்லாத நிகழ்ச்சி களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றனர். அமைச்சர்கள், அதிகாரிகள், பம்பாய் திரையுலக நட்சத்திரங்கள் - இவர்கள் விழாவில் ஆதிக்கம் செலுத்த, திரைப்பட விஷயங்கள் பின்னுக்குத் தள்ளப் படுகின்றன என்பதும் இவர்கள் வாதம்.

இவ்வாண்டு திரைப்பட விழாவில் வெளி நாட்டைச் சேர்ந்த ஒரு சினிமா டைரக்டர், ஒரு பிரொட்யூசர், ஒரு நடிகை, வளர்ந்து வரும் ஓர் இளம் டைரக்டர் - இவர்களைக் கௌரவிக்கும் திட்டம் இருக்கிறது.

'கரசேவை'யின் எதிரொலி :


அயோத்தியா நிகழ்ச்சிகளின் பின் விளைவுகளால் சுற்றுலாத் துறை பாதிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு 1,01,000 பயணிகள் இந்தியாவின் ஐந்து இன்டர்நேஷனல் விமான தளங்களில் வந்து இறங்கினர். இவ்வாண்டோ 89,632 பேர்கள்தான் வந்துள்ளனர். இதனால் நமக்கு அன்னியச் செலாவணி வரவில் ஏராள நஷ்டம். போதாக்குறைக்கு இந்தியன்-ஏர்லைன்ஸ் விமானிகள் வேலை நிறுத்தம் வேறு அயல் நாட்டுப் பயணிகளை அச்சுறுத்துகிறது.

தலைநகரின் தலைகுனிவு!

தில்லியில் மட்டும் 1 லட்சம் குழந்தைகள் வீட்டு வேலைக்காரர்களாகவும், 40,000 குழந்தைகள் கூலிகளாகவும், 30,000 குழந்தைகள் கடைகளில் உதவியாளர்களாகவும், 30,000 சிறுவர்கள் ஓட்டல்களில் சர்வர், க்ளீனர்களாகவும், 20,000 பிள்ளைகள் கார்-ஸ்கூட்டர் மெகானிக்குகளாகவும் வேலை செய்கின்றனர்.

- ராஜீவி நரசிம்மன்


நாராயணா! நாராயணா!
நான் பூமியை வலம் வரலாம் என இருக்கிறேன். இம்முறை யாருடைய தவத்தை கலைக்க வேண்டும் சுவாமி!
நாரதா! இங்கே எங்க தவத்தை கலைக்கிறது இருக்கு கொசுக்கள் தொல்லையால். அதனால் இம்முறை பூமியிலிருந்து டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள் வாங்கி வா.
டார்டாய்ஸ் கொளுத்துங்கள். நித்திரை தவம் கலையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
சாணக்கியரே! தாங்கள் குல்லாய் அணிந்துள்ளதன் மர்மம் என்ன?
அப்பனே! எல்லாம் அந்த பயங்கர கொசுக்கள் செய்த வேலை. என் தலையை மயான பூமியாக நினைத்து தாக்க ஆரம்பித்து விட்டன. ஆகவே தான் குல்லாய் அணிந்தேன்.
டார்டாய்ஸ் கொளுத்துங்கள். கொசுத்தொல்லையிலிருந்து விடுபட பாதுகாப்பான வழியை உபயோகியுங்கள்.
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
TORTOISE
தயாரிப்பாளர் :
பாம்பே கெமிக்கல்ஸ் லிமிடெட்
(முன்னாள் பாம்பே கெமிக்கல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்)
ஃபோர்ட், பம்பாய்-400 023. போன் : 273831.



''ஐயய்யோ... தெரியாதா? கார்ப்பரேஷன் தண்ணியில கழிவுநீர் கலக்குதாம்!''



'இப்படி அருமனு தெரிஞ்சிருந்தா 1950லேயே கிரிக்கெட்டைத் தடை பண்ணியிருப்பேனே...!'



''சாமிகிட்ட என்னடா வேண்டிக்கிட்டே?''
''நானாவது பெரிய கிரிக்கெட்டராகி இந்தியாவோட மானத்தைக் காப்பாத்தணும்னு வேண்டிக்கிட்டேன்!''



ஒரு 'கிளிக்' ஒரு 'களுக்'



''ஜெயலலிதா இங்க சி. எம்.மா இருந்தா நம்ம கூட ஒரு டான்ஸ் ஆடியிருப்பாங்க! ஹூம்... நம்ம சி. எம்.மும் இருக்காரே...!''



''என்டா, சுப்பிரமணியம் சுவாமி ஜெயலலிதா ஆட்சியைக் கலைச்சுடுவாரா?''



''சொன்னா நம்பு, 'நீங்க நல்லா இருக்கணும்' படம் பார்த்துத் திருந்திட்டேன்; இனி சத்தியமாக் குடிக்க மாட்டேன்!''

''ரேஷன்ல ரூபாய்க்கு ரெண்டு கிலோ அரிசி போடற மாதிரி கவலை கண்டுட்டிருக்கா போலிருக்கு!''



மொஹஞ்சதாரோ

ராமேஸ்வரத்திற்குப் போகும் வழியில், ராமர் தமது வானர சேனையுடன் குரோம்பேட்டையில் கொஞ்ச நேரம் தங்கி, சிரம பரிகாரம் செய்து கொண்டு போயிருக்கிறார் என்று அனந்த நாராயண சர்மா சொன்னார். இது எந்த வகையில் சாத்தியம் என்று எனக்குப் புரியவில்லை. ஆனால் நேற்றைய கனவில் மகரிஷி வசிஷ்டரே இதைத் தம்மிடம் சொன்னதாகப் பின்குறிப்பு ஒன்றையும் முன்வைத்தார்.

நாராயண சர்மாவின் கனவில் யார்தான் வருவார்கள் என்று லேசில் சொல்லி விட முடியாது. ராமர் வருவார். ராமன் லம்பாவும் வருவார். ஜெயப்ரதாவும் வருவார். ஜே. கிருஷ்ணமூர்த்தியும் வருவார். கொஞ்சமும் லாஜிக் பற்றி யோசிக்காமல் அவரைச் செவி மடுத்தால் ஒரு நீண்ட, தொடர்பற்ற சர்-ரியலிஸ கதை புலப்படும்.

ஆனால் அவர் கனவுகளை, அவர் எதிரில் கிண்டல் பண்ணி விட முடியாது. மனுஷருக்கு அசாத்திய கோபம் வரும். தம்மை ஏதோவொரு மகத்தான காரணம் பொருட்டே பகவான் படைத்திருக்கிறார் என்றும், அதன் பொருட்டே பற்பல தேவர்களும், முனிபுங்கவர்களும் தம் கனவில் வந்து நுட்பமான சில அரிய விஷயங்களைச் சொல்லிச் செல்வதாகவும் அவர் பெரிதும் நம்பினார்.



அவருக்குள் சில பல பாகங்கள் கழண்டிருக்கின்றன என்றும் மொத்தமாக ஒருமுறை அவரை 'ஓவர்ஹால்' பண்ணினால் சரியாகி விடுவார் என்றும் எங்கள் பிரதேச வாசிகள் கருதினர்.

ஆனால் அனந்த நாராயண சர்மாவின் பார்வை வேறு மாதிரியாக இருந்தது. ஊர் மக்கள் அவரை 'ஒரு மாதிரி' யாக நினைப்பது அவருக்குத் தெரியாது என்று நினைக்க வேண்டாம். அத்தனையும் அவர் அறிவார். ஆயினும் அது பற்றி அவருக்குக் கவலை ஏதுமில்லை. செல்லரித்துப் போன உலக சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால், எந்த மேதையைத்தான் மக்கள், அவர்கள் உயிரோடு இருக்கும் போதே அடையாளம் கண்டிருக்கிறார்கள்? செத்த பின் சிலை வைப்பதே அவர்கள் வழக்கமாகி விட்டது. அவர் விஷயத்தில் மட்டும் சரியாக நடந்து கொள்வார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? சமயங்களில், தாம்தாம் 'கல்கி அவதாரம்' என்று கூட அவருக்குத் தோன்றுவதுண்டு...

நான் மிகுந்த பிரயத்தனத்தின் பேரில் சிரிப்பை அடக்க வேண்டியிருந்தது.

அனந்த நாராயண சர்மா, தொடர்ந்து ராமரின் குரோம்பேட்டை விஜயம் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார்.

''கிஷ்கிந்தை எங்கே இருக்குன்னு நினைக்கண்டிருக்கே? இன்னிக்கு இருக்கறஹைதராபாத்தான் அன்னி தேதிக்கு கிஷ்கிந்தை! அங்கேர்ந்து வந்தவர் - மோஸ்ட் ப்ராபப்ளி - அரக்கோணம், பேசின் பிரிட்ஜ் வழியாத்தான் வந்திருக்கணும். அப்ப ஏது சென்ட்ரலும், பார்க்கும்? பேர்தான் இப்ப புதுசே தவிர ரூட் அதானே! ஓர் உதாரணத்துக்கு இப்படிப் பார்! ஹைதராபாத்ல கிளம்பறார். ஆந்திரா தாண்டறதை விட்டுருவோம். தமிழ்நாட்டுல என்டர் ஆறார். ஃபர்ஸ்ட் எங்க ரெஸ்டிங் பிளேஸ்? ஒரு பேச்சுக்கு அரக்கோணம்னு வெச்சுப்போம். அதை விட்டா சென்ட்ரல். சென்ட்ரல்ல கிளம்பினா - அப்போ, பத்து, பன்னெண்டு மணி பிரயாணத்துல குரோம்பேட்.

கார்த்தால செண்ட்ரல்ல கிளம்பினா சாயங் காலம் குரோம்பேட்! ஸோ, டெஃப னெட்டா இங்க அவர் தங்கியிருந்திருப்ப தற்கு சான்ஸஸ் இருக்கு...''

இந்த சமாசாரத்தை நிச்சயம் மாமியிடம் சொல்லி விடுவதென்று முடிவு செய்தேன். எதையும் ஆரம்பத்திலேயே கவனித்து விடு வதுதான் நல்லது. ஆனால் அனந்த நாராயண சர்மா, ஆரம்ப கட்டத்தில்தான் இருக்கிறாரா என்கிற சந்தேகம் வந்தது. ஆயி னும், மாமி தன் வழக்கப்படி இதன் பொருட்டு, திருப்ப திக்கு ஒரு ரூபாய், மஞ்சள் துணியில் முடிந்து வைத்தால் ஒரு வேளை பலன் கிடைக்க லாம்.

சர்மா சொன்னார் : ''நான் இந்தக் கனவை இப்படியே விட்டுடறதா இல்லை முரளி. இப்படித்தான், நாலஞ்சு வருஷம் முன்னாடி ஒரு கனவு. என் பெண்டாட்டி கிட்டே கூடச் சொன்னேன். சாட்சாத் நாரத மகரிஷியே வந்து சொன்னார். 'பாருடா அனந்து! தமிழ்நாட்டு ஆட்சி பீடத்துல புருஷாளுக்கு இனிமே வாய்ப்புக் குறைவு அப்படீன்னு. என்ன ஆச்சு பார்த்தியா?''

''என் கனவுல ஒருத்தரும் வர மாட் டேங்கறாங்களே, மாமா. அதிகபட்சம் பக்கத்து வீட்டு பாமாதான்!''

''அதான்! அதான்னேன், மத்தவாளுக் கும், எனக்கும் உள்ள வித்தியாசம்! நான், லோகாயத விஷயங் கள்ல அதிக கவனம் செலுத்தறது இல்லே. எப்பவும் பகவான் நாம ஸ்மரணைதான்! விவரம் தெரியாத வயசுல கல்யா ணம் பண்ணி வெச் சுட்டா. அதனாலென்ன, ராமகிருஷ்ணர் இல் லியா? அரவிந்தர் இல் லியா?''

எனக்கு சர்மாவின் பத்து வயதுப் பையன் ஞாபகத்துக்கு வந்தான்.

சர்மாவோ, மேற் கொண்டு ராமரின் குரோம்பேட்டை விஜ யம் சம்பந்தமான தமது அவசர காலப் பணித் திட் டத்தை என்னிடம் விவ ரித்தார்.

''குரோம்பேட்டை என்ன பரப்பளவு? அந்தப் பக்கம் ராதா நகர், புருஷோத்தம நகர், அப் படியே போனா, சங்கர் நகர் எக்ஸ்டென்ஷன் வரைக்கும் போகும். இந்தப் பக்கம் லட்சுமிபுரம், சரஸ்வதிபுரம், நாகப்பா நகர், நாகல்கேணி அவ்வளவு தானே! அஸ்தினாபுரம், குரோம்பேட்ல வருமோ? பின்கோடு வேற, இல்ல?''

எனக்கு லேசாக பயம் வந்தது. ''இன்னி லேர்ந்து கணக்கு வெச்சிக்கோ. சரியா ஒரு மண்டல காலம். மண்டலம்னா தெரி யுமோ? நாப்பத்தெட்டு நாள்! ஒரு இடம் விடாம சுத்தப் போறேன். ஒரு சந்து விடாம தேடப் போறேன்!''

''எதை மாமா?''

''தெரியலை. எனக்கே தெரியலை. ஆனா மனசு கட்டளை போடறது. 'போடா. போய்த் தேடு, கிடைக்கும்' அப்படீன்னு. என்ன கிடைக்கும்னு தெரியலை. ஆனா, என் மனசுல ஒண்ணு தோணிடுத்துன்னா, அது நடந்தே தீரும்!''

எனக்கு, குழப்பமாக இருந்தது. சர்மா எதைத் தேடப் போகிறார்? ராமரின் பாதச் சுவட்டையா? அல்லது பர்ண சாலை யையா? நாகல்கேணியில் எக்கச்சக்க பர்ண சாலைகள். நம்பர் 127-ம் பர்ண சாலையில்,

பா.ராகவன்





திருடன் : அவ்வளவும் தங்க நகை தானே?

பெண் : இல்லை - கவரிங்!

திருடன் : பரவாயில்லை, கழட்டு, என் மாமியாருக்குக் கொடுக்கறேன்!

- எஸ். ரவி

நல்ல, சுத்தமான, ஸ்ட்ராங்கான, இருநீர் மலை சோமபானம் கிடைக்கும். வழிமெங்கும் சரயு நதியாய் செல்சி கழிவுத் தண்ணீர். வானரப் படையின் டுமாகோலி சாகசங்கள். மற்றும் 'மதுவனமாக' சில மர்மப் பிரதேசங்கள்.

மேற்கொண்டு என்னுடன் பேசி, நேரத்தை வீணாக்காமல், சர்மா தம் மகத்தான அகழ்வாராய்ச்சித் திட்டத்தில் ஆழப் புறப்பட்டார்.

மறக்காமல், மறுநாள் காலை அவர், தம் வீட்டில் நடத்தவிருக்கும் பிள்ளையார் பூஜைக்கு வந்து விடச் சொன்னார். மாமி, தயாரிக்கும் கொழுக்கட்டை உண்ணை உண்ணத் திகட்டாது என்கிற காரணத்தால், அவசியம் வந்து விடுவதாகச் சொன்னேன்.

மறுநாள் நான் சர்மா வீட்டுக்குப் போன போது, மாமி அசோகவன சீதை மாதிரி உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேன். சர்மா, மிக உக்கிரமான பூஜையில் இருந்தார். ஊதுவத்தி, சாம்பிராணி நெடியில் பிள்ளையார் திணறிக் கொண்டிருந்தார்.

"மாமி! கொழுக்கட்டை உண்டோல்லியோ?"

"நீயே பாருப்பா! இந்த மனுஷன் ஏன் இப்படி இருக்கார்? பைத்தியக்காரத்தனமாப் பேசறார். ராமர் வந்துட்டுப் போனதைக் கண்டுபிடிக்கணுமாம்! என்ன ஒரு அபத்தம் பாரு! புரிஞ்சிக்கவே மாட்டேங்கறார். கேட்டா, என் கனவு பொய்க்காதுங்கறார்."

"என்ன பண்ணப் போறாராம்?"

"ஒவ்வொரு இடமாப் போவாராம். எந்த இடத்துல இவர் மனசு சொல்றதோ, அங்க தோண்டிப் பாக்கணுமாம்! நடுத் தெருவுல, மனசு சொல்லித்துன்னு குழி வெட்டினா, முனிஸிபாலிட்டிகாரன் உதைக்க மாட்டான்?"

"முனிஸிபாலிட்டிக்காரன் என்ன, முனியாண்டி விலாஸ்காரன் பார்த்தான்னாக் கூட பிடிச்சுக் கொன்னு பாயா போட்டுடுவான்."

"நீயே சொல்லுப்பா. கிணத்துக்குத் தூறு வாரணும். இன்னும் ரெண்டடி தோண்டணும்னு மாசக் கணக்கா கத்திண்டிருக்கேன். அதுக்கு வழியைக் காணோம். தெருத் தெருவா தோண்டப் போறாராம். பகவான் ஏன்தான் என்னை இப்படி சோதிக்கறாரோ தெரியலை."

"உங்களை எங்க சோதிக்கிறார்? உங்க புருஷனைத்தான் சோதிக்கிறார்!"

பூஜை முடிந்து, சர்மா ஒருவித உக்கிர பக்தியுடன் எழுந்து வந்தார். மாமியை ஒரு மாதிரியாகப் பார்த்தார்.

அவள், அவரைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள்? பைத்தியம் என்றா? பேதைப் பெண். அவர் மேதைமையை அவள் உணர மாட்டாள். பொறுத்திருந்து பார்க்கட்டும், கனவு பலிக்கிறதா, இல்லையா என்று. கேவலம், கிணறு தூறு வாராததை, மூன்றாம் மனிதர் முன் பெரிதுபடுத்தியிருக்கிறாள். நல்லது. சர்மா ஒரு முடிவு எடுத்து விட்டார். அவரது தேடல் வேட்டையை, அவர் வீட்டுக் கிணற்றிலேயே ஆரம்பிக்கப் போகிறார். நான் மறக்காமல் கொழுக்கட்டை சாப்பிட்டு விட்டுக் கிளம்பினேன்.

அனந்த நாராயண சர்மாவின் கனவு பற்றிய நினைவுடனே நான் அன்று இரவு படுத்து உறங்கிப் போக, நடுராத்திரி கதவு தட்டப்பட்டது. சபித்தபடி நான் திறக்க - சர்மா!

அந்தக் கணத்தில் அவர் எப்படி இருந்தார் என்று லேசில் சொல்லி விட முடியாது! அவர் கண்ணில் அதிபயங்கர ஜ்வாலை தெரிந்தது. உடம்பு முழுக்கத் தடதடவென துடித்துக் கொண்டிருந்தது. பெரிதும் வியர்த்திருந்தார். என் தலையைப் பார்த்ததுதான் தாமதம்.

"நான் கண்டுபிடிச்சுட்டேன்! நான் கண்டுபிடிச்சுட்டேன்! என் அப்பன் ராமன் வந்து போனதைக் கண்டுபிடிச்சுட்டேன்! பகவானே, நான் என்ன பண்ணுவேன்? இத்தனை சீக்கிரம் கிடைக்கும்னு நான் நினைக்கவே இல்லைடா. கிடைச்சுடுத்து! கிடைச்சுடுத்து!"

அவர் என்ன சொல்ல வருகிறார் என்பது உரைக்கவே எனக்குக் கொஞ்ச நேரம் ஆனது. தூக்கக் கலக்கம்.

"என்னோட வாயேன்!"

"எங்க மாமா?"

"வாயேன்!"

என் அம்மாவின் அர்த்த ஜாம பூஜையின் பின்னணியில் நான் சர்மாவால் கடத்திச் செல்லப்பட்டேன்.

சர்மா, தம் வீட்டில் நுழைந்ததும் சப்தம் போடாமல் என்னைப் பின்பக்கம் கூட்டிப் போனார். கிணற்றுக் கரையில் தாற்காலிக பல்பு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. கிழே,

வாரிக் குவிக்கப்பட்ட சேறும், அதன் ஊடே நெளியும் பல்பு ஒயரும், அந்த அகால வேளையில், எனக்கு ஹிந்தி சினிமா கிளைமாக்ஸ் போலத் தெரிந்தது.

தூறு வாரியிருக்கிறார்!

''மாமா! நீங்களாவேவா இவ்ளோவும்?''

''இல்லே. சாயங்காலம் வரைக்கும் ஆள் வந்தான். அவன் போனப்புறம், ராத்திரி சாப்பிட்டுப் படுத்ததும், தூக்கம் வரல. இறங்கிட்டேன்! கடப்பாறையால நாலு குத்து போட்டிருக்க மாட்டேன். என்னமோ விசித்திரமா தெரிஞ்சது. நிதானமா, ஜாக்கிரதையா, தோண்டி எடுத்துப் பார்த்தா... மயிர்க்கூச்செரியறது பார்! கிடைச்சுடுத்து! என் அப்பன் ராமன் வந்திருக்கான்! குரோம்பேட்டைக்கு வந்திருக்கான்! என் வீட்டுக்கே வந்திருக்கான்! என்ன பாக்கியம்? என்ன பாக்கியம்?''

நான் கூட லேசாக, எளிதில் சொல்லி விட முடியாத ஒரு மாதிரி உணர்ச்சிக்கு ஆளாகிக் கொண்டிருந்தேன். மாமா அப்படி எதைக் கண்டுபிடித்திருப்பார்?

''என்ன மாமா கிடைச்சது?''

''அம்பறாத்தூணி!''

''என்னது?''

''அம்பறாத்தூணி! ராமரோட அம்பறாத்தூணி! கனவு மாதிரி இருக்கில்லே? நிஜம். சத்தியம். தோ பார்!'' கிணற்றை ஒட்டிய, துணிக்கல் பீடத்தில் மூடி வைக்கப்பட்டிருந்த அதைத் திறந்தார்.

''இதுவா?''

''ஆமா! நீ ரவிவர்மா படத்துல பார்த்திருப்பியே!''

நிஜம்தான்!

''ஆனா, இது கொஞ்சம் சின்ன சைஸா இருக்கே?''

''லட்சுமணனோடதா இருக்கலாம். எதுவா இருந்தா என்ன? ராமர் வந்திருக்கார்! என் வீட்டுக்கே வந்திருக்கார்!''

சர்மா தம் வசத்திலேயே இல்லை. எனக்குக் குழப்பமாக இருந்தது. நான் அதைப் பார்த்தேன். தண்ணீரில் ஊறினதாலும், யுகம் கடந்த வயதினாலும் தோற்றத்தில் சற்று மாறுதலிருந்தாலும், புகைப்படங்களில், மற்றும் சம்பூர்ண ராமாயணம் போன்ற திரைப்படங்களில் நான் பார்த்திருந்த அம்பறாத்தூணியைப் போலவே இருந்தது. கடவுளே! சர்மாவின் பெருமை அறியாமல் அவரை எவ்வளவு கிண்டலடித்திருக்கிறேன்?

குளிக்காமல் அதைத் தொடக் கூடாது என்று சர்மா சொல்லி விட்டார். நாளை காலை, பிறிதொரு பூஜை இருப்பதாகவும் நான் அவசியம் வந்து விட வேண்டும் என்றும் சொன்னார். எல்லாமே கனவுதானா என்று பலமுறை கிள்ளிப் பார்த்துக் கொண்டிருந்தேன். இல்லை, வலித்தது.

மாமிக்கு சப்தம் கேட்டிருக்க வேண்டும்.

''என்னது இது, ராக்கூத்து?''

''மாமி! நாமெல்லாம் சர்மா சாரை எவ்வளவு கேவலமா நினைச்சுண்டிருந்தோம். பாருங்கோ! அவர் எப்பேர்ப்பட்ட மகான்! சொன்னதைச் சாதிச்சுட்டார் பாருங்கோ!''

சர்மாவின் பரவசம் என்னையும் தொற்றிக் கொண்டது. ராமர், குரோம்பேட்டைக்கு வந்திருக்கிறார்! எப்பேர்ப்பட்ட கண்டுபிடிப்பு! அதுவும் ஆதாரபூர்வமாக! இதுநாள் வரை சர்மாவை எத்தனை இழித்தும், பழித்தும் பேசியிருக்கிறேன்? ராமர் தான் என்னை மன்னிக்க வேண்டும்!

''பாருங்கோ மாமி! ராமரோட அம்பறாத்தூணி! உங்க வீட்டுக் கிணத்துல தோண்டினதுல கிடைச்சிருக்கு! நாளைக்கே ஆர்க்கியாலஜிக்கல் டிப்பார்ட்மெண்ட்டுக்கு போன்



பண்ணறேம். உங்க புருஷனை சாமான்யமா நினைக்காதீங்கோ! மகான் அவர்!''

மாமி மெல்ல அதன் அருகில் போனாள்.

''தொடாதே! தொடாதே! குளிச்சிட்டு! குளிச்சிட்டு!''

''சும்மாருங்கோ.''

மாமி அதை எடுத்தாள்.

''அட ராமா! போன மாசம் தேங்காய் பறிக்க ஆள் வந்தான். அவன் இடுப்புல கட்டியிருந்த 'பொட்டி'ன்னா இது? மேலேர்ந்து தவறிக் கிணத்துல விழுந்துடுத்து. போனாப் போறதுன்னு போயிட்டான். 'குடலை'ன்னு சொல்லுவா. அதுன்னா இது!''

'ஓவர்ஹால்' பண்ண வேண்டியது சர்மாவை மட்டுமல்ல என்று மாமி நினைத்துக் கொண்டிருக்கக்கூடும்!


ஸ்ஸ்...
எல்லாரோட படத்தையும்
வரைஞ்சுட்டு 'ஜெ'யை மட்டும்
விட்டுட்டியே... அவுங்களு
கேஸ் போட்டுருவாங்கன்னு
பயந்தானே...?

அன்புள்ள அலமு அத்தைக்கு,

அருண், —பப்லுவின் பொங்கல் வாழ்த்துக்கள்! இந்தத் தடவை அம்மா ஒரே ஒரு கரும்புதான் வாங்கியிருக்கா ரொம்ப விலை ஜாஸ்தியாம்.... காக்கா, குருவிக்கெல்லாம் கனுப் பிடி வைக்க கரும்பு மீறுமா தெரியல்லை.

பப்லு சொல்றா - காக்காக்குக் கரும்பு பிடிக்காதாம். ஏன் வேஸ்ட் பண்ணணும்னு கேட்கறா! 'உனக்கு எப்படித் தெரியும்'னு கேட்டேன். 'நீ ஸ்கூலுக்குப் போனப்புறம் படிக்கட்டில உட்கார்ந்து, வாசல்ல வர காக்காய்க் குருவிட்டல்லாம் பேசிக்கிட்டிருப்பேன்ங்கறா.'

எப்படியுமே எங்க வீட்டுக்குக் காக்காய், சிட்டுக் குருவி தவிர வேறு பறவைங்க வர்றதேயில்லை. நீ கேட்ட மாதிரி மூணு வித பறவைங்களைப் பற்றி நான் எப்படி எழுதறது...? யோசிச்சு, ஒரு ஐடியா பண்ணினேன். ராஜேஷ் வீட்டுல பெரிய தோட்டம் இருக்கு, அங்க நிறைய பறவை வரும்னு பப்லுவையும் அங்கே அழைச்சுட்டுப் போனேன்.

அவங்க வீட்டுப் புல்தரையில ஒரு கொண்டைப் பறவை இருந்தது - அரிவாள் மாதிரி வளைஞ்ச மூக்கோட.... இப்படி:  (அதுதான் வுட்பெக்கரோ?) அது கொஞ்சம் தூரம் நடக்கும்; அப்புறம் தரையை மூக்கால் கிளறும்; மறுபடியும் நடக்கும், கிளறும்... இப்படியே செய்துக்கிட்டிருந்தது.

பறவை இரண்டு : இது அவங்க வீட்டுக் கொல்லையில இருந்த கோழி. கெ கே கொக் கொக் க் க் - இப்படி திடீர் திடீர்னு கத்தும். காலால் தரையைப் போட்டுப் பிராண்டும்.

பறவை மூணு : இதை பப்லுதான் கண்டுபிடிச்சா. பச்சை கலரில் இறக்கை; ஊசி மாதிரி வால்; மையிட்ட மாதிரி கண். ஒயர் கம்பியில் உட்கார்ந்திருந்தது. திடீர்னு ஜெட் பிளேன் மாதிரி 'டைவ்' அடிச்சு, பறக்கற பூச்சியை 'லபக்'னு பிடிச்சுது -

போதுமா? மூணு பறவைகள் பத்தி எழுதிட்டேன்.... இப்போ நீதான் அந்த அதிசய விஷயத்தை எழுதணும்.... சீக்கரமா... ப்ளீஸ்.

அன்புள்ள,

அருண்






✱ திரு K.A. சண்முகம்

சமையலறையில் ஒரு சத்தமில்லாத புரட்சி!

சமையலறையில் தனித்தனியாக அடுப்பெரிக்காமல், ஒரே அடுப்பில், அரிசி, சாம்பார், பால் மற்றும் இட்லி இவற்றை மிகக் குறைந்த நேரத்தில் வேகவைக்கவும், கொதிக்க வைக்கவும் முடியுமென்றால், வியப்பாக இருக்கிறதா? ஆனால் அது சாத்தியம் என்பதை, ஈரோடு K.A.S. கம்பெனியாரின் 'நீராவி பாய்லர்' மற்றும் 'குக்கர்' நிரூபிக்கிறது. குறைந்த எரிபொருள் சக்தியைச் செலவழித்து, இந்தக் குக்கர் மூலம், அரிசியை வேகவைத்து உணவாக்கலாம்; பால் காய்ச்சலாம்; சாம்பார் செய்யலாம்; அதோடு 48 முதல் 280 வரை - தேவையான இட்லிகளையும் தயாரித்துக் கொள்ளலாம். 'K.A.S. நீராவி - பாய்லர்-குக்கர்' மூலம், 300 பேரிலிருந்து 3000 பேர்கள் வரை, ஒரே நேரத்தில், சூடாறாமல் சாப்பிடுவதற்கு ஏற்ற உணவு வகைகளைத் தயாரிக்கலாம். இந்த அதிநவீனமான புதுமையான இயந்திரம், திருமணக் கூடங்கள், பெரிய உணவு விடுதிகள், ஹோட்டல்கள் மற்றும் தனியார் கேண்டீன்களுக்கு - ஏற்றபடி உருவாக்கப்பட்டுள்ளது - இதன் சிறப்பாகும்.

இது தவிர, 'K.A.S. கம்பெனியார்', 30 லிட்டர், 20 லிட்டர், 10 லிட்டர் வரை அரைக்கக்கூடிய மாவரைக்கும் இயந்திரங்களையும், சர்வதேசத் தரமுடன், ஹோட்டல்களுக்கும், வீடுகளுக்கும் உதவும்படி தயாரித்து வருகிறார்கள். மேலும் திருமணக்கூடங்களுக்கு ஏற்ற, மிகவும் உறுதிவாய்ந்த - அதிநவீன ஸ்டீல் மடக்கு நாற்காலிகளும், மடக்கும் சாப்பாட்டு மேஜைகளும், குறைந்த விலையில் தயாரித்து அளிக்கிறார்கள்.

கால் நூற்றாண்டுகளுக்கும் மேல், 'K.A.S. திருவனத்தார்' பெயர் பெற்ற மாவரைக்கும் இயந்திரங்களைத் தயாரிப்ப



தோடு, சமையலறையின் பணிசிறக்க, புதிதாக 'பரோட்டா மேக்கர்', 'பொட்டேடோ பீலர்', 'நீராவி இட்லி குக்கர்' மற்றும் சைவ அசைவ உணவு வகைகளைச் சூடாக வைத்திருக்க உதவும் பிரத்யேக 'ஹாட் கேசுகள்', பாலுடன் டிகாக்ஷனையும் தனித்தனியாக சூடாக வைத்திருக்கும் 'கொதி பாத்திரம்' ஸ்பூன், தட்டு, கரண்டி, கிண்ணம், டபரா ஆகியவற்றை சுத்தமாக வைக்கும் 'ஸ்டெரிலைசர்' போன்ற விதவிதமான நவீன சமையலறைச் சாதனைகளைத் தயாரிப்பதன் மூலம், இன்று சமையலறையில் ஒரு சத்தமில்லாத புரட்சியையே செய்து வருகிறார்கள் என்றால், அது நூற்றுக்கு நூறு உண்மை!


மேற்படி இயந்திர சாதனைகளை, அமைதியாகச் செய்து வருவது யாரென்று அறிந்து கொள்ள விரும்புகிறீர்களா? ஈரோடில் இயங்கி வரும் K.A.S. குரூப் கம்பெனிகளின் முக்கியஸ்தர்களான திரு K.A. சண்முகம் மற்றும் அவரது இளவல் திரு K.A. சுப்பிரமணியம் ஆகிய இருவரும் இணைந்து ஆற்றுகின்ற 'இயந்திரப் புரட்சி' இதுவென்று கூறலாம்!

திரு K.A. சண்முகம் ஒரு சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்து, பள்ளிப் படிப்பு முடிந்த பின்னர், ஒரு மில் தொழிலாளியாக இவர் தனது வாழ்வைத் தொடங்கி, தமது அயராத உழைப்பினாலும், ஆற்றலாலும் படிப்படியாக வளர்ந்து, இன்று K.A.S. பெயரில் ஈரோடில் பல நிறுவனங்களின் நிறுவனராக விளங்குகிறார். இதனால் அதிகப்படியான தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்க உதவியுள்ளார். இராமனுக்குக் கிடைத்த இலக்குவன் போல், திரு K.A. சண்முகம் அவர்களின் நீங்காத நிழலாக விளங்கும் திரு K.A. சுப்பிரமணியம், அண்ணன் 8 அடி பாய்ந்தால், தான் 16 அடி பாயும் வல்லமையுடையவர். பல இயந்திரங்களை இந்த "K.A.S. சகோதரர்கள்," சுயமாக வடிவமைத்து, வெற்றிகரமாக வியாபாரம் செய்து வருவது இவர்களது தொழில் அறிவு மற்றும் வணிக ஒற்றுமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும்.



* திரு K.A. சுப்பிரமணியம்

"இயந்திரப் புரட்சிப் படைப்பாளர்" என்று அனைவராலும் ஒருமுகமாகப் பாராட்டப் பெறும் திரு K.A. சண்முகம் அவர்களை அரசு பாராட்டி ரஷியா போன்ற அயல்நாடுகளுக்கு அனுப்பி வைத்தும், வானொலியில் பேட்டி கண்டும், சிறப்பு செய்துள்ளது. K.A.S. நிறுவனர் திரு சண்முகம் கூறுகையில், "எனது எல்லா வெற்றிகளுக்கும் எனது இளவல் K.A. சுப்பிரமணியனின் ஒத்துழைப்பு பின்பலமாக இருந்து வருகிறது. நான் நினைத்ததை, உடன் செயல்படுத்தி, இயந்திரமாக உருவாக்குவதில், எனது சகோதரர் K.A. சுப்பிரமணியத்தின் உழைப்பு - மகத்தானது. அரசாங்க ஒத்துழைப்பு கிடைத்தால், K.A.S. நிறுவனம் மேலும் பல இயந்திரங்களை உருவாக்குவதோடு, பல்லாயிரம் தொழிலா ளர்களுக்கு வேலை வாய்ப்பும் தர இயலும். உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் K.A.S. இயந்திரங்கள் விரும்பி வாங்கப்படுவதால், அன்னியச் செலாவணியையும் KAS பெற்றுத் தரும் எனத் தாம் உறுதியாகக் கூற முடியும்!" என்று அடக்கமாக ஆனால் ஆணித்தரமாகச் சொன்னார் - K.A. சண்முகம்.



வாழ்க KAS நிறுவனங்கள்! வளர்க ஈரோடு தொழில்வளம்!

1. ஆலயத்தில் அம்மங்கை

தீபங்கள் அனைத்தும் வரிசையாக மாடங்களில் ஏற்றப்பட்டிருந்ததாலும், பெரும் தண்டுகளில் செருகப்பட்டு பந்தங்கள் பிரகாசமாக எரிந்ததாலும், அந்த முன்னிரவு நேரத்தில் திருவஹீந்திரபுரத்து தேவநாதப் பெருமாள் ஆலயம் ஜாஜ்வல்யமாக ஜொலித்துக் கொண்டிருந்தது. அந்த ஆலயத்தின் ஒளி, நிலவையும் விஞ்சி பிரகாசித்ததாலும் அதன் பொருட்டு விண்மீன்கள் பரிகசித்ததாலும் வெட்கிய விண்மதி மேகப் போர்வையை இழுத்து தன்னைப் போர்த்திக் கொள்ள முயன்று முயன்று தோற்றுக் கொண்டிருந்தது.



பராந்தக சோழன் காலத்திற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன் பல்லவர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட அந்த ஆலயம் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் காலத்தை ஜீரணித்து விட்டு எவ்வித அழகும் மெருகும் குலையாமல் இருந்ததற்குக் காரணம் இருக்கவே செய்தது. சமய வேறுபாடு இன்றி ராஜராஜ சோழனும், கங்கைகொண்ட ராஜேந்திரனும் ஆலயங்களின் மீது காட்டிய அக்கறை காரணமாகவும் அவர்களுக்கு எந்த வகையிலும் குறையாத அளவில் குலோத்துங்கனும் தான் பட்டமேற்ற பின்பு பெரும்

பொன் விழா நாவல் போட்டியில் ரூ. 10,000 பரிசு பெற்ற நாவல்

விஷ்வக்சேனன்

அக்கறையுடன் ஆலயங்களைப் பராமரித்து வந்ததாலும் இந்த திருவஹீந்திரபுரம் ஆலயமும் மெருகு குலையாமலிருந்தது. போதாக் குறைக்கு ஆலய அதிகாரியும், தலைமைப் பட்டரும் கேட்டுக் கொண்ட போதெல்லாம் அந்த ஆலயத்திற்கு விஜயம் செய்யும் சோழ இளவரசி அம்மங்கை தேவி, தேவநாதப் பெருமாள் மீதிருந்த பேரன்பு காரணமாக மானியங்களை அள்ளி அள்ளி வழங்கியதாலும், அந்த ஆலயம் எவ்விதக் குறைவுமின்றி பெரும் பொலிவுடனே விளங்கியது.

ஆலயத்தின் பின்புறம் செம்மையாகப் பராமரிக்கப்பட்டு பசுமையான செடி கொடிகளுடனும், வண்ண மலர்களுடனும் நிறைந்து கிடந்த நந்தவனம், தன் சுகந்த மணத்தையும் திறந்து கிடந்த திட்டி வாசல் வழியாகப் பலமாக அனுப்பி வைத்துக் கொண்டிருந்ததால் ஆலயம் முழுவதும் அந்த நறுமணம் பரவிக் கிடந்தது. மலர்களின் அந்த நறுமணத்துடன் இசைந்து ஆலயத்தினுள் ஒலித்துக் கொண்டிருந்த ஆழ்வார்


பாண்டியன்
மகள்

களின் பாசுரங்களும் வேத பாராயணங்களும் தெய்வீக மணத்தையும் அங்கு பரப்பின.

மதிலை அடுத்து வரிசையாக நின்று கொண்டிருந்த வீரர்களும், சற்று நேரத்திற்கொருமுறை வாயிலுக்கு வந்து வந்து திரும்பிக் கொண்டிருந்த ஆலய அதிகாரியும் ஆலயத்தின் எதிரில் நீண்டிருந்த வீதியை உற்று உற்று நோக்கியதைப் பார்த்தால், அவர்கள் யாரோ ஒரு முக்கியமான பிரமுகருக்காகக் காத்திருப்பதாகப் பட்டது. விழாக்கள் ஏதுமற்ற சாதாரண நாளாதலால் குறைவாகவே வந்து சென்று கொண்டிருந்த மக்கள், வாயிலில் நின்ற காவலரை அதிகம் கவனித்ததாகத் தெரியவில்லை. அடிக்கடி வருகை தரும் சோழ அரசகுலத்துப் பிரமுகர்களும், அவர்கள் பாதுகாவலுக்கென வீரர்கள் நிற்பதும் அவர்களுக்குப் பழகிப் போயிருந்தன.

ஆனால் அன்று வருபவருக்காக, மதிற்கவரை ஒட்டி சற்றுத் தள்ளி மூடப்பட்டு நின்ற ஆலயத் தேரின் மறைவில் மற்றொருவனும் காத்திருந்தான். உடலை மறைத்துப் போர்த்தியிருந்த போர்வையும் தலையில் சுற்றியிருந்த பெரும் தலைப்பாகையும் இன்னாரென்று தெரியாமல் மறைத்திருக்க, வீசிய காற்றில் அந்தப் போர்வை லேசாக விலகிய போது அவன் இடையில் தெரிந்த உடைவாளையோ, அடுத்திருந்த குறுவாளையோ எவரும் கவனித்ததாகத் தெரியவில்லை. தேரின் மறைவிலேயே நீண்ட நேரமாக மறைந்து நின்றிருந்த அவன், எதிரில் நீண்டு கிடந்த வீதியையும், வாயிலில் நின்றிருந்த காவலரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான். கழுகின் கண்களை விடக் கூர்மையான அவன் கண்கள் ஆலய வாயிலில் வந்து நிலைகொள்ளாது தவித்துக் கொண்டிருந்த ஆலய அதிகாரியையும் கவனித்தன.


ஆலய அதிகாரியின் கரங்களில் ஓலையொன்று சிக்கி அவதிப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த ஓலையை அவர் எடுப்பதும், படிப்பதும் மீண்டும் கச்சையில் செருகுவதுமாக இருந்தார். அவருக்கு இத்தகைய ஓலைகள் அடிக்கடி வருவது வழக்கம்தானென்றாலும் இந்த ஓலையிலிருந்த செய்தி சற்று அசாதாரணமாயிருந்ததால் அவரது முதிர்ந்த முகம் வியர்த்து விறுவிறுத்து அவர் பெரும் அவஸ்தையிலிருப்பதைக் காட்டியது.


கரத்திலிருந்த ஓலையை மீண்டும் படித்தார் அவர். சோழ அரண்மனையின் அந்த முத்திரை ஓலை பேரமைச்சர் நம்பிப் பல்லவராயரிடமிருந்து வந்திருந்தது.

''ஆலய அதிகாரிக்கு, திருவகீந்திரபுரத்திலும் அதைச் சுற்றி உள்ள கிராமங்களிலும் பாண்டியர் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. தேவநாதப் பெருமாளைக் காண இன்று மாலையில் வரும் சோழ இளவரசிக்குத் தக்க பாதுகாப்பை அளிக்க ஏற்பாடு செய்து கொள்ளவும். அவசியமானால் காவற்படைத் தலைவரைக் கலந்து பேசி தக்க ஏற்பாடுகள் செய்து கொள்ளவும் - நம்பிப் பல்லவராயன்''

என்று முடிந்த அந்த ஓலை, அதிகாரியை நிலைகொள்ளாமல் தவிக்க வைத்திருந்தது. அன்றைக்குப் பார்த்து அருகிலிருந்த ஊர் ஒன்றுக்கு உறவினரைக் காணச் சென்றிருந்த அதிகாரி, தாமதமாகத்தான் ஆலயத்திற்கு வந்திருந்தார். எனவே அந்த ஓலையிலிருந்த செய்தியையொட்டி அவர் எந்த நடவடிக்கையும் எடுக்க அவகாசமின்றிப் போய் விட்டது.

சற்று நேரத்தில் வீதியின் மறுமுனையில் அழகிய ரதமொன்று வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அதன் உச்சியில் பறந்த புலிக் கொடியையும் உடன் வேல்களைத் தாங்கி வந்த பத்துப் பதினைந்து வீரர்களையும் கண்ட கோயில் அதிகாரி முதலில் சற்று கவலை அடைந்தாலும் ஆலயத்தில் வழக்கம் போல் நின்றிருந்த வீரர்களும் வந்து கொண்டிருக்கும் வீரர்களுமாகச் சேர்ந்து வீரர்களின் எண்ணிக்கை ஓரளவு அதிகரித்து






விடுவது எண்ணி கொஞ்சம் தெம்பு பெற்றார். ரதம் வந்து நின்றதும், எங்கிருந்தோ ஓடி வந்து சேர்ந்து கொண்ட தலைமைப் பட்டருடன் ரதத்தை நெருங்கினார் அதிகாரி. வரவேற்கத்தான் சென்றார் என்றாலும் இளவரசியைக் கண்ட உவகையாலும் உண்மையிலேயே அவள் மீது கொண்டிருந்த பாசத்தாலும் உணர்ச்சிக் குவியலாகவே தெரிந்தார்.

இளவரசி ரதத்திலிருந்து இறங்குவதைக் கண்டு உணர்ச்சிவசப்பட்ட இன்னொரு மனிதனும் ஆலயத் தேரின் அருகே சற்றுத் தொலைவில் நின்றிருந்தான். அவன் விழிகளில் விவரிக்க இயலாத உணர்ச்சிகள் தோன்றி மறைந்தன. அப்படியே பின்னுக்கு மெல்ல நகர்ந்தவன், மதிலின் நிழலடித்த பகுதியிலேயே சென்று பின்புற இருளில் மறைந்தான்.

தேரிலிருந்து இறங்கி நின்ற சோழ இளவரசி, தனது கரங்களை அதிகாரியையும், பட்டரையும், சுற்றி நின்ற மக்களையும் நோக்கிக் குவித்தாள். படைப்புத் தொழிலில் நீண்ட காலமாக ஈடுபட்டிருந்த பிரம்மன், தான் இதுவரை எத்தனையோ அழகிகளைப் படைத்திருந்தாலும் அந்த அனுபவ அறிவையெல்லாம் திரட்டி அந்த அழகிகள் அனைவரையும் விஞ்சும் விதமாக ஓர் எழிலரசியைப் படைக்க எண்ணியிருந்தால் அந்தப் பேரழகி அம்மங்கைத் தேவியாகத்தான் இருக்க முடியும்! ஆலய அதிகாரியும் தலைமைப் பட்டரும் அப்படித்தான் தீர்மானித்தனர்.

குவிந்து நின்ற அவளது கரங்களைத் தாமரை மொட்டு என்றே நினைத்தார் ஆலய அதிகாரி. இருளைப் பழித்த அவள் கரிய கூந்தலிலிருந்து பிரிந்த இழைக் கொத்துக்கள் சில, சற்று முன்புறமாக வந்து தன்னை விடக் கருமையான அவள் விழிகளைக் கண்டு வெட்கியதாலோ என்னவோ சுருண்டு கொண்டிருந்தன. ஈரம் படர்ந்ததால் சிவந்து பளபளத்த அவள் இதழ்கள் சற்றே பிரிந்த போது தெரிந்த பல் வரிசையுடன் மூக்கின் நுனியில் தொங்கிய நல்முத்தொன்று போட்டியிட முடியாமல் ஒளி மங்கிக் காணப்பட்டது. அவள் உடுத்தியிருந்த பட்டை விட மென்மையான நூல் சேலையில் குறுக்கும் நெடுக்குமாக ஓடிய கோடுகள் அவள் மேனியின் வளைவு நெளிவுகளைப் பாங்காக எடுத்துக்காட்டவே அமைந்தது போல் தோன்றின. செவிகளில் ஜொலித்த ரத்னங்களும், வெண் சங்கு போன்ற கழுத்தில் புரண்ட பெரும் முத்துக்களும் ஒரு அரசையே விலைக்கு வாங்கப் போதுமானவையாக இருந்தன. வங்கியும், கனத்த பொன் வளையல்களும் அணிந்திருந்த அவளது கரங்கள் சேர நாட்டின் யானைத் தந்தங்களைக் கொண்டு கை



''என் மனைவி ரொம்பவும் வித்தியாசமான டைப்...''
''எப்படி...?''
''வீட்ல உள்ள பாத்திரத்தையெல்லாம் போட்டுட்டு, 'பழைய புடவை' வாங்கிட நான்னா பார்த்துக்கோயேன்!''
- ஆர். வசந்தகுமார்

தேர்ந்த சிற்பி செதுக்கியது போல வடிவமைப்புப் பெற்றிருந்தாலும் அதிலே மென்மையையும் பார்வையாலேயே உணர முடிந்தது. செம்பஞ்சுக் குழம்பு பூசப்பட்ட அவள் பாதங்களில் ''ஜல் ஜல்'' என்று ஒலித்த சலங்கைகள், ''இவள் சோழ நாட்டின் இளவரசி; யாரும் நெருங்க முற்பட வேண்டாம்'' என்று எச்சரித்துக் கொண்டிருந்தன.

அதிராஜேந்திர சோழன் இறந்த பின், சோழ அரசுரிமையில் ஏற்பட்ட குழப்பமான நிலையில், அந்தக் குழப்பங்களைத் தீர்க்கவும் உள்நாட்டுப் பூசல்களையும் சிக்கல்களையும் அடியோடு ஒழிக்கவும்,

★ புகழ்மாது விளங்கச் செயமாது
விரும்ப நிலமகளிலவ
மலர்மகள் புணர உரிமையிற் சிறந்த
மணிமுடி சூடி

என்று மெய்கீர்த்திகள் பாடும்படி சோழ அரியணையில் ஏறியவன் கங்கைகொண்ட சோழனின் மகள் வயிற்றுப் பேரன்.

''குலோத்துங்கன்'' என்ற பட்டப் பெயருடன் ஆட்சிக்கு வந்த இவன், வெகு விரைவில் அரசையும் தன்னையும் நிலைப்படுத்திக் கொண்டதோடு, தான் பட்டமேற்குமுன்னரே தொடங்கி விட்டிருந்த போரில் சாளுக்கியர் படையை முறியடிப்பதில் தனது ஆட்சியின் முற்பகுதியைச் செலவிட்டுக் கொண்டிருந்தான்.

''நிழலிலடைந்த திசைகள்,
நெறியிலடைந்தன மறைகள்
கழலிலடைந்தனர் உதியர்,
கடலிலடைந்தனர் செழியர்''

எனக் கலிங்கத்துப் பரணி பின்னாளில் இவன் வீரத்தை இசைக்கவிருந்தது.

குலோத்துங்கன் வடக்கே சென்று போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும், எந்த அரசியல் சிக்கலையும் பக்குவமாகத் தீர்ப்பவர் என்று பெயரெடுத்த சோழப் பேரமைச்சர் நம்பிப் பல்லவராயரும், தந்தை

★ சதாசிவ பண்டாரத்தார்
- முதற்குலோத்துங்க சோழன் பக்கம் 110



ஆசிரியர் : உங்க கதையைப் படிச்சேன். நீங்க ரொம்ப துணிச்சலான எழுத்தாளர்னு பேர் வாங்கியிருப்பது சரியாத்தான் இருக்கு!

எழுத்தாளர் : ஹி... ஹி... ரொம்ப தாங்க்ஸ்!

ஆசிரியர் : போன மாசம்தான் பிரசுரமான ஒரு பிரபல எழுத்தாளரோட கதையைக் காப்பியடிச்சு எழுதியிருக்கீங்களே, அதுக்குச் சொல்றேன்!

– எஸ். முகம்மது யூசுப்

யைப் போலவே பெரு வீரனென்று இளமையிலேயே பெயர் பெற்று விட்ட சோழ இளவல் விக்கிரமச் சோழனும் குலோத்துங்கன் சோழ நாட்டில் இல்லாத குறையே தெரியாத படி செய்திருந்தனர்.

ஆனால் அமைச்சர் நம்பிப் பல்லவராயரின் திடசித்தம் கூட சமீப காலமாகச் சற்றுக் கவலை கொண்டிருந்தது. மதுரைப் பாண்டியன், ஜடாவர்ம பாண்டியனைக் கலகம் செய்து கொன்று விட்ட அவன் தாயாதிகள், அதிராஜேந்திரன் காலத்திலிருந்தே பாண்டிய நாட்டை ஐந்து பகுதிகளாகப் பிரித்து தனித்தனியே ஆண்டு கொண்டிருந்தனர். தற்போது குலோத்துங்கன் வடநாட்டுப் போரிலேயே காலம் கழித்து வருவதைத் தக்க தருணமென எண்ணி இழந்த மதுரையை மீட்கவும், சோழ நாட்டைத் தாக்கவும் அவர்கள் திட்டமிடுவதாக வந்த செய்திகள் அமைச்சரது கவலைக்குக் காரணமாயிருந்தன. அதிலும் அந்த கோட்டாற்றுப் பாண்டியன் மாறவர்மனுக்கு அம்மங்கையைப் பெண் கேட்டும், அவன் மதுரை அரியணையிலிருந்து ஆளவும் ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும் அவன் மாமனும், பாண்டியருள் மூத்தவனுமான மார்த்தாண்ட வர்மன் அனுப்பியிருந்த ஓலையைக் கண்டது முதல் அமைச்சரின் சிந்தை அதிகக் கவலை கொள்ள ஆரம்பித்திருந்தது.

மன்னனும் படைகளின் பெரும் பகுதியும் நாட்டில் இல்லாத அந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொள்ளப் பாண்டியர் ஐவரும் சதி செய்வதாகவும், அதற்கு உதவப் பொன்னமராவதித் தலைவனும் முற்பட்டிருப்பதாகவும் ஜெயந்தன் செய்தியனுப்பியிருந்தான். சோழ அரசின் பிரதான ஒற்றர் படைத் தலைவன் ஜெயந்தன், அதுவரை திரும்பாதது அவர் மனத்தை உறுத்திக் கொண்டிருந்தது. பாண்டியர், சேரலாதனுடைய உதவியையும் நாடியிருப்பதாக வேறு ஜெயந்தன் தெரிவித்திருந்தான்.

இத்தனை கவலைகளையும் சுமந்து கொண்டிருந்த அமைச்சர், பாண்டியரைப் பற்றி எச்சரிக்கவும், காவற்படைகளைத் திரட்ட தான் ஏற்கெனவே கருவூருக்கு அனுப்பி வைத்திருந்த இளவல் விக்கிரமனைப் பற்றி விசாரிக்கவும் எண்ணியவராக மகாராணி புவனமகாதேவியைக் காண அரண்மனையின் அந்தப்புரம் நோக்கி நடந்தார்.

கங்கைகொண்ட சோழபுரத்தின் அந்தப் பெரும் அரண்மனை அவர் நடக்க நடக்க நீண்டு கொண்டேயிருந்தது. பெரும் கூடங்களையும், கட்டுக்களையும் தாண்டி நடந்தவர் வழியில் தென்பட்ட பணிப் பெண்களில் சிலர் புதிதாகத் தென்படுவதைக் கவனித்தவர், இதுபற்றிப் பிறகு தானிகரை விசாரிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டார்.

அவரை எதிர்கொண்ட மகாராணி புவனமகாதேவி அவரை இருக்கையில் அமரச் செய்து அவர் கூறிய விவரங்களுக்குப் பொறுமையுடன் செவிமடுத்தாள். அடிக்கடி அயலூர் ஆலயங்களுக்குச் சென்று வரும் இளவரசியையும் எச்சரிக்கையுடனிருக்கச் சொல்லுமாறு கேட்டுக் கொண்டார் அமைச்சர்.

அவர் வேண்டுகோளைக் கேட்டபடியே அறைக்குள் நுழைந்த அம்மங்கை, முத்துக்களை வெள்ளித் தட்டில் கொட்டுவது போலச் சிரித்தாள்.

அவளைக் கண்டதும் அமைச்சரின் முதிர்ந்த முகம் மேலும் கனிந்தது. குழந்தைகளே இல்லாத அமைச்சர், அம்மங்கையைத் தமது சொந்தப் பேத்தி போலவே பாவித்தார்.

"போங்கள் தாத்தா, அண்ணன் விக்கிரமன் பெயரைக் கேட்டாலே காத தூரம் ஓடுவானே அந்த மாறவர்மன். அவனாவது, எனக்குத் தீங்கு விளைவிக்க எண்ணுவதாவது" என்றாள் அம்மங்கை.

"இல்லையம்மா, இப்போது மாறவர்மனுக்கு அவன் தாயாதிகள் மட்டுமல்ல, சேரலாதனும் உதவப் போவதாகக் கேள்வி" என்றார் அமைச்சர்.

இதைக் கேட்டதும் மகாராணியின் முகத்திலும் சிந்தனை படர ஆரம்பித்தது.

"அமைச்சரே, எதற்கும் உள்ள நிலை பற்றி மன்னருக்கும் தெரிவிக்க ஏற்பாடு செய்து விடுங்கள்" என்றாள் புவனமகாதேவி.

மகாராணியின் உத்தரவுக்குத் தலைவணங்கிய அமைச்சர், மீண்டும் அம்மங்கையிடம்.

"குழந்தாய், இனி நீ எங்கு சென்றாலும் என்னிடம் அறிவித்து விட்டுத்தான் செல்ல வேண்டும்" என்றார்.

மீண்டும் கலகலவென நகைத்த அம்மங்கை,

"அப்படியே ஆகட்டும் தாத்தா. இன்று மாலை தேவநாதப் பெருமானைச் சேவிக்க

திருவனந்தபுரம் செல்லப் போகிறேன்'' என்றபடி அவர் பதிலையும் எதிர்பாராது உட்புறம் திரும்பி துள்ளியபடி ஓடினாள்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை ஒன்று விடாமல் கேட்டபடி பணியில் ஈடு பட்டிருந்த பணிப்பெண்ணொருத்தி வேக மாக எங்கோ கிளம்பிச் சென்றாள்.

ஆலய வாயிலில் மெல்ல மக்கள் கூட்டம் சேரத் தொடங்கியிருந்தது. அம்மங்கைத் தேவியிடம் முறையிட்டுக் கொண்டால் குறைகள் உடனடியாகத் தீர்ந்து விடும் என்ற நம்பிக்கை மக்களுக்கு அதிக மாயிருந்தது.

உள்ளே சன்னதியில் தேவநாதப் பெரு மாள் ரத்தினக் கிரீடமும் ஸ்வர்ண மாலையு மாக, உயர்த்திய அபய ஹஸ்தத்தில் ரத்தி னங்கள் மின்ன, நின்ற திருக்கோலத்தி லிருந்தார். அன்று நடக்க இருந்த நாடகத்தை நினைத்ததாலோ என்னவோ அவரது இதழ்க் கோடியில் புன்னகையொன்றும் மின்னி யது. தவிர, அவர் பிரயோகச் சக்கரமும் மின்னிக் கொண்டிருந்தது.

அர்ச்சனை செய்து கொண்டிருந்த ஆல யத்துப் பட்டருக்கு ஆலய மானியத்தை உயர்த்த வேண்டுகோள் விடுக்கும் சரியான தருணம் எது என்ற யோசனையும் மனத்தில் ஓடிக் கொண்டிருந்தது.

அனைத்தும் முடிந்து தீர்த்தமும், திருத் துழாயும், சடாரியும் பெற்றுக் கொண்டு வெளியே வந்த அம்மங்கைக்கு ஆலயத்தின் வெளிப் பிரகாரத்தின் கோடியிலிருந்த சிற்ப மண்டபத்தின் நினைவு வந்தது. துள்ளல் நிரம்பிய அவளது நடைக்கு ஈடுகொடுக்க இயலாத ஆலய அதிகாரியும், தலைமைப் பட்டரும், தோழிகளும் கூட சற்றுப் பின் தங்கியே வர, முன்னால் சென்ற அம்மங்கை, அந்தச் சிற்ப மண்டபத்தை நோக்கி விரைந்தாள்.

பின்னால் வந்து கொண்டிருந்த ஆலய அதிகாரியின் கண்களில் பின்புறத் திட்டி வாசல் திறந்திருப்பதும், அதன் வழியே வீசிய காற்றில் உட்புற மதிற்சுவரிலிருந்த பந்தங்கள் அணைந்து கிடப்பதும் பட்டன. எளிதில் அணையாத அந்தப் பந்தங்கள் அணைந்து கிடப்பது அவருக்குச் சற்று சந்தேகத்தை அளித்ததால் பட்டரிடம் தாழ்ந்த குரலில், ஆனால் சற்று உஷ்ண மாகவே வினவினார் :

''பட்டரே, ஏன் திட்டிவாசலைப் பூட்ட வில்லை? பந்தங்களும் அணைந்து கிடக் கின்றனவே?''

அதிகாரியின் மனோநிலை புரியாத பட்டரின் பதில் வெகு சாவதானமாகவே வந்தது.

''ராமானுஜத்திடம் பூட்டச் சொன் னேன். மறந்து போயிருப்பான். காற்றில் பந்தங்கள் அணைந்திருக்கும். இதற்காக ஏன் கோபப்படுகிறீர்? இளவரசி சென்றபின் பூட்டி விட்டால் போகிறது.''

அதற்குள் அம்மங்கை சிற்ப மண்ட பத்தினுள் நுழைந்து விட்டிருந்தாள். எரிந்து கொண்டிருந்த ஒரே விளக்கின் ஒளியில் திறந்த வாயுடன் நின்ற யாளிகளிரண்டும் பயங்கரமாகத் தெரிந்தன. அவற்றின் வாயி னுள்ளிருந்த கல் உருண்டைகளை விளை யாட்டாகத் தொட்டுப் பார்த்து வியந்த அம்மங்கை இன்னும் உள்ளே நடந்தாள். மூன்றாவது தூணில் தத்ரூபமாக இருந்த நரசிம்ம மூர்த்தியின் கண்களில் தெரிந்த உக்கிரத்தையும், கரங்களின் கூரிய நகங் களையும் கண்டு தனக்குள் சிரித்துக் கொண் டவள், எதிரிலிருந்த தூணில் இரணியன் உருவம் இருக்கிறதா என்று தேடினாள்.

சற்றுத் தள்ளி அரையிருளில் நின்ற அந்தத் தூணில் இரணியன் உருவிய வாளுட னும் வணங்காத தலையுடனும் காட்சியளித் தான். அவன் கையிலிருந்து நீண்ட அந்த வாள், லேசான விளக்கு ஒளியில் மின்னி யது.

'கல்லில் செதுக்கிய வாள் எப்படி மின்னுகிறது?' என்று வியந்த அம்மங்கை, அதை நெருங்கி தொட்டுப் பார்க்க முயன்ற போது தூணோடு தூணாக உருவிய வாளு டன் அங்கு ஒருவன் நின்று கொண்டிருப் பதைக் கண்டு, வாழ்வில் முதன் முறையாக அச்சத்தின் வசப்பட்டாள். திகைத்து இரண் டடி பின்னால் நடக்க முற்பட்டவளை வலிய இரு கரங்கள் பற்றி நிறுத்தின.

அரையிருளில் அங்கு இன்னும் பலர் நிற்பது புலப்படவே, அலறுவதற்குத் திறந்த அவள் வாய், பின்னாலிருந்து நீண்ட கர மொன்றால் பலமாகப் பொத்தப்பட்டது. அந்த இடத்தில் புகையுடன் திடீரென்று விபரீத மணமொன்றும் பரவியது.

இளவரசியுடைய தோழியின் அலற லைக் கேட்டுப் பதறி ஓடி வந்த அதிகாரியும் பட்டரும் திகைத்தனர். அம்மங்கை அங்கு காணப்படவில்லை. திறந்திருந்த திட்டி வாசல் வழியாகப் பலர் ஓடுவது மங்கிய ஒளி யில் நிழலுருவங்களாகப் புலப்பட்டது!

(தொடரும்)


"பொதுக்குழு கூட்டத்திலே வாழப்பாடி பேர்ல எதுக்குப் புகார் எழுதிப் பொட்டிலே போட்டே?''

"அவரு அ. தி. மு. க. காரர் மாதிரி இப்பல்லாம் நடந்துக்கறதில்லேன்னுதான் புகாரே!''


– ஜ-லி




ஜோக்ஸ் டிப்ஸ்!




''மீண்டு வருக''ன்னே எழுதியிருக்கலாம்!



''என் ஹோட்டல்லே சர்வரா இருந்து 'டிப்ஸ்' வாங்கியே ஒரு ஹோட்டல் ஆரம்பிச்சுட்டான்!''





''ஏம்பா, பில் தொகையைத் தவணை முறையிலே தரலாமா?''

''அது எனக்குத் தெரியாது சார், ஆனா வயத்து வலி தவணையிலே வராதுங்கறது நிச்சயமாத் தெரியும்!''





"என்ன சார் இது... உங்களுக்கா கல்யாணம்...! இங்கே உத்யோகத்துக்கு வந்தது லேர்ந்து வருஷக்கணக்கா இங்கே சாப்பிட்டுக்கிட்டு இருந்தீங்க..."
"கவலைப்படாதீங்க... இனிமே அவளும் நானுமா சேர்ந்து வந்து சாப்பிடுவோம்!"




"ஆறு பேர் எடுப்புச் சாப்பாடு பத்து பேர் சாப்பிடலாம்!"
"ஏன்... சாப்பாடு அவ்வளவு மோசமா?"

"ஆறு மாசமா ரமா பவன் ஜாங்கிரியிலதான் குடியிருக்கேன்!"







"பேர்தான் 'மெது'வடை....! மெதுவா இருக்காது! பேருக் கேற்ப மெதுவாத்தான் வரும். அப்புறமா இங்கே மெது வைக் கெடுத்து முணு முணுக்கப்படாது!"

திங்கட்கிழமை. தார் ரோட்டுக்கு வந்து விட்டனர். வழக்கம் போல சொர்ணம் சற்று இடைவெளி விட்டு மௌனமாய் வந்தாள். வழக்கத்திற்கு விரோதமாய்... ராசாத்தியும் மௌனமாகவே வந்தாள்.

ஒரு சத்தம் கூட எழவில்லை. ஊமைப் பதுமை போல நடந்தனர். சொர்ணத்தைச் சுற்றி எழுந்திருக்கிற சூறாவளி அவர்கள் மனத்துக்குள்ளும்...

ராசாத்திக்குச் சொர்ணத்தைக் காப்பாற்ற ஏதாவது செய்ய வேண்டும் போலிருந்தது. என்ன செய்ய...?

மூவர் மனசிலும் அதே கனம்.

பாவம்... பொம்பளை ஜென்மமெடுத்தாலே, இந்தக் கொடுமைதான். பொம்பளைக்கு என்ன மரியாதை இருக்கு? என்ன அந்தஸ்து இருக்கு? உழைப்பு. உழைப்பு... உழைப்புத்தான். ஆயுள் முழுக்க உழைப்புத்தான். குடும்பத்திலும் உழைப்புத்தான். உழைப்பு மட்டுமா?

வாழ்க்கையே ஒரு கனமைதான். தலையை அழுத்துகிற கனம். கழுத்தை நெரித்து முறிக்கிற கனம். முள்ளுப் புதருக்குள் காயம் பட்டு விழுந்த பறவையைப் போல... நாலா திசைகளிலும் முள்முள்ளாய்க் குத்திக் கிழிக்கிற வாழ்க்கை!

கெங்கம்மா முகத்தைப் பார்த்தாள் ராசாத்தி.

''என்ன ராசாத்தி.... இன்னைக்கு மூச்சே வரல்லியே?''

''என்னத்தைப் பேச? சொர்ணத்தை நெனைச்சா வருத்தமாயிருக்கு.''

''அதானடி... இவளைக் கொண்டு போய்க் கொரங்குகிட்டே குடுக்கணும்கிறாகளே... அதுவும் கெழட்டுக் கொரங்கு!''

''பொண்ணுகிட்டே சம்மதம் கேக்காமலேயே... எல்லாக் காரியமும் செய்றாகளே... ஏன்? அவளுக்கும் ஒரு மனசு இருக்குன்னு ஒத்துக்கிட மாட்டேங்கறா...க?''

''ஒலக அறிவு இல்லாத பொம்பளைகளுக்கு எதையும் உருப்படியா நெனைக்கத் தெரியாதாம். ஒண்ணும் தெரியாத பொட்டைக் கழுதைக சம்மதம்... யாருக்கு வேணும்?''

''இதெல்லாம்... அக்கிரமம்... அநியாயம்!''



25

முந்துனைக



''ஒனக்குத் தெரியுது. எனக்குத் தெரியுது. பெத்தவகளுக்குத் தெரியலியே...''

''நாம.. பாத்துக்கிட்டு கம்மா எப்படி இருக்குறது?''

''நாம சின்னப் பொண்ணுக. என்ன செய்ஞ்சிர முடியும்?''

ராசாத்திக்கு அந்த வார்த்தை சமாதான மாகவில்லை. கவலையோடு தலையை ஆட்டினாள். மனசுக்குள் மறுத்தாள். வாயால் மறுப்பதற்கு வார்த்தை கூட இல்லை. உருப்படியாக யோசிக்கவும் முடியவில்லை...

யோசனையில் ஒரு வெறுமை. ஆனால், மனசுக்குள் ஒரு பிரளயம். சகித்துக் கொள்ள முடியாத ஒரு தன்மை.

திடீரென்று சிலிர்த்தாள். செங்கம்மாவைப் பார்த்தாள்.

''ஏன்... இப்படிச் செய்ஞ்சா என்ன?''

''என்ன?''

''நம்ம தீப்பெட்டியாபீஸ் முதலாளிகிட்டே சொன்னா... என்ன?''

''சொல்லி....''

''அவரு பணக்காரரு. நிறைய செல்வாக்கு உள்ளவரு. போலீஸை வைச்சு... கம்மாவாக்கும் ஒரு அரட்டு போட்டார்னா... நாராயண சாமி அரண்டு போயிர மாட்டாரு? வெங்கடாசலம் வாலைச் சுருட்டிக்கிட மாட்டாரு?''

''சரி... நம்ம முதலாளிகிட்டே யாரு போய்ச் சொல்றது?''

''ஏன்? என்ன பயம்? நம்மளைக் கடிச்சு முழுங்கிருவாரா? நா வேணும்னா... சொல்றேன்...''

''சரி... சொல்லிப் பாரு...''

அந்த மூவரிடமும் ததும்பி நின்றது. மனிதநேய ஈரமா? ஒரே உழைப்புக் களத்தில் வேலை செய்கிற உழைப்புத் தோழமையா?

அருந்ததி ஆபீஸுக்குள் இருந்தான். எதிரில் ஒரு பிரமுகர். ரியல் எஸ்டேட் ஆள். நகரின் ஒதுக்குப்புறத்தில் ஒரு ஆபீஸரின் சிறிய பங்களா விலைக்கு வருகிறது.

முடிந்தாகி விட்டது. இன்று பத்திரம். அதுவும் யாருக்கும் தெரியாமல். விற்றதோ - வாங்கியதோ - யாருக்கும் தெரியக்கூடாது என்று ஒரு நிபந்தனை.

இன்னும் அந்த ஆபீஸர் பங்களாவாகவே தோற்றமளிக்க வேண்டும். 'அந்த வீடு விலைக்கு வேண்டுமா?' என்று தொடர்ந்து கம்மாவாவது நகர முதலாளிகளிடம் விசாரித்துக் கொண்டேயிருக்க வேண்டும். அதற்கும் தனியாக ஒரு கமிஷன் தொகை.

ரிஜிஸ்டர் ஆபீஸில் 'அப்படி, இப்படி' என்று ரொம்ப நேரமாகி விட்டது. ரெண்டு மணிக்கு மேலாகி விட்டது.

மேலாண்மை பொன்னுச்சாமி

ஸ்கூட்டரில் வந்தான். பின்னால், அந்தப் பிரமுகர்.

அருஞ்சுனையைப் பொறுத்தவரை... இந்தப் பங்களா ஒரு வசந்த மாளிகை. ரத்னத்துக்குத் தெரியாமல் வாங்கிப் போடுகிற வசந்த மாளிகை. சொர்ணத்திற்கான ஆகாயம்.

வசந்த மாளிகையில் புதுப்பிக்க வேண்டியது எதுவுமில்லை. புது மெருகு குலையாமல் இருக்கிறது. வசதியான மாளிகை. சிக்கனமான - நல்ல - பங்களா.

சொர்ணம், பார்த்தால்... அசந்து விடுவாள். பசை ஒட்டிப் பிழைக்கிற அவள், இந்த ராஜமாளிகையைப் பார்த்தால் அரண்டு விடுவாள். அலமாரி நிறையப் பட்டுச் சேலைகளை வாங்கி அடுக்கிவிட வேண்டும். கொஞ்சம் தங்க நகைகள் வாங்க வேண்டும்.

ஒரு பெண்ணை வீழ்த்துவதற்கு இது போதும். அதிலும் நன்றாக வாழ்ந்து, ஆடம்பரத்தில் மிதந்து... இழந்து போனவள். இருந்து இழந்த அருமையின் மீது எந்த மனிதருக்கும் தீரா மோகம் இருக்கும். ஆடம்பர மோகம் உள்ள ஒரு இளம் பெண்ணை, நகைகளும், பட்டுச் சேலைகளும், ஒரு பங்களாவும்.... கவலையற்ற நகர வாழ்க்கையும் அசத்தாமல், வேறு எது அசத்தப் போகிறது?

அருஞ்சுனைக்குள் ஆழ்ந்த நம்பிக்கை. சந்தேகமற்ற நம்பிக்கை. சஞ்சலமற்ற நம்பிக்கை. அசுர நம்பிக்கை.

....ஸ்கூட்டரை காம்பவுண்டுக்குள் வேப்ப மரத்தடியில் நிறுத்துகிறான். காலிங் பெல்லை அழுத்துகிறான். கதவைத் திறக்கிற சொர்ணம்.

சிரித்த முகத்தோடு தங்க நிலவாகச் சொர்ணம்.

இந்த அழகுச் சிற்பத்தின் உரிமையாளன் என்பதே எத்தனை கௌரவம்! எத்தனை பெருமிதம்...

இது ஒன்றே போதாதா? இந்தப் பகம் பூங்கொடியின் சொந்தக்காரன் என்ற ஒன்றே... வாழ்வின் பயன் என்றாகி விடுமே...

வாழ்ந்ததற்கான அர்த்தமே பூர்ணப்பட்டு விடுமே...

'என்ன இப்பத்தான் வாரீகளா?'

'ஆமா... சொர்ணம்.'

''அந்த வீட்டுக்குப் போகலியா?''

'போகலே. அங்க என்ன செய்ய?'

'அக்கா.... பாவமில்லியா?'

'இல்லே... அந்த மலட்டு ஜன்மத்தைக் கட்டிக்கிட்டு இத்தனை காலம் மாரடிச்ச நா...ம் பட்ட தும்பம் போதாதா?'

'அப்படிச் சொல்லாதீக... பாவம்ங்க அக்கா... அதுவும் ஒரு மனுச சீவன் இல்லியா? உங்களுக்கு இருக்கிற கௌரவம், செல்வாக்கு எல்லாம்... அந்தச் சீதேவி தந்ததில்லியா?'

சொர்ணத்தைப் பிரமிப்புடன் பார்க்கிறான். ஆனந்த பிரமிப்பு. பெருமித பிரமிப்பு.

'நீ.... கொணத்துலேயும் தங்கமா!' என்று மனசு கிடந்து கூவுகிறது. சொல்லவில்லை.

சொர்ணம்.... சொர்ணம்... நீ... என் புதையல்... பொக்கிஷம். என் அதிசயம். அற்புதம். என்னை தேவ புருஷனாக மாற்றுகிறவள். ககனங்களின் உச்சத்தில் ஏற்றுகிறவள். மகிழ்ச்சியின் சிகரத்தில் உயர்த்துகிறவள். என்னை ஆனந்த சமுத்திரமாக அலைமோத வைக்கிறவள். நீ என் வாழ்வின் பௌர்ணமி. சாஸ்வதமான பௌர்ணமி.

சொர்ணம்.... சொர்ணம்... சொர்ணம்.

தங்கம். உடம்பு தங்கம். முகம் தங்கம். தொடக் கூசுகிற தகதகப்புள்ள தங்கம். தொட்டால் ஒட்டிக் கொள்கிற தங்கம்.

கடைந்து உருட்டிய வெண்ணெயாக மிருதுவான தங்கம். மனசின் சகல அணுக்களிலும் நெய்யாகப் பரவிப் படர்கிற தங்கம்.

பறிகொடுத்து... பறிமுதல் செய்கிற தங்கம்...

மனம் பூராவும் ததும்பி வழிகிற கனவு. பரவச உணர்ச்சி. பங்களா ஒன்று சொந்தமான மகிழ்ச்சியில் உல்லாசமாகச் சிறகடிக்கிற கனவு...

ஸ்கூட்டர் ஆபீஸுக்குள் நுழைகிறது. வாட்ச்மேன் பீடியை எறிந்து விட்டு, அவசரமாக எழுகிறான்.

ரியல் எஸ்டேட் ஆளை ஆபீஸ் ரூமுக்குள் அழைத்துச் சென்றான். ஜூஸ் வாங்கி வரச் செய்தான். சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

அந்த ஆள், உத்தரவு வாங்கிக் கொண்டு புறப்பட்ட அந்த நிமிஷத்தில்...

அந்தக் கதவைத் தள்ளிக் கொண்டு நுழைகிறாள், ஒரு பெண்.

அருஞ்சுனைக்குப் புரியவில்லை. யார் இவள்? நம்ம ஆபீஸில் வேலை பார்க்கிறவள் மாதிரியல்லவா, இருக்கிறது? பார்த்த முகமாக இருக்கிறதே...

அட.... நம்ம சொர்ணத்தோட ஊர்க்காரி.

''யாரும்மா... நீ?''

''முதலாளி, ராசாத்தி.''

''சொர்ணத்தோட ஊரா?''

''ஆமா முதலாளி.''

''என்ன விஷயம்மா?''

''சொர்ணத்துக்கு ஒரு சோதனை வந்திருக்கு.''

''சோதனையா?''

''ஆமாங்க...''

அவள் சொல்லச் சொல்ல... அவனுள் மகிழ்ச்சிப் பிரவாகம். எல்லாம் கைகூடி வருகிற பொருத்தம்.


பறவைக்கு வலை வீச வேண்டிய நேரம் வந்து விட்டது.

(தொடரும்)






சிரிப்போ கிராஃபிக்ஸ்!



"என்னய்யா! C-36 கபாசிட்டர் பழுதாகிவிட்டது. இதுகூடத் தெரியாமல் என்ன இஞ்சினியர் நீ?"



கணவன் + மனைவி சேர்ந்து : தினமும் சண்டைதான். ரெண்டு பேர் ஜாதகத்தையும் கணிச்சுப் பொருத்தம் பார்த்த இந்தக் கம்ப்யூட்டரை உதைக்கணும்.

கம்ப்யூட்டர் : உதைக்கணும்கறதுல ஒன்று பட்டுப் போறீங்க, பார்த்தீங்களா?



சேல்ஸ்மேன் : சார் இது எங்கள் புதிய பி. சி.

மானேஜர் : அப்புறம் வா! நான் ரொம்ப பிசி!



"அன்பே! தப்பாய் எடுத்துக் கொள்ளாதே! சும்மா, ஆபீஸ் விஷயமாய் அந்தப் பெண் ரோபோவுடன் பேசிக் கொண்டிருந்தேன். அவ்வளவுதான்!"





"சாதாரண வைரஸ் ஜுரம்தான். வைரஸ் இருக்கும் கம்ப்யூட்டரில் வேலை செய்ய றதைக் கொஞ்சம் குறைச்சுக்குங்க..."


தொகுப்பு : எஸ். இந்திரா
கார்ட்டூன் : அசோக்

படங்கள் : கோபிநாத்




சி எப்படி?

பாலம்



●● நான் ஆசிரியராக இருந்து 1955 முதல் 1962 வரை நடத்தி வந்த ''சரஸ்வதி'' மாத இதழின் பிரதிகள் என் கைவசம் இல்லை. சேர்த்து வைத்திருக்கும் வாசக அன்பர்கள் தொடர்பு கொள்ளக் கோருகிறேன்.

- வ. விஜயபாஸ்கரன்,
134, சுப்பிரமணியம் சாலை,
ஆர். எஸ். புரம்,
கோயமுத்தூர் - 641 002.

●● எம். ஏ. இலக்கியம் தமிழ் முதலாண்டு தொல்காப்பியம், நன்னூல் சொல் + மொழி இயல் இலக்கணம் (Comparitive grammar) இந்த நோட்ஸ் இருந்தால் கொடுத்து உதவினால் படித்து விட்டுத் திருப்பித் தந்து விடுகிறேன். விலைக்கு வாங்கவும் தயார்.

- எஸ். கே. பானுமதி,
த/பெ சண்முகவேல்,
36, முனியப்ப செட்டி தெரு,
பெரம்பூர், சென்னை - 11.

●● ஆண்டுக்கு ஐந்து பழ மரங்கள் நட வேண்டும் என்ற கொள்கையுடைய எங்களது வளர் இயக்கத்தில் சேர எழுச்சியுள்ள இளைஞர்கள் தேவை.

- என். எம். பெருமாள்,
பிளாக் I/5/3, மின்டோ ரோடு,
புதுதில்லி - 2.

●● வால்வு ரேடியோக்களுக்குத் தேவையான BEL வால்வுகள் மற்றும் ஃபிலிப்ஸ் டிரான்ஸ்ஃபார்மர்கள் என்னிடம் உள்ளன. தேவைக்குத் தொடர்பு கொள்ளவும்.

- கே. இராமன்,
மரத்துறை (அஞ்சல்),
திருமேனியார் கோவில் (வழி),
தஞ்சை மாவட்டம் - 609 204.

●● ஹிந்தியிலுள்ள ஆன்மீக நூல்களைத் தமிழாக்கம் செய்ய சாஸ்திரப் புலமையுள்ள வித்வான்கள் தேவை. உரிய சன்மானம் தரப்படும்.

- ஆர். தேவராஜன்,
கோபால் சேவா டிரஸ்ட்,
82, கிருஷ்ணா டாக்கீஸ் ரோடு,
ஈரோடு - 638 003.

●● பி.எஸ்ஸி., பட்டதாரியாகிய நான் புகைப்படக் கலையைக் கற்றுக் கொள்ள ஆர்வமாக உள்ளேன். குறிப்புக்கள், ஆலோசனைகள் அனுப்பி வைத்தால் மகிழ்வேன்.

- கே. துரைராஜ்,
ரெகுராம சமுத்திரம்,
சிரமேல் குடி (போஸ்டு),
தஞ்சை (மாவ) 614 903.

●● 1935ம் ஆண்டு வெளியான நெல்லை எஸ். சங்கரலிங்க முதலியார் தொகுப்பான ஜூபிலி தமிழ் பேரகராதி மற்றும் சிதம்பரம் கோ. சித. மடாலயத்தின் வெளியீடான ஸ்ரீ பகவத் கீதை மூலமும் உரையும் ஆகிய இரு புத்தகங்கள் உள்ளன. தேவைப்படுவோர் எழுதவும்.

- எம். ஏ. தேவர்,
1, கிராமத் தெரு,
(மேகலா திரை அரங்கு எதிரே)
சென்னை - 600 007.

●● ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் அருள்வாக்குப்படி சகல ஜாதிக் குழந்தைகளுக்கும் சம்ஸ்கிருதம் பேசவும் படிக்கவும் கற்றுக் கொடுக்கத் தயாராக உள்ளோம். விருப்பமுள்ளவர் விண்ணப்பிக்கலாம்.

- எஸ். வேங்கடேசுவரன்,
செயலாளர்,
விச்வ சம்ஸ்கிருத பிரதிஷ்டானம்,
26 A, சந்யா சாலை,
வித்யா நகர், சேலம் - 636 003.

●● தினமலர் - கதை மலரின் முதல் பிரதி (15.1.92) தேவை. அனுப்பி வைப்போருக்குச் சன்மானம் அளிக்கப்படும்.

- தில்லை நடராஜ்,
34, சாஸ்திரி சாலை,
எல்.ஐ.சி. காலனி,
செல்வபுரம், கோவை - 641 026.

●● எனக்கும் என் மனைவிக்கும் முதியோர் இல்லம் நடத்த ஆசை. எங்களுக்கு இரண்டு பிளாட்கள் உள்ளன. எங்களுக்குப் பயிற்சி அளிக்க இப்போது முதியோர் இல்லங்கள் நடத்தி வருவோர் முன்வந்தால் ஏற்கக் காத்திருக்கிறோம்.

- எஸ். சர்வேசுவர குப்தா,
39 A/2 மூன்றாவது பிள்ளையார் கோவில் தெரு,
சேலம் - 636 001.

(பாலம் பகுதி மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பு ஏற்க இயலாது.)

சிவகாமியின் சபதம்

நாற்பத்தொன்பதாம் அத்தியாயம்

பட்டணப் பிரவேசம்

கமலி முன் தடவையைக் காட்டிலும் இந்தத் தடவை தங்கை சிவகாமியிடம் அதிக அன்பும் ஆதரவும் காட்டினாள்.

முன் தடவை அவள் கண்ணனுடைய அகால மரணத்தைப் பற்றி அப்போதுதான் கேள்விப்பட்டபடியால் அழுகையும் அலறலும் ஆத்திரமும் ஆங்காரமுமாயிருந்தாள். அடிக்கடி சிவகாமியைப் பார்த்து, "அடி பாதகி! உன்னையும் கெடுத்துக் கொண்டு என்னையும் கெடுத்து விட்டாயே? நீ முன்னமே செத்திருக்கக் கூடாதா!" என்று திட்டினாள். சிவகாமி பொறுமையாயிருந்ததுடன் தானும் அவளோடு சேர்ந்து அழுது தன்னைத் தானே நொந்து கொண்டும் திட்டிக் கொண்டும் கமலிக்கு ஒருவாறு ஆறுதல் அளித்தாள்.

இந்த முறை கமலி சிறிது ஆறுதலும் அமைதியும் அடைந்திருந்தாள். வாதாபியில் சிவகாமியின் வாழ்க்கையைப் பற்றி விவரமாகச் சொல்லும்படி வற்புறுத்தினாள். கண்ணன் மரணமடைந்த வரலாற்றைப் பற்றியும் விவரமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டாள். கண்ணனுடைய உயர்ந்த குணங்களைப் பற்றியும் கமலியிடம் அவன் கொண்டிருந்த அளவில்லாத காதலைப் பற்றியும் மூச்சு விடாமல் அந்தத் தோழிகள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு சமயம், வெளியிலே போயிருந்த சின்னக் கண்ணன் "அம்மா! அம்மா!" என்று கூவிக் கொண்டு உள்ளே ஓடி வந்தான். கமலி அவனை வாரி அணைத்துக் கொண்டு "தங்காய்! இனிமேல் உனக்கும் எனக்கும் இந்தப் பிள்ளைதான் கதி. இவன் வளர்ந்து பெரியவனாகித்தான் நம் இருவரையும் காப்பாற்ற வேண்டும்" என்றாள்.

அதைக் கேட்டதும் சிவகாமிக்குச் 'சுரீர்' என்றது. கமலி அக்கா ஏன் இப்படிச் சொல்கிறாள்! அவள் கணவனை இழந்த காரணத்தினால் தானும் அவளைப் போலவே ஆகி விட வேண்டுமா? மாமல்லரையும் அவருடைய இன்பக் காதலையும் தான் வெறுத்து விட வேண்டுமா?

இவ்விதம் சிவகாமி எண்ணமிட்டுக் கொண்டிருந்த போது வீதியில் வாத்திய முழக்கங்களும், ஜயகோஷங்களும், ஜனங்களின் கோலாகல த்வனிகளும் கலந்த ஆரவாரம் கேட்டது.

ஏற்கெனவே ஆயனர் மூலமாகச் சக்கரவர்த்தியின் பட்டணப் பிரவேச ஊர்வலத்தைப் பற்றிச் சிவகாமி தெரிந்து கொண்டிருந்தாள். அதைப் பார்க்க வேண்டுமென்று அவளுக்கு மிக்க ஆவலாயிருந்தது.

"அக்கா! நாமும் பலகணியருகில் போய் ஊர்வலத்தைப் பார்க்கலாம்!" என்றாள்.

"உனக்கும் எனக்கும் பட்டணப் பிரவேசமும் ஊர்வலமும் என்ன வேண்டிக் கிடக்கிறது? பேசாமலிரு!" என்றாள் கமலி.

கண்ணனை இழந்ததனால் மனம் கசந்து போய்க் கமலி அப்படிப் பேசுகிறாள் என்று சிவகாமி நினைத்தாள்.

அமரர் கல்கி

"என்ன அப்படிச் சொல்கிறாய், அக்கா! சக்கரவர்த்தி என்னுடைய சபதத்தை நிறைவேற்றுவதற்காக எத்தனை பாடுபட்டார்? அவருடைய விஜயோற்சவத்தை நகரத்து மக்கள் எல்லாம் கொண்டாடும் போது நாம் மட்டும்...."

கமலி குறுக்கிட்டு, "நீயுமாச்சு, உன் சபதமும் ஆச்சு, உன் சக்கரவர்த்தியும் ஆச்சு! அடி பைத்தியமே! உனக்கு மானம், ரோஷம் ஒன்றுமில்லையா? வாதாபியிலேயே எல்லாவற்றையும் பறிகொடுத்து விட்டு வந்தாயா?" என்றாள்.

கமலி இப்படிப் பேசியது சிவகாமிக்குச் சிறிதும் விளங்காமல் மேலும் மனக் குழப்பத்தை அதிகமாக்கிற்று.

கமலி மேலும், "அடி தங்காய்! நீயும் மாமல்லரும் கல்யாணம் செய்து கொண்டு தங்க ரதத்தில் நவரத்தினக் குடையின் கீழ் உட்கார்ந்து ஊர்வலம் வர, உன் அண்ணன் ரதம் ஓட்டும் காட்சியைக் கண்ணால் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டேனே! அது நிராசையாகிப் போய் விட்டதே" என்று கண்ணில் நீர் ததும்பக் கூறிய போது, அவள் கண்ணன் மரணத்தை எண்ணித்தான் இப்படி மனங்கசந்து பேசுகிறாள் என்று சிவகாமி மௌனமாயிருந்தாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் ஊர்வலம் அருகிலே வந்து விட்டதாகத் தோன்றியதும் சிவகாமி தனது ஆவலை அடக்க முடியாதவளாய் எழுந்து பலகணியை நோக்கிச் சென்றாள். கமலியும் அவளைத் தொடர்ந்து போனாள்.

வீதி வழியே வந்த சக்கரவர்த்தியின் பட்டணப் பிரவேச ஊர்வலம் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது.

ஊர்வலத்தின் முன்னணியில் ஜய பேரிகைகளை முதுகில் சுமந்து சென்ற பிரும்மாண்டமான ரிஷபங்களும், அலங்கார யானைகளும் குதிரைகளும், ஒட்டகங்களும் அவற்றின் பின்னால் பலவகை வாத்திய கோஷ்டிகளும், கொடிகளும், விருதுகளைத் தாங்கிய வீரர்களும் போவதற்கு ஒரு நாழிகைக்கு மேல் ஆயிற்று.

பிறகு அரபு நாட்டிலேயிருந்து வந்த அழகிய வெண்புரவிகள் பூட்டிய சக்கரவர்த்தியின் தங்கரதம் காணப்பட்டதும் வீதியின் இருபுறத்து மாளிகை மாடங்களிலிருந்தும் குடிமக்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். மங்களகரமான மஞ்சள் அரிசியும் நெல்லும் பொரியும் தூவினார்கள். இனிய மணம் பொருந்திய சந்தனக் குழம்பை வாரித் தெளித்தார்கள். "வாதாபி கொண்ட மாமல்ல சக்கரவர்த்தி வாழ்க! வீராதி வீரர் நரசிம்ம பல்லவேந்திரர் வாழ்க!" என்பன போன்ற எத்தனையோ விதவிதமான ஜயகோஷங்கள் வானத்தை எட்டும்படி பதினாயிரம் குரல்களிலே எழுந்தன.

சக்கரவர்த்தியின் ரதம் அருகில் வந்துவிட்டது என்று அறிந்ததும் சிவகாமியின் இருதயம் வேகமாக அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. தங்க ரதத்திலே பூட்டிய அழகிய வெண் புரவிகளையே சற்று நேரம் அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு மிக்க பிரயத்தனத்துடன் கண்களைத் திருப்பி அந்தத் தங்க ரதத்திலே அமைந்திருந்த ரத்தின சிம்மாசனத்தை நோக்கினாள்.

ஆகா! இது என்ன? சக்கரவர்த்திக்கு அருகிலே அவருடன் சரியாசனத்திலே வீற்றிருக்கும் அந்தப் பெண்ணரசி யார்?

சிவகாமியின் தலை சுழன்றது! பலகணி வழியாக வீதியிலே தெரிந்த வீடுகள் எல்லாம் சுழன்றன; தங்க ரதம் சுழன்றது; அதற்கு முன்னும் பின்னும் வந்த யானை, குதிரை, பரிவாரங்கள் எல்லாம் சுழன்றன; கூட்டமாக வந்த ஜனங்களும் சுழன்றார்கள்.

சிவகாமி சுவரைக் கையினால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு மறுபடியும் நன்றாகப் பார்த்தாள். உண்மைதான்; அவளுடைய கண் அவளை ஏமாற்றவில்லை.

மாமல்லருக்குப் பக்கத்திலே ஒரு பெண்ணரசிதான் உட்கார்ந்திருக்கிறாள். ஆஹா! எத்தகைய அழகி அவள்! முகத்திலேதான் என்ன களை! ரதியோ, இந்திராணியோ, அல்லது மகாலக்ஷ்மியேதானோ என்றல்லவா தோன்றுகிறது!

"அவள் யார், அக்கா? சக்கரவர்த்தியின் பக்கத்திலே உட்கார்ந்திருக்கிறவள்?" என்ற வார்த்தைகள் சிவகாமியின் அடித் தொண்டையிலிருந்து கம்பிய குரலில் வெளி வந்தன.

"இது என்ன கேள்வி? அவள்தான் பாண்டியகுமாரி; மாமல்லரின் பட்டமகிஷி. வேறு யார் அவர் பக்கத்திலே உட்காருவார்கள்?" என்றாள் கமலி.

"அக்கா! அவருக்குக் கலியாணம் ஆகிவிட்டதா? எப்போது?" என்ற சிவகாமியின் கேள்வியில் எல்லையில்லாத ஆச்சரியமும் ஆசாபங்கமும் மனக் குழப்பமும் கலந்து தொனித்தன.

"அடி பாவி! உனக்குத் தெரியாதா என்ன? யாரும் சொல்லவில்லையா? உனக்கு எல்லாம் தெரியும் என்றல்லவா நினைத்தேன்! மாமல்லருக்குக் கலியாணம் ஆகி வருஷம் ஒன்பது ஆயிற்றே? அந்தச் சதிகார மகேந்திர பல்லவன், மகனுக்குக் கலியாணத்தைப் பண்ணி விட்டுத்தானே கண்ணை மூடினான்!" என்றாள் கமலி.

"அவரை ஏன் திட்டுகிறாய், கமலி! நல்லதைத்தான் செய்தார் மகேந்திரர். இப்போதுதான் எனக்கு உண்மை தெரிகிறது; என்னுடைய அறிவீனமும் தெரிகிறது!"



என்று சிவகாமியின் உதடுகள் முணுமுணுத்தன.

''என்னடி உளறுகிறாய்? மகேந்திரர் நல்லதைச் செய்தாரா? குடிகெடுக்க அஞ்சாத வஞ்சகராயிற்றே அவர்?'' என்றாள் கமலி.

சிறிது நேரம் வரையில் சிவகாமி கண்ணைக் கொட்டாமல் இராஜ தம்பதிகளைப் பார்த்தவண்ணம் நின்றாள்.

தங்க ரதம் மேலே சென்றது. அடுத்தாற்போல் பட்டத்து யானை வந்தது. அதன் மேல் அமர்ந்திருந்த குழந்தைகளைப் பார்த்து ''இவர்கள் யார்?'' என்றாள் சிவகாமி.

''வேறு யார்? பல்லவ குலம் தழைக்கப் பிறந்த பாக்கியசாலிகள்தான். மாமல்லருக்கும் பாண்டிய குமாரிக்கும் பிறந்த குழந்தைகள். மகனுடைய பெயர் மகேந்திரன்; மகளின் பெயர் குந்தவி. இதெல்லாம் உனக்குத் தெரியவே தெரியாதா?''

சிவகாமி மேலே ஒன்றும் பேசவில்லை. அவளுடைய உள்ளம் ''ஆகா! அப்படியானால் பல்லவ குலத்தின் சந்ததியைப் பற்றிக் கவலையில்லை!'' என்று எண்ணியது.

அதே சமயத்தில் அவளுடைய இருதயத்தில் ஏதோ ஒரு நரம்பு 'படார்' என்று அறுபட்டது.

பட்டத்து யானைக்குப் பின்னால் இன்னொரு யானை வந்தது. அதன் அம்பாரியில் புவனமகாதேவியும் மங்கையர்க்கரசியும் இருந்தார்கள்.

''இராஜ மாதாவுக்கு அருகில் உள்ள பெண்ணைப் பார்த்தாயா, சிவகாமி! அவளுக்கு அடித்த குருட்டு யோகத்தை என்னவென்று சொல்லட்டும்? பழைய சோழ குலத்தைச் சேர்ந்தவளாம். மங்கையர்க்கரசி என்று பெயராம். நெடுமாற பாண்டியனை இந்த அதிருஷ்டக்காரி மணந்து கொள்ளப் போகிறாளாம். எப்படியும் இராஜ குலத்திலே பிறந்தால் அந்த மாதிரி வேறேதான்!'' என்று சொல்லி வந்த கமலி, சிவகாமி அங்கேயிருந்து நகர்ந்து செல்வதைப் பார்த்து, ''அடியே! ஏன் போகிறாய்?'' என்றாள்.

உண்மையில் கமலி கடைசியாகச் சொன்னது ஒன்றும் சிவகாமியின் காதில் விழவில்லை. பட்டத்து யானை மீதிருந்த குழந்தைகளையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, அந்த யானை நகர்ந்ததும் பலகணியின் பக்கத்திலிருந்து புறப்பட்டுச் சென்றாள். வீட்டு முற்றத்தின் ஓரத்தில் உட்கார்ந்து வெகுநேரம் வரை சித்தப்பிரமை கொண்டவள் போலச் சிலையாகச் சமைந்திருந்தாள்.

ஊர்வலம் முழுதும் போன பிறகு கமலி அவளிடம் வந்து சேர்ந்தாள். ''அடி பெண்ணே, ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறாய்? ஒரு குரல் அழுது தொலையேன்! சக்கரவர்த்தியைக் காதலித்ததனால் என்ன? அழுவதற்குக் கூடவா உனக்குப் பாத்தியத்தை இல்லாமற் போயிற்று?'' என்று கேட்டாள்.

சிவகாமிக்கு எங்கிருந்தோ திடீரென்று அழுகை வந்தது! வறண்டிருந்த கண்களில் கண்ணீர் வெள்ளமாகப் பெருகத் தொடங்கிற்று.

கமலியின் மடியில் குப்புறப்படுத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள். ஒரு நாழிகை நேரம் அழுத பிறகு விம்மல் நின்றது. கண்ணீரும் ஓய்ந்தது.

சிவகாமியின் இருதயத்திலிருந்து ஒரு பெரிய பாரம் இறங்கி விட்டது போலத் தோன்றியது. இதற்கு முன் அவள் என்றும் அறியாத அமைதியும் சாந்தமும் உள்ளத்திலே குடிகொண்டன.

ஐம்பதாம் அத்தியாயம்

தலைவன் தாள்

அன்று மாலை ஆயனரிடம் சிவகாமி தனியாக வந்து, ''அப்பா நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று சொன்னீர்கள் அல்லவா? அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்!'' என்றாள்.

ஆயனருக்கு அகம் நிறைந்த மகிழ்ச்சியினால் மூச்சு நின்று விடும் போலிருந்தது. சிவகாமியை உற்று நோக்கி அவளுடைய முக மலர்ச்சியையும் பார்த்து விட்டு, ''அதற்கென்ன, குழந்தாய்! கூடிய விரைவில் உனக்குத் தக்க நாயகனைத் தீர்மானித்து, மணம் செய்து வைக்கிறேன்!'' என்றார்.

அப்பா! எனக்கு நாயகனைத் தேர்ந்தெடுக்கும் சிரமத்தைத் தங்களுக்கு நான் வைக்கவில்லை. ஏகாம்பரநாதரையே என் பதியாக ஏற்றுக் கொண்டேன்!'' என்றாள் சிவகாமி.

தம் அருமை மகளுக்குச் சித்தப்பிரமை முற்றி விட்டதோ என்று ஆயனர் ஐயமடைந்தார். இன்னும் சிறிது பேசி அவள் தெளிந்த அறிவுடன் இருக்கிறாள் என்பதைக் கண்டார். இது சித்தப்பிரமை அல்ல -

பக்தியின் முதிர்ச்சிதான் என்று நிச்சயமடைந்தார்.

அச் சமயம் திருநாவுக்கரசர் பெருமான் அருகில் உள்ள ஒரு சிவஸ்தலத்திலேதான் இருக்கிறார் என்று அறிந்து அவரிடம் சென்று ஆயனர் யோசனை கேட்டார்.

வாகீசர் எல்லாவற்றையும் கேட்ட பின்னர், "ஆயனரே! உமது குமாரியின் விஷயத்தில் என் மனத்தில் தோன்றியது உண்மையாய்ப் போய் விட்டது. மானிடப் பெண் யாரும் அடைந்திருக்க முடியாத துன்பங்களை அவள் அடைந்து விட்டாள். இனி அவளுக்கு அத்தனை துன்பங்களுக்கும் இணையான பேரின்பம் காத்திருக்கிறது. உம்முடைய குமாரிக்குச் சிவகாமி என்று பெயர் இட்டீர் அல்லவா? அதற்கேற்ப அவள் சிவபெருமானிடமே காதல் கொண்டு விட்டாள். அவளுடைய விருப்பத்துக்கு இடையூறு செய்யாமல் நிறைவேற்றி வையுங்கள். அதுதான் சிவகாமிக்கு நீர் செய்யக்கூடிய பேருதவி!" என்று அருளினார்.

திங்கள் மூன்று சென்ற பிறகு, வாதாபி வெற்றியின் கோலாகலக் கொண்டாட்டங்கள் எல்லாம் ஒருவாறு முடிந்த பிறகு, ஒரு நல்ல நாளில் ஏகாம்பரநாதரின் சந்நிதிக்கு ஆயனரும், சிவகாமியும் இன்னும் சிலரும் வந்து சேர்ந்தார்கள்.

கோயில் குருக்கள் சுவாமிக்கு அர்ச்சனையும் தீபாராதனையும் செய்து தட்டிலே பிரசாதம் கொண்டு வந்து கொடுத்தார்.

அந்தத் தட்டில் பழம், புஷ்பம், விபூதி, குங்குமம் ஆகிய பிரஸாதங்களுடனே, ஆயனரின் முன்னேற்பாட்டின்படி, திருமணத்துக்குரிய திருமாங்கல்யமும் இருந்தது.

சிவகாமி அந்தத் திருமாங்கல்யத்தையும் புஷ்ப ஹாரத்தையும் பக்தியுடனே பெற்றுத் தன் கழுத்திலே அணிந்து கொண்டாள்.

பின்னர், நடராஜனாகிய இறைவனுடைய சந்நிதியிலே நின்று சிவகாமி நடனமாடத் தொடங்கினாள்.

சிறிது நேரம் ஆனந்த பரவசமாக ஆடினாள். பிற்பாடு,

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்"

என்னும் திருநாவுக்கரசரின் திருப்பதிகத்தைப் பாடிக் கொண்டு அதற்கேற்ப அபிநயம் பிடித்தாள்.

சிவகாமி ஆடத் தொடங்கியதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சந்நிதியில் ஜனங்கள் சேரத் தொடங்கினார்கள்.

நடனத்தைப் பார்த்தவர்கள் அனைவரும் மெய்மறந்து பரவசமடைந்து பக்தி வெள்ளத்தில் மிதந்தார்கள்.

அச் சமயம் யாரும் எதிர்பாரா வண்ணமாக, மாமல்ல சக்கரவர்த்தியும் அவ்விடம் வந்து சேர்ந்தார்.

முன்னொரு நடவை இதே பாடலுக்கு அபிநயம் பிடித்துக் கொண்டிருந்த போது சிவகாமி மாமல்லரின் வரவை அறிந்து அவருடைய நினைவாகவே அபிநயம் செய்ததுண்டு.

இப்போது சிவகாமி மாமல்லர் வந்ததைக் கவனிக்கவேயில்லை.

அவளுடைய கண்களையும் கருத்தினையும் முழுவதும் ஏகாம்பரநாதரே கவர்ந்து கொண்டார்.

வேறு எதுவும் அவளுடைய கண்களுக்குத் தெரியவில்லை; வேறு யாருக்கும் அவளுடைய உள்ளத்தில் இடமிருக்கவில்லை.

மாமல்ல சக்கரவர்த்தி மற்ற எல்லாரையும் போல் சற்று நேரம் தாமும் மெய்மறந்து நின்று சிவகாமியின் அற்புத நடன அபிநயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவருடைய விசால நயனங்களிலே கண்ணீர் ததும்பி அருவி போலப் பெருகத் தொடங்கியது.

தாம் பல்லவ சக்கரவர்த்தி என்பதும், பக்கத்திலுள்ளவர்கள் தம்மைக் கவனிப்பார்கள் என்பதும் அவருக்கு நினைவு வந்தன.


சப்தம் சிறிதும் ஏற்படாதவண்ணம் இறைவனுடைய சன்னிதானத்திலிருந்து மாமல்லர் நழுவிச் சென்றார்.

அவர் ஏகாம்பரர் ஆலயத்தின் பிரதான கோபுர வாசலைத் தாண்டிச் சென்று கொண்டிருந்த போது,


"தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"

என்னும் நாவுக்கரசர் பாடலின் கடைசி வரி சிவகாமியின் உணர்ச்சி நிறைந்த இனிய குரலில் கேட்டுக் கொண்டிருந்தது.

(முற்றும்)




ஸ்ஸ்ஸ்ஸ்...
பொங்கல்னா இஞ்சி மஞ்சள் நினைப்புதானா வரணும்...? ருக்குமணி பாடினா எவ்வளவு டக்கரா இருக்கும்
இஞ்சி இடுப்பழகா...
அய்யே விசில் சத்தம் பால்குக்கரிலிருந்து வரலை... அங்கே பாரு...
என்ன ஓலைக்குப் பதிலா காஸா...?
ஓலை விலைக்கு காஸே பரவா யில்லே


தை பொறந்துடுச்சி தங்கம்... இனிமே ஒரு வழி பொறந்துடும்
என்ன பண்டாரம்! பொங்கலுக்கு ஒண்ணும் கிடைக்கலேன்னியே, எத்தினி தலைவருங்க வாழ்த்து சொல்லிருக்காங்க பாரு!
தலைவர்களின் வாழ்த்து
ஏதுக்குங்க வம்பு; ஒரு கொம்புல தி.மு.க. ஒரு கொம்புல அ.தி.மு.க. அடிச்சு விட்டுட்டேன்
நீங்க நல்லா இருக்கணும்
தஞ்சாவூர் ரேட்டுல மாப்பிள்ளை கேட்டீங்களே...!
ஆமாம்! ஓட்டு போடறது என்னவோ அதிகமா துட்டு குடுக்கறவனுக்குத் தான்
அயோத்தில போய்க் குடியேறிடுச்சோ என்னவோ!
அது சரி ஜல்லிக்கட்டு எங்கே காணோம்?
செல்வம்

சக்கரவர்த்தித் திருமகன்

17. யுவ ராஜ்யம்

பன்னிரண்டு ஆண்டுகள் ஆனந்தமாக ராமனும் சீதையும் அயோத்தியில் சுகம் அனுபவித்தார்கள். இனி, உலகில் மக்கள் படும் இடையூறுகள், துயரங்கள், கோபதாபங்கள், - எல்லாவற்றையுமே பகவானும் ஈசுவரியும் நேராக ஊனுடலில் அனுபவிக்கப் போகிறார்கள். 'எந்த அவதாரம் எடுக்கிறேனோ அந்த அவதாரத்துக்குரிய தேகமும் உணர்வுமாகத்தான் என் திருவிளையாடல் நடைபெற்று வரும்' என்பது பகவானே சொல்லிய விளக்கம்.

தன்னுடைய ஊன் உயிர் உணர்வில் மற்ற மக்களைப் போல் துன்பப்பட்டு இமையோர் இடுக்கண் காத்த சக்கரவர்த்தித் திருமகன் யார்? எங்கும் எதிலும், உள்ளும் புறமும் உள்ள லோகநாதனே! - இதைப் பெரியோர் அறிவார் என்று விளக்கிச் சொல்லிக் கவிச் சக்கரவர்த்தி கம்பர் அயோத்தியா காண்டம் ஆரம்பிக்கிறார்.

வானின்(று) இழிந்து வரம்பிகந்த
மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும் போல்
உள்ளும் புறத்தும் உளன் என்ப
கூனும் சிறியகோத் தாயும்
கொடுமை இழைப்பக்
கோல்துறந்து
கானும் கடலும் கடந்திமையோர்
இடுக்கண் காத்த கழல்வேந்தை

நான்கு புத்திரர்களிடமும் தசரதனுக்கு மிகப் பிரியம். ஆயினும் ராமனிடத்தில் அதிகப் பிரியம் என்றே சொல்லலாம். அந்தப் பிரியத்துக்குத் தகுந்த ராஜ லக்ஷணங்களும் சீலமும் ராமனிடமிருந்தன. கௌசல்யா தேவியோ, இந்திரனைப் பெற்ற அதிதியைப் போல் ராமனை மகனாக அடைந்து சொல்லுக் கடங்காத பெருமிதத்தை அனுபவித்து வந்தாள்.

சக்கரவர்த்தித் திருமகனுடைய குணங்களை எடுத்துக் காட்டி வால்மீகி பக்கம் பக்கமாக அடுக்கியிருக்கிறார். ராம குணங்களாகிய சமுத்திரத்திலிருந்து எவ்வளவு எடுத்துக் குடித்தாலும் முனிவருக்குத் திருப்தி இல்லை. தாமே சொல்லுவதாகவும், தசரதன் கண்டு அனுபவிப்பதாகவும், ஜனங்கள் அவனைப் பற்றிப் புகழ்வதாகவும், இன்னும் இவ்வாறு பல துறைகளில் பல இடங்களில் ராமனுடைய குணாதிசயங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார். வடமொழியில் எழுத்துச் சிக்கனம் அதிகம். அப்படியாயினும் பக்கம் பக்கமாக நிறைந்து கிடக்கிறது. மக்களுக்கிருக்க வேண்டிய நற்குணங்கள் லக்ஷணங்கள் இவையனைத்தும் ராமனிடமிருந்தன என்பது முனிவருடைய கருத்து. அந்தக் குணங்களைப் பற்றிப் படித்தும் கேட்டும் மக்கள் மேன்மையடைவார்கள் என்று கருதி வால்மீகி ரிஷி ராமனுடைய குணாதிசயங்களை அடிக்கடி மிக விரிவாகப் பாடியிருக்கிறார்.

ராமனுடைய திருமேனியழகு, பராக்கிரமம், உள்ளத்தின் தூய்மை, வாழ்க்கையில் சீலம், இரக்கம், பேச்சினிமை, சாந்தம், நிறைந்த அறிவு, இவற்றுடன் அபூர்வ தேக பலம், வியாதியற்ற சரீரம், ராஜ்ய பரிபாலனத்துக்குரிய நீதி சாஸ்திரங்களில் பயிற்சி இவைகளையெல்லாம் கண்டு ஜனங்கள் ராமன் எப்போது அரசனாவான் என்று விரும்பி எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். தசரதன் இதை நன்றாய் அறிவான். ஆனபடியால் தன் முதிய

ராஜாஜி

வயதைக் கருத்தில் கொண்டு ராமனுக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் செய்து விட்டு அவனிடம் ராஜ்ய பரிபாலனத்தை ஒப்புவித்து விட விரும்பினான். இதை ஒரு நாள் மந்திரிகளிடத்தில் சொல்லி ராஜ சபையைக் கூட்டினான்.

ரிஷிகளும் அறிஞர்களும் அயோத்தி நகரத்து சிரேணித் தலைவர்களும் பல தேசங்களின் அரசர்களும் தசரதன் கூட்டிய ராஜ சபைக்கு வந்து அவரவர்களுக்குரிய ஆசனங்களில் உட்கார்ந்தார்கள். கிரமப்படி எல்லாரும் அமர்ந்த பின் தசரதன் எழுந்து பேசினான். துந்துபி நாதம் கொண்ட அவனுடைய குரல் மேக கர்ஜனைபோல் கம்பீர பிரதித்துவனியோடு சபா மண்டபத்தைப் பூரித்தது. தசரதன் முகத்தில் ராஜ லக்ஷண காந்தி ஜொலித்தது. அவன் பேச்சு, பொருள் செறிந்து, கேட்போர் மனத்தைக் கவர்ந்தது.

''என் முன்னோர்களைப் போலவே நானும் இந்த ராஜ்யத்தைப் பெற்ற குழந்தையைப் போல் போற்றி வந்தேன். சோம்பலின்றி மக்களுக்காக உழைத்து வந்தேன். இப்போது என் உடல் மூப்பின் காரணம் தளர்ந்து போயிருக்கிறது. என் மூத்த மகனை யுவராஜனாக நியமித்து ராஜ்ய பாரத்தை அவன் மேல் வைத்து விட்டு நான் ஓய்வு பெற விரும்புகிறேன். என் முன்னோர்களின் வழியைப் பின் பற்றி நானும் மிகுதியுள்ள என் வாழ்நாளை வனத்தில் கழிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

''என் மூத்த மகன் ராமன் ராஜ்ய பாரத்தை என்னைப் போலவே நன்றாகத் தாங்குவான். அதற்கு வேண்டிய எல்லாக் குணங்களும் அவன் பெற்றிருக்கிறான். ராஜ சாஸ்திர நிபுணன். நீதி சாஸ்திரமும் நன்றாக அறிந்தவன். சத்துருக்களின் பலத்தை அடக்கும் வீரமும் சக்தியுமுடையவன். என் பாரத்தை அவன் தோளின் மேல் வைத்து விட்டு இராஜ்யத்தின் க்ஷேமத்தைப் பற்றி நான் கவலையற்று இருக்க விரும்புகிறேன். சபையிலுள்ள பெரியோர்களும் அரசர்களும் மகா ஜனங்களும் அனுமதி அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். என் யோசனை தவறாக இருந்தால் சொல்லுவீர்களாக'' என்றான் தசரதன்.

அரசனுடைய பேச்சைக் கேட்டதும் சபையில் மகிழ்ச்சியைக் குறிக்கும் சப்தம் அலையலையாகக் கிளம்பிற்று. ராமனை யுவராஜாவாக்குகிறேன் என்கிற பேச்சைக் கேட்டதும் கருமேகத்தைக் கண்ட மயில்கள் நர்த்



தனம் செய்து மகிழ்வது போல ''அப்படியே செய்வீர்'' ''அப்படியே செய்வீர்!'' என்று சபையில் நாலா பக்கத்திலிருந்தும் கூக்குரல் எழுந்தது. அந்தணர்களும், சேனைத் தலைவர்களும், நகரத்துச் சிரேஷ்டர்களும், கிராமங்களிலிருந்து வந்திருந்த ஜனபதத் தலைவர்களும் எல்லாரும் ''ராமனுக்கு யுவராஜ அபிஷேகம் செய்து ராஜ காரியங்களை அவனிடம் ஒப்புவிப்பதை நாங்கள் அனைவரும் விரும்புகிறோம்'' என்று ஏகோபித்து ஆமோதித்தார்கள்.

இதைக் கேட்டு அரசன் மறுபடியும் பேசலானான். ''நீங்கள் கொடுத்த அபிப்பிராயத்துக்குக் காரணங்கள் காட்டாமல், நான் சொன்னதை அப்படியே ஒப்புக் கொண்டு விட்டதில் எனக்குத் திருப்தியில்லை. பெரியோர்கள் விஷயங்களை விளக்கிப் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்று சொன்னான்.

அப்போது சபையில் பலர் எழுந்து இராமனுடைய குணாதிசயங்களையும் ராஜ்ய பாரம் தாங்கும் தகுதியையும் விஸ்தாரமாக எடுத்துக் காட்டினார்கள். அதைக் கேட்கக் கேட்க அரசனுடைய உள்ளம் ஆனந்தத்தில் மூழ்கிற்று. முடிவில் ''தாமதம் செய்ய வேண்டாம். உடனே ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்வீர்'' என்று ஜனங்கள் யாவரும் ஒருமிக்க நின்று கைகூப்பிக் கேட்டுக் கொண்டார்கள்.

''என் அன்பார்ந்த பிரஜைகளே! நீங்கள் சொல்லுவதைக் கேட்டு நான் எல்லை கடந்த மகிழ்ச்சி அடைந்தேன். அப்படியே செய்வேன். யுவ ராஜ்ய பட்டாபிஷேக மங்கள காரியம் கிரமப்படி நடைபெறும்'' என்றான் அரசன்.

வசிஷ்டர், வாம தேவர் முதலிய பெரியோர்களைப் பார்த்துத் தசரதன், ''இது சித்திரை மாதம். மங்களமான காலம், வனங்களெல்லாம் பூத்து அழகாக விளங்கும் பருவம். அபிஷேகத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்யுங்கள்'' என்று சொன்னான்.

இவ்வாறு உத்தரவிட்டதும் ஜனக் கூட்டத்திடையே பெரிய சந்தோஷ ஆரவாரம் பொங்கிற்று.

மன்னனுடைய உத்தரவின் பேரில் அந்தரங்க அமாத்தியனான சுமந்திரன் ராமனை அழைத்து வரச் சென்றான். ராமன் விஷயம் தெரியாதவனாகத் தந்தையின் முன்னால் வந்து நின்றான். பட்டாபிஷேக நிச்சயத்தைப் பற்றி அரசன் சொன்னதைக் கேட்டு, ''தங்கள் ஆணைப்படி நடக்க நான் கடமைப்பட்டவன்'' என்றான்.


''உனக்கு நான் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை. நீ குணவான். ஜனங்கள் எல்லாரும் உன்னை விரும்புகிறார்கள். இனி நீ முன்னைவிட அதிகமான வினயத்துடனும் ஜாக்கிரதையுடனும் நடந்து கொண்டு எல்லா பாக்கியமும் புகழும் அடைவாயாக'' என்று அரசன் மகனை ஆசீர்வதித்தான். ராமனும் தன் இருப்பிடம் திரும்பினான்.

மறுபடியும் அரசன் ஏதோ யோசித்தவனாக ''ராமனை அழைத்து வா!'' என்று சுமந்திரனுக்கு உத்தரவிட்டான். ''இதென்ன காரணம்? எதற்காகச் சக்கரவர்த்தி மறுபடியும் என்னை வரச் சொன்னது?'' என்று ராமன் கேட்டான்.

''எனக்குக் காரணம் தெரியாது. அரசன் அழைத்து வரச் சொன்னது தான் எனக்குத் தெரியும்'' என்று சொன்னான் சுமந்திரன்.

'யுவராஜ்ய பட்டாபிஷேக விஷயத்தில் மந்திராலோசனை செய்து உசித அனுசித சந்தேகம் ஏதாவது ஏற்பட்டிருக்கலாம். எப்படியானாலும் சரியே; நான் அவசரப்பட வேண்டியதில்லை' என்பது ராமனுடைய எண்ணம். ராஜ்யாதிகாரம் உடனே வகிக்க வேண்டும் என்று ராமனுக்கு ஆசை இருக்கவில்லை. அதைக் கடமையாகவே பாவித்தான். அரசன் ஒப்புக் கொள்ளும்படி சொன்னால் சரி, இல்லா விட்டால் வேண்டியதில்லை என்பது அவன் கருத்து.

கம்பர் பாட்டும் இதை எடுத்துக் காட்டுகிறது.



தாதை அப்பரி(சு) உரை செயத்
தாமரைக் கண்ணன்
காதல் உற்றிலன் இகழ்ந்திலன்
கடன் இதென்(று) உணர்ந்தும்
'யாது கொற்றவன் ஏவிய(து)
அது செயல் அன்றோ
நீதி எற்(கு)' என நினைந்தும்
அப்பணிதலை நின்றான்.

உடனே ராமன் அரசனிருந்த இடம் சென்றான். மகனைக் கட்டியணைத்து ஆசனத்தில் அமரச் செய்து, ''ராமனே, எனக்கு வயது அதிகமாகி விட்டது. எல்லா சுகங்களும் நீண்ட ஆயுளும் அனுபவித்து விட்டேன். செய்ய வேண்டிய தேவ பித்ரு காரியங்களையெல்லாம் செய்து தீர்த்தேன். இனி செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. உனக்கு அபிஷேகம் செய்வித்துச் சிம்மாசனத்தில் அமரச் செய்வதைத் தவிர வேறொன்றும் நான் ஆசைப்படவில்லை. நான் நேற்றிரவு கெட்ட சொப்பனங்கள் கண்டேன். தவிர வருங்கால விஷயமறிந்தவர்கள் என்னுடைய ஜாதகத்தின்படி இப்போது எனக்கு மரணமும் பெரிய துக்கமும் சம்பவிக்கலாம் என்கிறார்கள். ஆனபடியால் உன் பட்டாபிஷேகத்தை நாளைய தினமே செய்து முடித்து விட வேண்டும் என்பது என் எண்ணம். நாளைய தினம் புஷ்ய நட்சத்திரம்; நல்ல நாள் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். இந்தக் காரியத்தை உடனே செய்து முடிக்க வேண்டும் என்று என் உள்ளத்தில் ஏதோ என்னைத் தூண்டித் துரிதப்படுத்துகிறது. உடனே நீயும் சீதையும் பட்டாபிஷேகத்துக்காக விரதமிருங்கள். கிரமப்படி இன்று உபவாசமிருந்து, தரையில் படுத்துத் தூங்கி, மங்கள காரியத்துக்கு ஏதொரு இடையூறும் வராமற்படி பூஜை செய்வாயாக. பரதன் ஊரில்லை. அவன் தன் மாமனுடைய ஊருக்குப் போய் வெகு நாட்களாயின. கேகயதேசம் வெகு தூரத்தில் இருக்கிறது. அவனுக்கு இப்போது சொல்லியனுப்பி வரவழைக்க அவகாசமில்லை. அவன் வருவதற்காகக் காரியத்தை நிறுத்தி வைப்பது உசிதமல்ல'' என்றான்.

> ''இப்பெல்லாம், நம்ம தலைவர் தொகுதிக்கு விசிட் போறப்போ... தோள்ல துண்டு போட்டுக்கிட்டு போறதில்லையே... ஏன்...?''
>
> ''தலைவர், தொகுதி மக்கள் கிட்ட ஏதாவது வாக்குறுதி கொடுத்தா... 'உங்க பேச்சில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. தோள்ல இருக்கிற துண்டைப் போட்டு தாண்டிச் சொல்லுங்க'ங்கிறாங்களாம்...!''
>
> - புதுவண்டி ரவீந்திரன்.

தசரதன் பேசிய பேச்சில் கவி நமக்கு இடம் தருகிறார். கைகேயியை விவாகம் செய்து கொண்ட காலத்தில் தசரதன் கேகயனுக்குக் கொடுத்த வாக்கு அவன் நினைவுக்கு வந்து அது அவனை மனத்தில் தொந்தரவு செய்தது போலத் தோன்றுகிறது. பரதன் மிக நல்லவன், அண்ணனிடம் அவன் மிக்க அன்பும் பக்தியும் வைத்தவன். ஆனபடியால் கைகேயி விவாக நிபந்தனையை அவன் பொருட்படுத்த மாட்டான். ராமனுடைய பட்டாபிஷேகத்தை அவன் ஆட்சேபிக்கவே மாட்டான். ஆயினும் மனிதனுடைய மனத்தை நம்பக் கூடாது. நல்லவர்களுடைய புத்தியும் சில சமயம் மாறிப் போகும் என்று தசரதன் பயந்தான்.

''பரதன் அண்ணனைக் குருவாகக் கருதுகிறவன்; தர்மாத்மா; சுத்தமான உள்ளமும் ஆசைகளை அடக்கும் சக்தியும் பெற்றவன். ஆயினும் மனுஷ்யனுடைய சித்தம் எப்போதும் ஒரே விதமாக இருக்காது'' என்று தசரதன் ராமனிடம் சொல்லி, மறுநாளே பட்டாபிஷேகம் முடித்து விட வேண்டும், பரதன் வருவதற்காகக் காக்க வேண்டாம் என்று வசிஷ்டருக்கும் தெரிவித்து விட்டான். தான் கண்ட துர்நிமித்தங்கள் தசரதனை இவ்வாறு துரிதப்படுத்தியதாகத் தெரிகிறது.

தந்தையினிடம் விடை பெற்றுக் கொண்டு ராமன் உடனே கௌசல்யா தேவியின் அந்தப்புரத்துக்குச் சென்றான். பெற்ற தாய்க்கு விஷயத்தைச் சொல்லி ஆசி பெறுவதற்காகச் சென்றான். அதற்கு முன்னதாகவே கௌசல்யைக்குச் சமாசாரம் எட்டி விட்டிருந்தது. சுமித்திரை, சீதை, லக்ஷ்மணன் எல்லாரும் கௌசல்யா தேவியுடன் இருந்தார்கள்.

கௌசல்யை மடிப் பட்டு உடுத்தி மகனுடைய சுபத்தைக் குறித்துப் பூஜையில் அமர்ந்திருந்தாள்.

தந்தை இட்ட ஆணையைப் பற்றிக் கௌசல்யையிடம் ராமன் சொன்னான்.

''கேள்விப்பட்டேன், மகனே! இது உண்மையென்று நீயும் சொல்லுகிறாய். சிரஞ்சீவியாக இருப்பாயாக! ராஜ்யத்தை வகித்து விரோதிகளை யடக்கிப் பிரஜைகளையும் பந்துக்களையும் காப்பாற்றி வருவாய். உன் குணங்களால் பிதாவைத் திருப்தி செய்தாய். அது என்னுடைய பாக்கியம்'' என்று சொல்லி மகனை ஆசீர்வதித்தாள்.

ராமன் பக்கத்தில் நின்ற தம்பி லக்ஷ்மணனைப் பார்த்துச் சிறிது நகைத்து, ''லக்ஷ்மணா, என்னோடு சமமாக இருந்து செல்வம் நிறைந்த இந்த நாட்டை நீ ஆள்வாயாக. என் உடலுக்கு நீ வெளியில் நடமாடும் இரண்டாவது



நடிகை : நான் நடிக்கிற சீனெல்லாம் ஒரு டேக்கிலேயே ஓகே ஆயிடும்; கேள்விப்பட்டிருப்பீங்களே!

நிருபர் : ஆமாமாம்! 'இன்னொரு டேக் எடுத்தா மட்டும் நடிப்பு வந்துடப் போகுதாக்கும்'னு டைரக்டர் சொல்லிக்கிட்டிருந்தார்!

– எஸ். ரமேஷ்.

உயிரல்லவா? உனக்காகத்தான் இந்த ராஜ்ய பதவி என்னை அடைந்திருக்கிறது. எனக்குச் சேர்ந்த பாக்கியமெல்லாம் உன்னுடையதுமே யாகும்'' என்று சொன்னான்.

ராஜ்ய பாரத்தை லக்ஷ்மணனும் சேர்ந்து வகிக்க வேண்டும் என்று கோரியது அன்பினால் உண்டான பேச்சு. சிறு நகைப்பு, தானாக வந்து சேர்ந்த சௌபாக்கியத்தைக் குறித்து உள்ளத்தில் பற்றின்மையினால் உண்டான மெய்ப்பாடு.

பிறகு இரு தாய்மார்களையும் வணங்கி விடைபெற்றுச் சீதையை அழைத்துக் கொண்டு தன் இல்லத்துக்குச் சென்றான்.

அரசன் கட்டளைப்படி வசிஷ்டர் ராமனுடைய இல்லத்துக்கு வந்தார். இதை யறிந்ததும் ராமன் வெளியில் சென்று வசிஷ்டரை வணங்கி வாகனத்திலிருந்து கை கொடுத்து இறக்கி உள்ளே அழைத்துச் சென்றான்.

வசிஷ்டர் மந்திர பூர்வகமாக உபவாச சங்கற்பம் செய்வித்து விட்டு அரசனிடம் திரும்பச் சென்றார். போகும் போது ஜனங்கள் ராஜ மார்க்கத்தில் ஆங்காங்கே கும்பல் கும்பலாகக் கூடிப் பட்டாபிஷேக மகோற்சவத்தைப் பற்றிச் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். நகர வாசிகள் வீடுகளையெல்லாம் அலங்கரித்துக் கொடிகள் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். தெருக் கூட்டத்துக்கு இடையில் கஷ்டப்பட்டு வசிஷ்டருடைய தேர் மெள்ளச் சென்றது.

வசிஷ்டர் வந்ததும் அரசன் ஆசனத்திலிருந்து இறங்கி அவரைக் கண்டு ''செய்ய வேண்டிய உபவாச சங்கற்பம் செய்வித்தீர்களா?'' என்று கேட்டு, ''ஆயிற்று'' என்று அவர் சொன்னதும் மகிழ்ந்தான். ஏதாவது இடையூறு நேரிடுமா என்று தசரதனுக்குத் திகில் இருந்து கொண்டேயிருந்தது.

நகரம் மகிழ்ச்சிக் கடலில் மிதந்து கொண்டிருந்தது. பெண்களுக்கு அடங்காத உற்சாகம். எல்லா வீடுகளிலும், எல்லாத் தெருக்களிலும் தங்களுடைய சொந்த மங்கள நிகழ்ச்சியாகவே ராமனுடைய பட்டாபிஷேகத்தை ஆண் பெண் குழந்தைகள் எல்லாரும் பாவித்து எல்லை கடந்த குதூகலத்திலிருந்தார்கள்.

மறு நாள் காலையே இந்த மகோற்சவம் நடக்கப் போகிறது என்பது தெரிந்ததும் சந்தோஷமும் பரபரப்பும் இரு மடங்காகி விட்டன. சுற்றுப் பக்கத்துப் பிரதேச வாசிகள் எல்லாம் அயோத்திக்குப் பட்டாபிஷேக மகோற்சவத்தைப் பார்க்க வந்து சேர ஆரம்பித்து விட்டார்கள். எங்கு பார்த்தாலும் மங்கள வாத்தியமும் கோஷங்களுமாக விருந்தது.

ராமனும் சீதையும் தங்களுடைய மனையில் நாராயணனைத் தியானித்து ஓமத் தீயில் நெய் விட்டு, எஞ்சி நின்ற நெய்யைத் தேவப் பிரசாதமாக பக்தியுடன் அருந்தி இருவரும் தரையில் புல் பரப்பி அன்றிரவு படுத்தார்கள். அதிகாலையில் மங்கள வாத்தியங்களால் எழுப்பப்பட்டு இருவரும் எழுந்தார்கள்.

(தொடரும்)

அரிசியை என்ன பண்ணுவீங்க...?

– ஒரு முக்கியமான
ரேடியோ பேட்டி

லோகேஷ்

ரேஷன் விநியோகங்கள் கிராமப் புறங்களில் சரியாக நடைபெறுகிறதா என்பதைப் பற்றி அரிசி (அரசு) அதிகாரிகளுக்கு அடிக்கடி சந்தேகம் வந்து விடும்.

சந்தேகம் வந்தால் குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு - கடைகளுக்குச் சென்று சோதிக்க வேண்டியதுதானே? சோதிக்காமலா இருப்பார்கள். அவையெல்லாம் பேப்பர்களில் செய்திகளாக வெளி வருகின்றன. ஆனால் அவையெல்லாம் கற்பனையோ என்று பொது மக்கள் நினைத்துவிடக் கூடாதல்லவா?

ஆகவே ரேடியோவில் நேர்முகப் பேட்டியாக நுகர்வோரைக் கண்டு, அந்தக் கேள்வி பதிலை ஒலி பரப்பினால் யாருக்கும் சந்தேகம் இராதல்லவா? அதுவுமில்லாமல் ரேடியோ சாதனங்கள் துருப்பிடிக்காமலிருக்க ஏதாவது அவற்றுக்கு ஆகாரம் போட்டுக் கொண்டிருக்க வேண்டுமே. இத்தகைய பேட்டிகள் அதற்குப் பெரிதும் உதவுகின்றன. (இங்கிருப்பது ஒரு ரெடிமேட் பேட்டி. மாவட்டம், கிராமம், பெயர்களை வசதிக்கேற்ப மாற்றிக் கொள்ளலாம்.)

நிருபர் : உங்க பேரென்ன?



பேட்டி தருபவர் : கித்தேரி முத்து.

நி : முத்தேரி கித்துவா, கித்தேரி முத்துவா? உரக்கச் சொல்லுங்க.

பே : கித்தேரி முத்துங்க.

நி : உங்களுக்கு ரேஷன் ஒழுங்காக் கிடைக்குதா?

பே : ஒரு குறையும் இல்லீங்க.

நி : ரேஷன்லே - அதாவது அரசு உணவுப் பண்டம் வினியோகம் செய்யுதே அது ஒழுங்காக் கிடைக்குதா?

பே : ஒழுங்காக் கிடைக்குதுங்க.

நி : அதாவது, அரசாங்கத்தால் ரேஷன் மூலம் வினியோகம் செய்யப்படுகிற பொருள்களெல்லாம் உங்களுக்கு ஒழுங்காக் கிடைக்குதுன்னு சொல்றீங்க.

பே : ஆமாங்க.

நி : ஆமாங்கன்னு மொட்டையாச் சொன்னா எப்படிங்க?

பே : அதாவது... கிடைக்குதுங்க.... (இருமல்)

நி : அதாவது... நிதானமா இருமிட்டு அவசரமில்லாமச் சொல்லுங்க.

பே : இல்லீங்க! லொக் லொக்! ரேஷன்லே ஒரு குறையுமில்லீங்க....

நி : மாசத்துக்கு எத்தனை கிலோ அரிசி போடறாங்க?

பே : மூட்டை மூட்டையாப் போடறாங்க. அதெல்லாம் கடைக்காரங்களுக்குத் தான் தெரியும். லொக்... கரகரகர... லொக்.

நி : நான் கடைக்காரங்களைப் பத்திக் கேட்கலே. உங்களுக்கு - உங்க கார்டுக்கு மாசம் அரிசி எவ்வளவு போடறாங்க.

பே : பன்னெண்டு கிலோ.

நி : அதாவது பன்னெண்டு கிலோ.

பே : ஆமாங்க. அதாவது பன்னெண்டு கிலோ.

நி : உங்களுக்கு அது பத்துதா? இந்த மலிவு விலை அரிசி இல்லேன்னா உங்களாலே ஜீவிக்க முடியாது இல்லீங்களா? அதாவது அரசாங்கம் தர்ற அரிசி உங்களுக்கு ரொம்ப உதவியா இருக்குது?

பே : நமக்கு அரிசி செலவில்லீங்க.

நி : சாப்பாட்டுக்கு என்ன செய்யறீங்க?

பே : பிச்சை எடுத்துச் சாப்பிடறமுங்க.

நி : அரிசியை என்ன பண்ணுவீங்க?

பே : வித்துப் போடுவேனுங்க.

நி : நீங்க செய்யறது தப்பில்லீங்களா?

பே : எப்படிங்க தப்பு? அரிசியைப் பச்சையாத் தின்ன முடியுமுங்களா?

நி : பின்னே?

பே : சோறா ஆக்கணுமுங்க. அதுக்கு சீமெண்ணெய் மாசம் மூணு லிட்டர் தர்றாங்க. ஸ்டவ்வுக்குப் போதுமுங்களா மாசம் முச்சுக்கும்? ராத்திரியிலே வெளக்குக்கு சீமெண்ணெய் வேணுங்களே!

நி : சீமெண்ணெய்னா?

பே : மண்ணெண்ணெயுங்க. என்னங்க, உங்களுக்கு ஒரு எளவும் புரியலை.

நி : (மனசுக்குள்) இந்த வரியைப் பேட்டியிலிருந்து ஞாபகமாக நீக்கி விட வேண்டும். (வெளிப்படையாக) சரி, சரி. கோதுமை, மைதா, சர்க்கரை இதெல்லாம் கிடைக்குதா?

பே : மாசம் ரெண்டு கிலோ சர்க்கரை, அப்புறம் பாமாயில் எல்லாம் தர்றாங்க!

நி : நீங்க வாங்கறீங்களா?

பே : காசு கிடைக்கறப்போ வாங்குவேனுங்க.

நி : கிடைக்காமல் போனால்?

பே : ரேஷன் கடைக்காரங்க கூட வெலைக்கு வைச்சு வேற ஆளுங்களுக்கு வித்துடுவாங்க.

நி : உங்களுக்கு ஏன் காசு கிடைக்கறதில்லே?

பே : ஒழைக்கறதுக்கு யாரு வுடறாங்க?

நி : யாரு, தடை செய்யறாங்க?

பே : ஒங்க மாதிரி டவுன்லேருந்து ஆளு மாத்தி ஆளு அதையும், இதையும் கேள்வி கேட்கறதுக்குப் பொழுது விடிஞ்சா எந்திருச்சி வந்துடறாங்க. அவுங்களுக்குப் பதிலு சொல்லவே நேரம் சரியாப் போகுதுங்க. ஒரு கேள்விக்குப் பதிலு சொல்ல அஞ்சு ரூவா கொடுக்கணும்னு கெவுர்மெண்ட்டு திட்டம் பண்ணினாங்கன்னா நல்லா இருக்குமுங்க. அடுத்தாப்பிலே எதுனாச்சும் கேள்வி கேட்கணுமுன்னா அஞ்சு ரூவாக் கொடுத்துட்டுக் கேளுங்க.

(நிருபர் மைக்கை அள்ளிச் சுருட்டிக் கொண்டு ஓட்டம் பிடிக்கிறார்.)





பந்தும் பந்துக்களும்

சமாஷ்வரா

டிசம்பர் பத்து அன்று அனைத்துக் கட்சிகளும் 'பந்த்' என்ற செய்தியைக் கேட்டவுடன் நான் சந்தோஷத்தில் சதிராடினேன். காரணம் - ஊரிலிருந்து மாமனார் தன் பரிவாரங்களுடன் வர இருந்த ரயில் ரத்தானதே.

'டி.வி.'யைப் போட்டு விட்டு ஈஸிசேரில் கண்ணயர்ந்த என்னை உலுக்கிய பாரியாள், ''இப்படி சாஞ்சா எப்படி, நாளை மறுநாள் 'பந்த்' தெரியுமில்லை?'' என்றாள்.

''அதுக்கு நான் என்ன பண்ணனும்?''

''இங்க பாருங்க! பந்த் அன்னிக்கு உங்களுக்குச் சாப்பாடு கிடைக்கணும்னா இன்னிக்கே நீங்க கறிகாய் வாங்கினாத்தான் முடியும். இப்பவே கறிகாய் எல்லாம் யானை விலை ஏறியிருக்கும்.''

மார்க்கெட் என்றாலே எனக்கு அலர்ஜி. சித்தப்பா ஹார்ட் அட்டாக்கில் கிடந்த போது சாத்துக்குடி வாங்கச் சென்றதுதான் என் முதல் மார்க்கெட் அனுபவம். 'சொன்ன விலையில் பாதி விலை கேள்' என்ற அரிய மார்க்கெட் தத்துவத்தைப் போதித்த பாரியாளிடம் பால பாடம் பயின்று, தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மார்க்கெட்டிற்குச் சென்றேன்.

''சாத்துக்குடி என்ன விலை?''

''ரெண்டு ரூபா.''

''சொல்லிக் கொடுப்பா.''

''அதான் சொல்லிட்டேனில்ல. உன் விலையை நீ கேளு. கட்டுப்படியானா தரேன்.''

பாரியாளின், பாதி விலை போதனை காதில் ரீங்கரிக்க, ''ஒரு ரூபாய்க்குக் கொடு'' என்றேன்.

''ஏன்! எட்டணாக்கு எடுத்துக்கயேன்.''

பரவாயில்லை இறங்கி வர்றான். இத்தோட விடக்கூடாது என்று, ''நாலணாக்குக் கொடு'' என்றேன்.

''ஏன், ஓசியிலேயே எடுத்துக்கோயேன்'' - என்று அவன் முறைத்த முறையில் ஒடுங்கி, ஓடினேன்...

மேற்படி சம்பவம் பிளாஷ்பேக்கில் நினைவுக்கு வர, ''அம்மாடி! கறிகாய் வாங்க மட்டும் நான் போக மாட்டேன். என்னை விட்டு விடு,'' என்றேன்.

''தோ பாருங்க! நான் கை வேலையா இருக்கேன். நீங்க மட்டும் இப்ப மார்க்கெட் போகலேன்னா பந்த் அன்னிக்குச் சமையல் பண்ணாம நான் பந்த் பண்ண வேண்டி வரும்,'' என்று மிரட்டியவுடன் நான் நேராகக் கறிகாய்க் கடை நோக்கிக் காவடி எடுத்தேன்.

''உருளை நாலு ரூபா... நாலு ரூபா...''

''அட! சல்லிசா இருக்கே. கடைக்காரனிடம் ரெண்டு கிலோ போடச் சொல்லி, பத்து ரூபாயைக் கொடுத்து பாக்கிக்கு இஞ்சி, கொத்துமல்லி இத்யாதிகளைப் போடச் சொன்னேன்.''

''இங்க கேளும்மா! கால் கிலோ நாலு ரூபான்னு கத்தினுகிறேன். இந்த ஆளு என்னடான்னா பிச்சாத்து எட்டு ரூபாய்க் கொடுத்துட்டு இரண்டு கிலோ வாரிக்க பார்க்கறான். தமாஷா இல்ல.''

''நாளை மறுநாள் பந்த். இந்த நேரத்துல கிலோ நாலு ரூபாயக்கு உருளை கிடைக்குதா? நீயெல்லாம் படிச்சவன்...'' பக்கத்துக் கடைக்காரன் முணுமுணுக்க, ஒருவழியாக அரை கிலோ உருளையோடு வீடு வந்து சேர்ந்தேன்.

''என்னங்க நீங்க! உருளை மட்டும் வாங்கியிருக்கீங்க?''

''எல்லாம் போதும்! இருக்கிறதை வச்சு அட்ஜஸ்ட் பண்ணு,'' என்று உட்கார இருந்தவனை நிறுத்தி, ''அப்படியே வீடியோ ஷாப் போய் 'லேட்டஸ்ட்' படமா பார்த்து நாலஞ்சு வீடியோ கேஸட் வாங்கி வந்துடுங்க. நாளைக்குப் போனா ஒரு கேசட் கூட கிடைக்காது. பந்த் வரதுனால எல்லாரும் கேசட்டுக்காகப் பறப்பாங்க,'' என்ற பாரியாளின் உத்தரவை மீற முடியாமல் சென்றேன்.

வீடியோ கேசட்டுகளுடன் வீடு திரும்பிய போது, எனக்குப் பேரதிர்ச்சி காத்திருந்தது. தன்னுடைய 31 பற்களும் தெரிய (ஞானப்பல் சமீபத்தில்தான் பிடுங்கப்பட்டது) என்னை வரவேற்று, ''அப்பா போன் பண்ணினா. நாளை மறுநாள் பந்த் இருக்கறதால அப்பா, தம்பி, அக்கா பசங்க எல்லாம் நாளைக்கே வராளாம். ஸ்டேஷனுக்குப் போய் நீங்கதான் அவங்களை அழைச்சிண்டு வரணும். அதனால் ஆபீசுக்கு லீவ் போட்டுடுங்க...''

''லீவ் போட்டா ஒரு நாள் சம்பளம் 150 ரூபாய் போகும்!''

''என்னங்க நீங்க! எதுக்கெல்லாம் கணக்குப் பார்க்கறதுன்னு இல்லையா? நாம போகும் போது பணத்தை மூட்டை கட்டிண்டு போகப் போறதில்லை. நாலு மனுஷா வேணும்ங்கறதை ஞாபகம் வச்சுக்கங்க.''

''போதும் உன் வியாக்கியானம். உங்கப்பன் ஒரு மனுஷனா? ஒரு கப் ஐஸ் வாங்கிட்டு நாம ரெண்டு பேரும் சாப்பிடலாம்னு சொன்னவர்தானே...''

''நீங்க என்ன வேணுமானாலும் பேசுங்க. எனக்குக் கவலையில்லை. உங்க

அருள்வாக்கு

மனிதர்கள் எவ்வளவுக்கெவ்வளவு பகவானிடத்திலிருந்தும் தர்ம நூல்களிலின்றும் விலகுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள் என்றே கண்கூடாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம். லயன்ஸின் அபரிமித அபிவிருத்திக்குப் பிற்பாடு இன்று சர்வ தேசத்திலும் ஒரு தத்தளிப்பு, நிம்மதியின்மை தானே அதிகரித்திருக்கிறது. ஐம்பது வருஷத்துக்கு முன் சமுதாயத்திலிருந்த நிச்சிந்தையான, நிம்மதியான சௌஜன்யமான வாழ்க்கை இப்போது இல்லவே இல்லை என்கிறது தானே மிஞ்சி நிற்கிறது? அறிவுச் சக்தியோ பௌதிக ஆற்றலோ அதிகப்பட அதிகப்பட உலகத்துக்கு ஆபத்தும் அதிகரிக்கிறது என்று நன்றாகத் தெரிகிறது. சரி, வியாதியைத் தெரிந்து கொண்டோம். இனி மருந்து என்ன? பக்தியும் சாந்தமுமே இவைகளுக்கு எல்லாமீ உற்ற மருந்து. உண்மை பக்தியும் சாந்தமும் உலகில் பரவப் பரவ போலீஸுக்கும், நீதிமன்றங்களுக்கும், சைன்யங்களுக்கும் வேலை குறையும். இதுதான் முந்தைய ஆயாயிரம் வருஷம் காட்டுகிற உண்மை.

ஆதலால் ஆட்சி மன்றத்தின் முதற் கடமை பக்தியையும் சாந்தத்தையும் பரவச் செய்வதே.

ஆபீஸ் பாலு வந்திருந்தார். நாளைக்கு லீவ் கூட சொல்லியாச்சு.''

''என்ன விஷயமா பாலு வந்தான் அதை முதல்ல சொல்லு?''

''ஒன்னும் பெரிய சமாசாரமில்ல. பந்த் அன்னைக்கு உங்க ஆபீஸ் லீவாம். அதை ஈடுகட்டறதுக்கு இன்னொரு நாள் நீங்க வேலை செய்யப் போறதில்லையாம். இந்தத் தடவை 'No work No pay'ன்னு சொன்னார்.

''போச்சு. இன்னொரு 150 ரூபாய்!'' என்று தலையில் கைவைத்து உட்கார்ந்தேன்.

''ஏங்க! நீங்க வாங்கிண்டு வந்த உருளையை நாக்குலதான் ஈஷிக்கணும். அப்பால்லாம் வர்றார். அதனால நான் போய் ரெண்டு நாளைக்கு வேணுங்கிற கறிகாய் வாங்கிண்டு வர்றேன். சீட்டு கட்ட வச்சிருந்த 200 ரூபா பணத்தை எடுத்திண்டிருக்கேன்,'' என்று கூறி கிளம்பினாள் பாரியாள்.


ஆக பந்த்திற்கு முன்னாடியே ஐந்நூறு ரூபாய் ஃபணால்!

மறுநாள் மாமனார் சகிதம் வந்த பரிவாரங்களால் வீடே திமிலோகப்பட்டது.

ஆனால் நடப்பது என்ன? ஆட்சி மன்றத்தினரோ தாம் மதச்சார்பற்றவர்கள் என்று தீர்மானித்துக் கொண்டிருக்கிறபடியால் பக்திப் பிரசாரம் அத்தீர்மானத்துக்கு மாறுபட்டதாகி விடுமோ என்று சந்தேகித்து இவ்வழி திரும்பாமலிருக்கிறார்கள். மதச்சார்பின்மை என்றால் ஒரு மதத்தை மட்டும் சாராமல் எல்லா மதங்களையும் வளர்ப்பது என்று வைத்துக் கொள்ளாமல், எந்த மதத்தையுமே வளர்ப்பதில்லை என்று அர்த்தம் பண்ணிக் கொண்டிருப்பதால் ஏற்பட்ட விளைவு இது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.





தென் ஆப்பிரிக்காவில், இந்திய அணியைக் கண்ட்ரோல் செய்ய முடியாத அசாருத்தீன் மாதிரி நான் செயலற்றுக் கிடந்தேன்.

என் கண்முன்னே இன்னொரு டீ.வி. செட் வந்து இறங்கியது. என்னால் பொறுக்க முடியாமல், ''என்னதுக்கு இது,'' என்று கத்தினேன்.

''கம்மா கத்தாதீங்க! தம்பி மணிகண்டன் சபரிமலை போகப் போறான். அவன் தனியா, 'அருள் தரும் ஐயப்பன்', மாதிரி சாமிப் படமா பார்க்கட்டுமேன்னு இந்த வாடகை அரேஞ்ச்மெண்ட்,'' என் நாள் தர்மபத்தினி.

''இது என்ன அக்கிரமமா இருக்கு! அவன் உட்கார்ந்து சரணம் சொல்லிண்டிருக்கட்டுமே. சினிமாதான் பார்க்கணுமா என்ன?''

நான் பாதி பேசிக் கொண்டிருக்கும் போதே அவள் நகர்ந்து விட்டாள்.

பந்த் அன்று இவர்களுடைய ரகளை உச்சகட்டத்தை அடைந்தது. கல்யாண சத்திரத்தில் சம்பந்தி போஜனம் மாதிரி கண்ணெதிரே பலவகைப் பணியாரங்களாக என் பணம் கரைந்து கொண்டிருந்தது. அக்கா பசங்களில் இருவர், கமல் கோஷ்டி, ரஜினி கோஷ்டி என்று பிரிந்து, 'என்னோட ஆள் படக் கேசட்டைத்தான் போடணும்' என்று அடிதடியில் இறங்கி வாடகைக்கு வாங்கிய கேசட் ஒன்றை உடைத்தனர். எனக்கு B.P. ஏறிக் கொண்டிருந்தது.

மாலையில், டீ.வி. செய்திச் சுருக்கத்தில், ஷோபனா ரவி 'இன்றைக்கு சென்னையில் பந்த் அமைதியாகக் கழிந்தது' என்ற போது எனக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை.

பாப்கார்ன் கனவுகள்

13

கேட்டிலிருந்து வாசல் வரைக்கும் இடைவெளிகளில் புல் முளைத்த சிமெண்ட் பாதை. 'நாய்கள் ஜாக்கிரதை'. கூர்க்காவின் பலகை வீடு. காற்றில் அசைகிற அசோக மரங்கள். வெளியே பளபளக்கிற கார்கள் நிற்கின்றன. பச்சைப் பரப்பில் தோகை விரித்து விசிறி வாழை. கள்ளி வளர்ந்த செயற்கைக்குன்று. அலங்காரத்தொட்டி நடுவே நீரூற்று. தெரிகிற பகுதிகளுக்கு வெட்கப்படுகிற பெண்ணின் சிலை. வெராண்டாவில் பித்தளைத் தொட்டிகள். தலை கீழாய்ப் பிரதிபலிக்கிற வழ வழத்த தரை. பிரபல டைரக்டர் விஸ்வநாத ரெட்டியின் வீடு. அவர் வந்து பார்க்கச் சொல்லி ஒரு வருடம் ஆகிறது. ஆயிரம் கேள்விகளுக்குப் பின் கதவு திறந்தது. வாசல் நாற்காலியில் கல்கத்தாவில் கிடைத்த வெள்ளிக் கோப்பையுடன் லக்ஷ்மிநாராயணன் காத்திருக்கிறான். தகவல் உள்ளே போயிருக்கிறது. பொதுவாய் டைரக்டர் யாரையும் வீட்டில் பார்க்கிறதில்லை.

விரல்கள் வெள்ளிக் கோப்பையைத் தடவிக் கொடுக்கின்றன. கல்கத்தாவில் அகில இந்திய நாடகப் போட்டி. நீதிபதிகளில் மூத்தவரும் முக்கியஸ்தருமான சேட்டர்ஜி மைக்கருகில் போகிறார். யாரோ ஓடி வந்து உயரம் 'சரி' செய்கிறார்கள். ஒரு நல்ல நாடகம் எப்படியிருக்க வேண்டும்? அனைவரையும் பார்த்து விட்டு சேட்டர்ஜி பதில் சொல்லுகிறார். போட்டியின் பல்வேறு நாடகங்களையும் வரிசைப் படுத்தி முடிவுகளை அறிவிக்கிற அமைதி. சிறந்த நாடகம் என்று சொல்லிவிட்டு சேட்டர்ஜி ஒரு கணம் தாமதிக்கிறார். கல்கத்தா அணித்தலைவர் சிரித்து வணங்கி, பரிசுடன் இறங்கிப் போகிறார். சிறந்த டைரக்டர் பரிசும் அவர்களுக்கே போகிறது. சிறந்த கதை என லக்னௌ குழுவினரின் 'ஒரு பிடி சோறு' அறிவிக்கப் படுகிறது. சென்னைக் குழுவினர் ஒவ்வொரு முறையும் பலவீனமாய்க் கைத் தட்டிக் கொண்டிருக்க சேட்டர்ஜி சிறந்த நடிகர் என நிறுத்தி லக்ஷ்மி நாராயணன் பெயரை அறிவிக்கிறார். தமிழன் காதில் இன்பத் தேன் வந்து பாய்கிறது! கடல் போல் ஆரவாரித்து எத்தனையோ கைகள் குலுக்கி லக்ஷ்மிநாராயணன் படி தடுக்கி மேடையேறுகிறான். வங்கியின் சேர்மன் கைகுலுக்குகிறார். கேமராக்கள் மின்னுகின்றன. வெற்றிக் கோப்பையுடன் லக்ஷ்மிநாராயணனைக் குழுவினர் தலைக்குமேல் தூக்குகிறார்கள். உற்சாகத்தில் ராஜாமணி விசிலடித்து நடனமாடுகிறான்.

"சார்!"

லக்ஷ்மிநாராயணனின்



முன்கதைச் சுருக்கம்

லக்ஷ்மிநாராயணன் வங்கியில் வேலை பார்க்கும் பிறவி நடிகன். எனினும் சீக்கிரமே திருமணமாகி குடும்பப் பொறுப்பும் அவன் ஆபீசராக வேண்டும் என்ற மாமனாரின் வற்புறுத்தலும் அவனைக் கட்டுப் படுத்துகின்றன.

வங்கிகளுக்கான அனைத்திந்திய நாடகப் போட்டியில் பங்கேற்று 'சிறந்த நடிகன்' பரிசு பெறுகிறான் லக்ஷ்மிநாராயணன். அவன் நடிப்புத் திறனை உணர்ந்து டைரக்டர் விஸ்வநாத ரெட்டி ஒருமுறை அவனுக்கு வாய்ப்பளிக்க முன்வந்தது நினைவு வருகிறது. அவரைத் தேடிப் போகிறான்....

ம.வே.சிவகுமார்

கவனம் கலைகிறது. தகவல் சொன்ன ஆள் எதிரே நிற்கிறான். டைரக்டர் விஸ்வநாத ரெட்டி அவனை உள்ளே அழைக்கிறார்.

கேடயங்கள் நிறைந்த அலமாரி. போட்டோவில் அறிமுகப்படுத்திய நாயகர்களுடன் விஸ்வநாத ரெட்டி. சால்ஜாப்புகளில் எனக்கு அக்கறை இல்லை. பிளாஸ்டிக் போர்ட் அறிவிப்பு. டைரக்டர் விஸ்வநாத ரெட்டி நிமிர்கிறார். லக்ஷ்மிநாராயணன் அறைக்குள் நுழைந்து வெள்ளிக் கோப்பையை டீப்பாயில் வைத்து நிற்கிறான்.

''என்ன?''

''வணக்கம் சார். லக்ஷ்மிநாராயணன். பாங்க் ஆப் குஜராத். வந்து பார்க்கச் சொன்னீங்க. ஒரு வருஷம் லேட்டு. பெட்டர் லேட் தேன் நெவர்னு ஆங்கிலத்துல அறிஞர்கள் சொல்லுவாங்க. சௌக்யமா சார்? முதல்ல என்னை மன்னிச்சேன்னு ஒரு வார்த்தை சொல்லுங்க சார்.''

''உம்.''

''சராசரி மிடில் கிளாஸ் பேமிலி சார். யாருமே என்கரேஜ் பண்ணலை. பால்ய விவாஹம். டில்லி பொண்ணு ரொம்ப சாது. இல்லாத சொத்துக்கு ஆண் குழந்தையும் பொறந்தாச்சு. ஆக்கவலா நான் பிறவிக் கலைஞன் சார். இத்தனை வயசுக்கப்புறம் போன வாரம்தான் அது எனக்கே தெரிஞ்சுது.''

சிரித்த முகத்தில் கெஞ்சல் தேக்கி லக்ஷ்மிநாராயணன் தொடர்கிறான்.

''இது வெள்ளி கப் சார். கல்கத்தாவிலே கொடுத்தாங்க. ஆல் இண்டியா நாடகப் போட்டி. கிட்டத்தட்ட இருநூத்தம்பது பேர் நடிச்சாங்க. அதுல நான் பெஸ்ட் ஆக்டர் சார். தமிழன் ரிஹர்சலே யில்லாம, கடுகெண்ணெயில ஆஸ்பத்திரி போன மெயின் ஆர்ட்டிஸ்ட் சாமிதுரைக்குப் பதிலா திடீர்னு நடிச்சேன். அலட்சியமா பண்ணினேன் சார். காது நிறைய கைத்தட்டலை ஒரு தடவை கேட்டுட்டேன். இனிமே கேக்காம





''நீங்க எம். எல். ஏ. ஆனதுக்கு அப்புறம் தொகுதியில் எதுவுமே நடக்கலையாமே?''

''ஏன் நடக்கலே? ஒரு தடவை எனக்குப் பாராட்டு விழா நடந்ததே?''

- ஆர். ஆர். பூபதி

இருக்க முடியாது. கொஞ்சம் தயவு பண்ணுங்க சார்.''

டைரக்டர் விஸ்வநாத ரெட்டி கால்களைப் பின்னால் நகர்த்தி எழுந்து கொள்கிறார். வெறும் விளையாட்டுப் பையன்களுக்கு அவரிடம் நேரம் இல்லை. அன்றாடம் எத்தனையோ திறமைகளை அவர் பார்க்கிறார். வேகமாய் பைக்கில் தாவுகிறவன். உயரத்திலிருந்து தயங்காமல் குதிக்கிறவன். பாடுகிறவன். படம் வரைகிறவன். மலிந்து கிடக்கிற திறமைகளை விடவும் உலகில் வீணாகிற பொருள் வேறு எதுவும் இல்லை. ஒரு அசைவில் அவனைப் பற்றிச் சென்ற ஆண்டே அவருக்குப் புலப்பட்டு விட்டது. ஆனால் அவன்தான் வரவில்லை. வாழ்வில் அதிர்ஷ்டம் ஒரு முறைதான் கதவு தட்டும். அது தட்டிய போது அவன் திறக்கவில்லை. படம் அடுத்த வாரம் ரிலீஸ். வாய்ப்பு தானே? அலைந்து பெறட்டும். திறமையை உணர்ந்து கொண்டான் அல்லவா? நல்லது. இனி அலைந்து அலைந்து என்றேனும் தற்கொலை எண்ணம் வரும். அன்றைக்கு அவன் வரட்டும். அப்போது பார்க்கலாம்.

தேக்கிய கோபத்தில் பேசி விட்டு டைரக்டர் வெளியே போகிறார். அவர் வார்த்தைகளில் விரைத்து லக்ஷ்மிநாராயணன் நிற்கிறான். ஜன்னலில் வெயில் பட்டு வெள்ளிக் கோப்பை மின்னுகிறது. அதை அணைத்தாற் போல் எடுத்துக் கொண்டு லக்ஷ்மிநாராயணன் சைக்கிளில் வில்லிவாக்கம் திரும்புகிறான்.

ரயில் பாதையின் அருகே விஜயலக்ஷ்மியின் தகப்பனார் வந்து கொண்டிருக்கிறார். வீட்டுச் சொந்தக்கார நவகோடி அம்மாவிடம் சொல்லி வைத்து எதிர் வீட்டுக்கே வாடகைக்கு வந்து விட்டார். ஓய்வு நாட்கள் புற நகரில் அமைதியாகக் கழியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒற்றையடிப் பாதையில் லக்ஷ்மிநாராயணன் கையில் வெள்ளிக் கோப்பையுடன் சைக்கிளில் எதிர்ப்படுகிறான். மீன்மார்க்கெட் வருவதற்கு முன்னரே விஜயலக்ஷ்மியின் தகப்பனார் முகம் கருங்கி விடுகிறது.

தெருக் கதவில் சைக்கிள் மோதவில்லை. யோசனையில் லக்ஷ்மிநாராயணன் வண்டியை ஸ்டாண்ட் போட்டு நிறுத்துகிறான். சப்தம் கேட்டு எட்டிப் பார்த்து விஜயலக்ஷ்மி முகம் மலர்கிறாள். கையில் குழந்தை காட்டி தகப்பனைச் சிரிக்க வைக்கிறாள். உட்கார்த்தி மடியில் வைத்துச் சமையலறைக்கு நகர்கிறாள். காப்பி கலந்து அவள் திரும்புகிற போது லக்ஷ்மிநாராயணன் உற்சாகமாய்க் குழந்தையிடம் விளையாடிக் கொண்டிருக்கிறான். தெருவைக் கடந்து விஜயலக்ஷ்மியின் தாயார் மத்தியானம் டிபனுக்கு இட்டிலி மாவு கொடுத்துப் போகிறாள்.

மாலை நான்கு மணி. வெளியே ரிக்ஷா வந்து நிற்கிறது. லக்ஷ்மிநாராயணன் சட்டையெடுத்து, புன்னகை அணிந்து வெளியே வருகிறான். அவன் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்த தொலைக்காட்சிப் பெட்டி வந்து இறங்குகிறது. பேச்சுக் குரலில் மாமனார் எட்டிப் பார்க்கிறார். இரண்டு பேர் டீவி பெட்டியை வண்டியிலிருந்து இறக்குகிறார்கள்.

''நம்ம வீட்டுக்கா?''

விஜயலக்ஷ்மியின் முகத்தில் மகிழ்ச்சியில் ஆச்சரியம் கலக்கிறது.

''ஆமா.''

''சொல்லவேயில்லை?''

''தமிழன் சொல்லமாட்டான். செஞ்சு காட்டுவான்.''

''காசு?''

''சாமான்யன்னு நெனைச்சியா? கால் காசு உத்தியோகம்னாலும் கவர்ன்மெண்ட் உத்தியோகம். பாங்க் வேலைன்னா சாதாரணமா? காலைல லோன். மத்தியானம் ஃபேன். பன்னெண்டு மாசம் பிடிக்க முடிக்க இப்ப டீவி. சந்தோஷம் தானே?''

''உம்!''

''அதான் வேணும்.''

''இல்ல... அப்பா வீட்டிலே டீவி பார்க்கலாம்னு சொன்னார்.''

''நெனைச்சேன். படத்தைக் காட்டி பாசத்தை வளர்க்கலாம்னு நெனைக்கிறாரா உங்கப்பா? நடக்காது. தமிழன் சுயமரியாதையைப் பத்தி அவருக்குத் தெரியலே. எதிர்லே வீடு பாத்த உடனே அவரு எண்ணத்தை நான் புரிஞ்சுக்கிட்டேன். அவ்வளவும் பகுத்தறிவு. சும்மாவா? தோ பார். முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி. மயிலுக்குப் பேகன் போர்வை கொடுத்தான். ஆசை மனைவி உனக்கு நான் டீவி வாங்கித் தந்திருக்கேன். ஆபிஸ்லேர்ந்து நான் வர்ற

துக்கு வேட்டானாலும் பார்த்துக்கிட்டு இரு. அனாவசியமா உங்கப்பா வீட்டுக்குப் போகாதே.''

''ஏன்?''

''தாட்சாயணி. நான் சொல்வதைக் கேள். தட்சன் என்னை அவமானப்படுத்தி விட்டான்.''

''சரி, சரி.''

''சிவம் இல்லையேல் சக்தி இல்லை.''

''சக்தி இல்லையேல் சிவம் இல்லை.''

''தாட்சாயணி!''

''என்ன?''

''சிவம் பெரியதா? சக்தி பெரியதா?''

விஜயலக்ஷ்மி சிரித்துக் கொண்டே பதில் சொல்கிறாள்.

''சிவமும் பெரியது. சக்தியும் பெரியது.''

மாடியில் நவகோடி அம்மாவிடம் அனுமதி பெற்று, ஆண்டனா மாட்டி, திசை சரி செய்து ஆட்கள் இறங்குகிறார்கள். பெட்டியை நேரில் பார்க்க வெள்ளை மனத்தில் நவகோடி அம்மாளும் இறங்கி விடுகிறாள். விளையாட்டாய்க் கேட்டதற்கு உடன் விஜயலக்ஷ்மி மைசூர் பாக் கிண்டுகிறாள். மாமனாரும், மாமியாரும் ஒரு நடை வந்து பார்க்கிறார்கள். வந்தாரை வாழ வைக்கும் தமிழ் நாட்டில் ரிக்ஷாவில் வந்தவர்களுக்கும் சேர்த்து டீ தயார் செய்யப்படுகிறது.

''இப்ப போட்டு பார்க்கலாமா?''

''பாருங்க.''

லக்ஷ்மிநாராயணன் டீவியைப் போடுகிறான். ''ஸக்ஸஸ்!''

பராசக்தியில் குருநாதர் சிவாஜிகணேசன் பேசிய முதல் வசனம்.

''ஸக்ஸஸ்.''

வெறித்தனமான சிரிப்பு. இரண்டு காலி சாராய்ப் பாக்கெட்டுகளும் வெளியே காலியாய்த் துருத்திருக்கின்றன. இளகிய குரலில் சிவாஜி மேலும் சிரிக்கிறார். லக்ஷ்மிநாராயணன் புல்லரித்து நிற்கிறான். கடுகடுத்த மாமனார் முகம் தவிர அனைவரின் முகமும் சிரிப்பாகவே இருக்கிறது.

''**வி**ஜயலக்ஷ்மி.''

''ம்?''

''தூங்கிட்டியா?''

''ம்?''

''தூங்கிட்டியான்னு கேட்டேன்.''

''ம்ஹூம்.''

''லைட்டைப் போடட்டுமா?''

''ம்.''

லக்ஷ்மிநாராயணன் எழுந்து விளக்கைப் போட்டு நிற்கிறான்.

''ஸக்ஸஸ். ஹஹ்ஹஹ்ஹா.''

''ஷ். குழந்தை.''

தூளியில் குழந்தை வட்டமாய் மூத்திரம் பெய்து நெளிகிறது. விஜயலக்ஷ்மி எழுந்து வேறு துணி மாற்றுகிறாள். இரவு விளக்கில் லக்ஷ்மிநாராயணன் படுத்துக் கொள்கிறான்.

''விஜயலக்ஷ்மி.''


''ம்.''

''உன்னை ஒண்ணு கேக்கட்டுமா?''

''ம்.''

லக்ஷ்மிநாராயணன் இருளில் எழுந்து உட்கார்ந்து கொள்கிறான். பளபளக்கிற அவன் கண்களை வியந்தபடி விஜயலக்ஷ்மி மேற்கொண்டு எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள்.

(தொடரும்)



வட்டமேஜை

பி.ஜே.பி.க்கு ஆலோசனை அவசியம்தானா?

◆ ''நினைவில் நிற்கும் 100 பேர்கள்'' - நல்ல தேர்வு. அவர்களுக்குத் தாங்கள் அளித்திருந்த அடிக்குறிப்புகள், 'குறள்' போன்று நறுக்குத் தெறித்தாற் போலிருந்தன!

கருங்காலி, பி. கார்த்திகேயன்.

◆ ''நினைவில் நிற்கும் 100 பேர்களில் நூறாவது ஆளாக ஜில்லு-ஜானுவை நான் போட்டிருக்கிறேன். எப்படி செலக்ஷன்?''

தஞ்சாவூர், வளர்மதி ஆசைத்தம்பி.

◆ நினைவில் நிற்கும் 100 பேர்கள் படத் தொகுப்பு சிறப்பாக இருந்தது. கபில்தேவ் 400 விக்கெட்களைத்தான் கடந்துள்ளார். 'ஹேட்லியின் சாதனையை எட்டிப் பிடிக்க வெற்றி நடை போட்டுச் செல்கிறார்' என்று குறிப்பிட்டிருக்கலாம்.

திருச்சி - 21, கீதா பஞ்சு.

◆ ஒரு பெண்ணின் மனம் எவ்வளவு அழுத்தமானது, ஆழமானது என்பதைத் தெளிவாக விளக்கியது ''புயல்'' சிறுகதை!

மேட்டூர் அணை, ஆர். கருணாகரன்.

◆ அடிப்படையில் ''மனிதன்'' சிநேகத்துடன் இருக்கவே விரும்புகிறான் என்ற உண்மையைத் துல்லியமாக - உணர்வுபூர்வமாக உணர்த்தி, அனைவர் மனங்களிலும் இடம் பிடித்த சிறுகதை சோம. வள்ளியப்பனின் ''பாதிப்புகள்''.

எழில்நகர், சையத் அலி.

◆ 'தூரத்துச் சொந்தம்' பட விமர்சனம் தயாரிப்பாளருக்கு : விசனம்; வாசகர்களுக்கு : வித்தியாசம்!

அரகண்டநல்லூர், ஆர். விஜி.

◆ மனத்தைத் தொடும் வகையில் இருந்தது மத ஒற்றுமையை வலியுறுத்திய கலைசக்கிழாரின் கவிதை.

கொணவட்டம், கே. ஆர். தேவேந்திரன்.

◆ முஸ்லிம்கள் தனிச் சட்டம், ஷாபானு வழக்கு சம்பந்தப்பட்ட விளக்கம், பலதார மணம் ஆகியவை பற்றி இந்துமத நண்பர்களும் புரிந்து கொள்ளும்படி அழகான முறையில் அப்துல்சமது விளக்கமளித்திருக்கிறார்.

திருச்சி - 6, எம். கதிஜாஹனீபா.

◆ சிவில் சட்டங்களுக்கு மட்டும் ஷரியத்தைத் துணைக்கு அழைக்கும் ஸமது, கிரிமினல் சட்டங்களுக்கு ஏன் ஷரியத் பற்றி மூச்சு விட மறுக்கிறார். சட்டத்துக்குப் புறம்பாக அரசியல்வாதிகள் ஒன்றுக்கு மேற்பட்ட தாரங்களை வைத்துக் கொள்வது வேறு. சட்டமே அனுமதிப்பது என்பது வேறு. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்துக்கு ஏனைய இஸ்லாமிய நாடுகள் திட்டம் தீட்டி அமல்படுத்தும் போது இந்திய முஸ்லிம்கள் மதம் அனுமதிக்காது என்பது எப்படி?

சிதம்பரம், ஜி. பி. ஸ்ரீதர்.

◆ மனம் ஒன்றுபட மதம் தடையில்லை. நூற்றுக்கு நூறு சரி. பிரச்னை அதுவல்ல. "All are equal. But some are more equal than others' என்பார்கள். மைனாரிட்டிச் சலுகைகள் - 370 பிரிவு - தனி மதச் சட்டம் இப்படி நிரம்ப வேறுபாடுகளை நீக்கி விட்டால் மனம் ஒன்றுபடக், கொஞ்ச நஞ்சம் பாக்கியிருக்கும் தடையும் நீங்கி விடும்!

கம்பரசம்பேட்டை, என். பாலு.

◆ துணை அமைப்புகளுடன் சேர்ந்து மிகவும் துல்லியமாகத் திட்டமிட்டே மசூதி இடிப்பை பி.ஜே.பி. நடத்தியுள்ளது. இது உள்ளங்கை நெல்லிக்கனி. எனவே பி.ஜே.பிக்குத் தாங்கள் தலையங்கத்தில் கூறிய ஆலோசனைகள் ஆச்சரியமே அளித்தன.


திருச்சி - 17, பப்லு பரத்வாஜ்.


◆ ''தம்மை நாலாபுறமும் முஸ்லிம் நாடுகளே சூழ்ந்திருக்க, இங்குள்ள முஸ்லிம்களின் மனம் நோகச் செய்வதும் பகை உணர்வை வளரச் செய்வதும் சாணக்கியம் ஆகாது'' என்று தங்கள் தலையங்கத்தில் கூறியுள்ள வாசகம், இதுவரை, அயோத்தி பிரச்னையைப் பொருத்தவரை வெளியான பத்திரிகைக் கருத்துக்களில் இல்லாத, துணிவான ஒரு புதிய கருத்தாகும்.

திருச்சி, கண்ணம்மா இராமசாமி.

◆ கேள்வி பதிலில் முஸ்லிம் லீக் தலைவர்களுடன் காமகோடிப் பெரியவர்களை ஒப்பிட்டு எழுதியிருப்பது வேதனைக்குரியது. மசூதியைத் திரும்பக் கட்டுவதனால் பிரச்னை தீர்ந்து விடாது. ஆனால் வலுப்பெற்று மதக் கலவரங்கள் மூளும். இதைத்தடுக்கவே பெரியவர்கள் ஆலோசனை வழங்கி இருக்கிறார்.

சென்னை - 1, ஆர். வீராஸ்வாமி.


100வது ஆபரேஷன்
திரையுலகில் கொடிகட்டிப் பறக்கிறார்கள் சில டாக்டர்கள்... சினிமா உலகத்திலுள்ள ஒருவர் டாக்டரானால்....
அண்ணன் சூப்பர் டாக்டர் சூரியகாந்துக்கு ரசிகர்மன்றம் சார்பாக இந்த மாலையை அணிவிக்கிறேன்!
பேஷண்ட் 137.. ஆபரேஷன் 2
டாக்டருக்கு இப்படி ஆரம்பிச்சாத்தான்
இன்னிக்கி பாக்ஸ் ஆபீஸ் கலெக்ஷன் எவ்வளவு? எடுங்க..எடுங்க!
ஆங்கிள்தான் பார்க்கிறேன்!
என்ன டான்ஸ் ஆட ஆரம்பிச்சாட்டாங்க?
வெள்ளையுடை தேவதைகள்





சோகத்தை வென்று சிரிக்க வைத்த சார்லி

அப்பா பாட்டிலுக்கு அடிமை! அம்மா மேடைப் பாடகி. ஐந்து வயது மகன் சார்ல்ஸ் அம்மாவின் நிகழ்ச்சிகளுக்கு உடன் போவான்.

மண வாழ்க்கையில் சந்தித்த ஏமாற்றங்கள் வதைக்கவே அம்மாவின் குரல் கம்மியது. ஒரு நிகழ்ச்சியின் போது மேடையில் ஏறியபின் பாட முடியாமல் அவள் நிறுத்திவிட, சபை ரகளை பண்ண ஆரம்பித்தது. மானேஜர், சிறுவன் சார்லியை மேடைக்கு அழைத்தார். சபைக் கூச்சமின்றி அவன் பாடினான். அம்மாவைப் போல் அச்சாகப் பாடினான். நெஞ்சை அள்ளும் பிஞ்சுக் குரலில் அவன் 'பெரியவர்களுக்காகப் பெரியவர்களைப் போல்' பாடக் கேட்ட சபை ஆரவாரித்தது. நோட்டும் சில்லறையுமாய்ப் பணத்தை மேடை நோக்கி வீசியது!

பார்த்தான் சார்ல்ஸ்; பாடுவதை நிறுத்தினான். ''முதலில் பணத்தையெல்லாம் பொறுக்கி எடுத்துக் கொள்கிறேன்; அப்புறம் பாடுகிறேன்'' என்று சபையிடம் அறிவித்துவிட்டு அதி வேகமாகப் பொறுக்க

ஆரம்பித்தான்.....

சபை இதைப் பெரிய ஹாஸ்யமாகக் கருதி விலா வலிக்கச் சிரித்தது. மானேஜர் ஒரு கைகுட்டையை விரித்து அதில் பணத்தைப் பொறுக்கிப் போட உதவினார். சார்லஸுக்குப் பயம் வந்தது. 'இவரே பணத்தையெல்லாம் எடுத்துக் கொள்வாரோ...?' மனத்தில் எழுந்த இக் கேள்வியைச் சபையை நோக்கிக் கேட்டான். சிறுவனின் கவலை உணராத சபை இன்னும் சிரித்தது. பணத்தையெல்லாம் சிறிய மூட்டையாகக் கட்டிக் கொண்டு மேடையிலிருந்து அகன்ற மானேஜரை சார்ல்ஸ் கவலையுடன் அவசரமாகப் பின் தொடர்ந்த போது சபையின் சிரிப்பு உச்சத்தை எட்டியது!

திரை மறைவில் அமர்ந்திருந்த அம்மாவிடம் பணம் தரப்பட்டதைப் பார்த்த பிறகே சார்ல்ஸ் மேடைக்குத் திரும்பினான். மீண்டும் பாட ஆரம்பித்தான்.



ஸர் சார்லி சாப்லினின் சிரிப்புலக வாழ்க்கை மேற்படி சம்பவத்துடன்தான் ஆரம்பமானது. சாப்லினுடைய வாழ்க்கையைத் திரைப் படமாக்கி வரும் (Chaplin) 'காந்தி' புகழ் ரிச்சர்ட் அட்டன்பரோ இச் சம்பவத்தை ஒரு முக்கிய நிகழ்ச்சியாகத் தமது படைப்பில் சேர்த்திருக்கிறார். ராபர்ட் டவ்னி ஜூனியர் சாப்லினாக நடிக்கும் இப்படத்தில் அவருக்கு அம்மாவாக நடிப்பவர் நிஜ சாப்லினின் மகள் ஜெரல்டின் சாப்லின்!

லண்டனில் 1889 இல் பிறந்து ஏழ்மையில் உழன்ற குழந்தை சார்லி, 1972 இல் அகாடமி அவார்ட் பெற்றது வரையில் ஏராளமான நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துள்ளார் அட்டன்பரோ.

அட்டன்பரோவின் தயாரிப்பு முறை மட்டுமின்றி சாப்லினின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் 'சாப்லின்' திரைப்படத்துக்குச் சுவை சேர்க்கின்றன:

மேற்குறிப்பிட்ட சம்பவத்துக்குப் பிறகு விரைவிலேயே மன நலம் குன்றிய அம்மாவைப் பிரிந்து அநாதை இல்லத்தில் சேர்ந்தான் சாப்லின்.

கண்ணியமான, வசதி மிக்க குடும்பத்தில் பிறந்த குழந்தை, தன் குடும்பம் படிப்படியாக எல்லாச் செல்வத்தையும் செல்வாக்கையும் இழப்பதைக் காண, அந்த அனுபவம் அவனிடத்தில் பெரிய தாக்கத்தை உண்டு பண்ணியது.

மேடையேறி ஆடிப் பாடி பிறரை மகிழ்வித்த போது இழப்புகளிலிருந்தும் மன வேதனைகளிலிருந்தும் தற்காலிகமாக விடுதலை கிடைத்தது எனச் சீக்கிரமே உணர்ந்தான் சார்ல்ஸ்.

எட்டாவது வயதில் தொழில் ரீதியான மேடைக் கலைஞனாக ஒரு நாடகக் கம்பெனியில் சேர்ந்தான்.

பதினேழாம் வயதில் ஃப்ரெட் கார்னோ கம்பெனியில் சேர்ந்து அமெரிக்காவில் நிகழ்ச்சிகள் அளிக்கச் சென்றான். சார்ல்ஸின் திறமையுணர்ந்து பல அமெரிக்க நிறுவனங்கள் அவனை அழைத்தன. 175 டாலர் வாரச் சம்பளத்துக்கு ஒரு நிறுவனத்தில் சேர்ந்து, சீக்கிரமே பல நிறுவனங்கள் மாறி, வாரம் பத்தாயிரம் டாலர் சம்பாதிக்கும் நிலைக்கு உயர்ந்தான். 1918 இல் ஃபர்ஸ்ட் நாஷனல் நிறுவனம், இரண்டு திரைப்படங்கள் தயாரிக்க ஒரு மில்லியன் டாலர் தர முன்வந்தது! அவ்வளவு வரவேற்பு சாப்லினின் 'குச்சி ஏந்திய கோமாளி' பாத்திரத்துக்கு!

நான்கு முறை மணந்து கொண்ட சாப்லினின் வாழ்க்கையில் வேறு பல புயல்களும் வீசின. 'சைலண்ட் சினிமா' சகாப்தம் முற்றுப் பெற்று சவுண்ட் டிராக் படங்கள்



✱ அட்டன்பரோ

வர ஆரம்பித்தபோது புது தொழில் நுட்பத்துக்கு அவரால் ஈடு கொடுக்க முடியவில்லை. கம்யூனிஸ சித்தாந்தங்களை அவர் ஆதரிப்பதாக அவர் பேரில் குற்றச்சாட்டுகள் எழுந்தன. அமெரிக்காவிலேயே கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்தவர் அமெரிக்கக் குடியுரிமை பெற்றுக் கொள்ளவேயில்லை - இதுவும் துரோகமாகக் கருதப்பட்டது. வெளிநாட்டுப் பயணம் முடித்துத் திரும்பியவருக்கு விஸா மறுக்கப்பட்டது!

வெறுத்துப் போய் 'இனி அமெரிக்கா திரும்ப மாட்டேன்' என வெளியேறி ஸ்விட்ஸர்லாந்தில் தங்கிய சாப்ளின், அகாடமி விருது வழங்கப்பட்டபோது அந்த வைராக்கியத்தை உதறிவிட்டு வந்து அதைப் பெற்றுக் கொண்டார். 1975 இல் பிரிட்டிஷ் அரசி 'சர்' பட்டம் வழங்கினார் சாப்ளினுக்கு....

இளமையிலிருந்தே ஏராள துக்கத்தையும் மனத் துன்பங்களையும் உள்ளத்தில் சகித்துக் கொண்டிருந்தவர், உலகையே சிரிக்க வைத்ததுதான் ஆச்சர்யம்.

– எஸ். ஆர்.





ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

கல்கி, ஜனவரி 10, 20 1943

யோக ஜாதகம்!

தமிழ் இசை இயக்கத்தின் பெருமை, பொறுப்பு அனைத்தையும் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் தலையிலேயே சுமத்தி விடுவதென்று சிலர் சதியாலோசனை செய்திருப்பதாய்த் தோன்றுகிறது. உண்மையில், தமிழ் மக்களின் ஏகோபித்த உள்ள உணர்ச்சிதான் அந்த இயக்கத்துக்குக் காரணமாகும். அந்த உணர்ச்சியின் முக்கிய பிரதிநிதிகளில் ஒருவராக இருப்பதினாலேயே ராஜா ஸர் அவர்கள் இன்று தமிழ் மக்களின் அபிமானத்துக்குப் பாத்திரமாகியிருக்கிறார்.



இதற்கு முன்னால் எத்தனையோ லட்சக் கணக்கில் செய்த தர்மங்களைக் காட்டிலும், தமிழிசை இயக்கத்துக்கு அவர் அளித்த சில ஆயிரம் ரூபாய் நன்கொடை தமிழர்களின் உள்ளத்தை அதிகம் கவர்ந்து விட்டது வெளிப்படை. குருட்டுத்தனமாகத் தமிழிசை இயக்கத்தைத் தாக்குகிற புண்ணியவான்கள் தமிழ் மக்களிடையில் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரின் செல்வாக்கை ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கி வருகிறார்கள். இப்படி எதிரிகளின் விரோதத் தாக்குதலினால் கூட நன்மையை அடைந்து வருகிறவர் எத்தகைய யோக ஜாதகக்காரராயிருக்க வேண்டும்?

- அட்டைப்பட விளக்கம்

பரம ஔஷதம்!

உணவுப் பொருள் நிலைமை சம்பந்தமாக நாட்டில் எழுந்துள்ள தாபக் கதறல்களுக்கும் பரிதாபக் கூக்குரல்களுக்கும் சர்க்கார் அப்படியொன்றும் செவி சாய்க்காமல் போய்விடவில்லை. ''நாங்கள் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறோம்'' என்று சர்க்கார் பதில் சொன்னார்கள். ''கவனிப்பதைத் தவிர வேறு ஏதாகிலும் செய்ய முடியுமா?'' என்று சில பிடிவாதக்காரர்கள் மேலும் கேள்விகள் கேட்கவே, சர்க்கார் பாடு கொஞ்சம் திண்டாட்டமாகத்தான் போயிற்று.

''உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு நான் யோசனை சொல்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டு சமீபத்தில் நமது சென்னை சர்க்கார் அட்வைஸர் மிஸ்டர் ரூதர்போர்டு முன் வந்தார், ''தினம் ஒரு வேளை லங்கணம் போட்டு விடுங்கள். எல்லாம் சரியாய்ப் போய்விடும்'' என்று அவர் கூறினார். இப்பொழுது ஸிந்து மந்திரி ஒருவர் ''அதிகமாகச் சாப்பிடாதீர்கள்'' என்று கதறுகிறார்.

''லங்கணம் பரம ஔஷதம்'' என்று தமிழ்நாட்டில் ஒரு பழமொழி உண்டு. ஒரு நாள் ஒரு வேளை லங்கணம் கிடப்பதால் உணவுப் பொருள் பஞ்சத்திற்குச் சிறந்த ஔஷதமாயிருக்குமென்று மேற்படி பிரமுகர்கள் நிச்சயமாகச் சொல்வார்களானால், அதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், ஒருவேளை லங்கணத்தை விட, மூன்று வேளையும் உண்ணாவிரதத்தைக் கைக்கொண்டால் உணவுப் பஞ்சம் சர்வ நிச்சயமாகத் தீர்ந்து விடுமென்று தோன்றுகிறது.

- என்ன சேதி

அகாடமி நிர்பந்தம்

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி தமது புரோகிராமில் நாலு தமிழ்க் கீர்த்தனங்களும், மற்றக் கீர்த்தனங்கள் நாலும் போட்டு அனுப்பினார். தமிழல்லாத கீர்த்தனம் இன்னொன்றாவது புரோகிராமில் சேர்த்துவிட வேண்டுமென்று அகாடமி நிர்வாகிகள் ரொம்ப ரொம்ப வற்புறுத்தினார்கள். (ஒரு தெலுங்குப் பாட்டு அதிகமானால் கர்நாடக சங்கீதம் காப்பாற்றப்படும் என்று ஏன் நினைத்தார்களோ, தெரியவில்லை!) தங்கள் இஷ்டப்படி பாட வைக்கத் தங்களுக்குச் சட்ட பூர்வமான உரிமை இருப்பதாகக் கூடப் பயமுறுத்தினார்கள். இதற்கெல்லாம் எம். எஸ். அசைய



வில்லை. எட்டு கீர்த்தனங்களில் நாலு தமிழாய்த்தான் பாடினார். அவருடைய கச்சேரிக்குத்தான் எல்லா நாட்களையும் விட அதிகம் பேர் வந்திருந் தார்கள்.

அகாடமியார் இத்தகைய பாஷை துவேஷக் கொள்கையை அனுசரிப்பதினால் ஒன்றும் மோசம் முழுகிப் போய் விடா தென்பது நிச்சயம். பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகம் அஸ்தமித்து விடாது. கிழவி தன் சேவலை எடுத்துக் கொண்டு போய்விட்டால் ஊரில் பொழுது விடியாமல் இருந்து விடாது. தமிழ் மக்களின் ஏகோபித்த விருப்பம் என்னும் மகத்தான பலம் தமிழ் இசை இயக்கத்துக்கு இருக்கிறது. தாய்பாஷைத் துவேஷங் கொண்ட சிலர் எவ்வளவுதான் முயன்றாலும் தமிழிசையின் வளர்ச்சியைத் தடுத்துவிட முடியாது. தமிழிசையினால் கர்நாடக சங்கீதத்தின் பெருமையும் குன்றி விடாது. உயர்ந்த சங்கீதமும், உயர்ந்த சங்கீதத்தை அநுபவிக்கும் ரஸிகத் தன்மையும் தமிழிசை இயக்கத்தினால் தமிழ் மக்களிடையில் மேலும் மேலும் பரவும். இதனால் கர்நாடக சங்கீதமும் மேன்மையடையும்.

- ஆடல்பாடல் - ''கர்நாடகம்''

ஒரு நாள் ஆராதனை

"ஒரு விஷயம் உங்களைக் கேட்க வேணுமென்றிருந்தேன். கர்நாடக சங்கீத உலகில் எத்தனையோ சாஹித்ய கர்த்தாக்கள் இருந்திருக்கிறார்களே? தியாகராஜஸ்வாமிகளிடம் மட்டும் வித்வான்களுக்கு இவ்வளவு பக்தி சிரத்தை ஏன்? அவருடைய ஆராதனை உற்சவத்தில் இவ்வளவு ஊக்கம் ஏன் காட்டுக்கிறார்கள்?'' என்றேன்.

''இது தெரியாதா? தியாகராஜஸ்வாமிகளின் ஸாஹித்யங்களைத் தானே நாங்கள் ரொம்ப அதிகமாகச் சின்னாபின்னப் படுத்துகிறோம்! அதற்குப் பரிகாரமாக வருஷம் ஒரு தடவை திருவையாற்றில் ஸ்வாமிகளின் சமாதிக்கு உற்சவம் நடத்துகிறோம்!'' என்று நகைச்சுவையுடன் கூறினார் வித்வான்.



ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் மகான்; மகா பக்திமான்; சித்த புருஷர். கர்நாடக சங்கீதத்துக்கு ஒப்பற்ற சேவையைச் செய்தவர். நவநவமான மெட்டுக்களில், அபூர்வமான ராக தாளங்களில், அற்புதமான ஸாஹித்யங்களைச் செய்திருக்கிறார். அந்த ஸாஹித்யங்களைத் தமிழ் நாட்டு சங்கீத வித்வான்கள் வெகு காலமாகக் கையாண்டு பெயரும் புகழும் அடைந்திருக்கிறார்கள்.



அத்தகைய தியாகராஜ ஸ்வாமிகளிடம் நமது சங்கீத வித்வான்கள் பக்தி கொண்டிருப்பது இயற்கை. வருஷந் தோறும் அவருடைய ஆராதனை உற்சவத்தை நமது சங்கீத வித்வான்கள் அளவிலாத உற்சாகத்துடன் நடத்தி வருகிறார்கள். இந்த வருஷத்தில் காலரா காரணமாகவோ, அல்லது அதிகார அமுல் காரணமாகவோ, ஆராதனை உற்சவம் 2வ ஒரு நாள் மட்டுந்தான் நடைபெறுகிறது என்னும் விஷயம் அநேக வித்வான்களுக்கு மனச் சோர்வை உண்டு பண்ணியிருக்கும். அடுத்த வருஷத்தில் வழக்கம் போல் ஐந்து நாட்கள் சிறப்பாக உற்சவம் நடைபெறுமென்று எதிர்பார்ப்போம்.

- ஆடல்பாடல் - ''கர்நாடகம்''

திவ்யமான யோசனை!

ஐந்து வயது கிட்டு தன் தகப்பனாருடன் கால் பந்து விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தான்.



அவன் : பாரப்பா அங்கே! ஒரு பந்தைப் பிடிப்பதற்காக எவ்வளவு சண்டை! ஏன்? அவாளுக்கெல்லாம் தலைக்கு ஒரு பந்தைக் கொடுத்தால் இந்தச் சண்டையிராதே!

- எஸ். சாமி.
- காலக்ஷேபம்

பொங்கல் நல் வாழ்த்துக்கள் !



நிலையான, நிறைவான வருமானம்...
நிம்மதியான,
நிச்சயமான பாதுகாப்பு!

NEW SPECIAL BENEFIT SCHEMES TO PENSIONERS

AROOR
INTEGRATES FINANCE CORPORATION

Admn. Office: No. 6, Kannadasan Salai, T.Nagar, Madras-600 017. **Ph: 442965**

LEASING ■ HIRE PURCHASE ■ DEPOSIT ■ PROPERTY LOAN

பிக்சட் டெபாசிட் திட்டங்கள்

திட்டம் A: மாத வருமான திட்டம்	
காலம்	வட்டி விகிதம்
12 மாதங்கள்	18%
24 மாதங்கள்	19%
36 மாதங்கள்	21%

பென்சன் தாரர்களுக்கு 1% கூடுதல் வட்டி

ஒரு வருட டெபாசிட்டுக்கு 2 சதவிதமும், இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட டெபாசிட்டுகளுக்கு 4 சதவிதமும் ஊக்கத்தொகை அளிக்கப்படுகின்றது.

திட்டம் B: முதலீடு பெருகிடும் திட்டம்		
காலம்	ஆரம்ப முதலீடு	கால முடிவில் பெருகும் தொகை
25 மாதங்கள்	1000/-	1,442/-
36 மாதங்கள்	1000/-	1,683/-
48 மாதங்கள்	1000/-	1,986/-
60 மாதங்கள்	1000/-	2,338/-

உங்கள் முதலீடு 48 மாதங்களில் இரு மடங்காகின்றது

சிறப்பு அம்சங்கள்

■ முதலீட்டை திரும்பப்பெற உத்திரவாதம் அளிக்கப்படுகின்றது ■ மாதாந்திர வட்டி ■ வட்டிக்கும், முதலீட்டை திரும்ப பெறுவதற்கும் முன் தேதியிட்ட காசோலைகள் வழங்கப்படுகின்றன ■ வெளியூர்களிலுள்ள டெபாசிட்தாரர்களுக்கு வட்டியும், முதலீட்டை திரும்ப பெறுதலும் பாங்க் டிராப்ட் (D.D.) மூலம் வழங்கப்படுகின்றது ■ உங்கள் முதலீடுகள் பாதுகாப்பான முறையில் மறுமுதலீடு செய்யப்படுகின்றது.

ஆரூர் இன்டகரேட்ஸ் பைனான்ஸ் கார்ப்பொரேஷன்

நெ. 6, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை-600 017. போன்: 442965

பஸ்ஸில் வந்த அபாயம்

க. ஒப்பிலியப்பன்

பஸ்ஸில் அத்தனை கூட்டத்திலும், பெண்கள் பகுதியில் பளிச்சென்று நிற்கும் அகிலாவைக் கவனித்து விட்டான் அனந்தராமன். கம்பெனியில் இருவரும் ஒன்றாக வேலை செய்பவர்கள். அகிலாவின் பக்கம் மீண்டும் திரும்பிய போதுதான், அவளைச் சுற்றி நின்ற ஆபத்து அனந்துவுக்குப் புரிந்தது. அவள் பக்கத்தில், பின்புறத்தில் என்று இரண்டு நபர்கள் சற்று வித்தியாசமாகத் தெரிந்தார்கள். பஸ்ஸில் ஏற்படும் குலுக்கலை, கூட்ட நெரிசலை அகிலாவின் பக்கத்தில் இருப்பவன் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அகிலாவின் கழுத்தை லேசாக உரசிக் கொண்டிருந்தான். செயற்கை நெரிசலைப் பின்புறத்திலுள்ளவன் அவ்வப்போது உண்டாக்கி, நண்பனுக்கு உதவிக் கொண்டிருந்தான். அனந்தராமன் அவர்களையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'என்ன இவள்... தன்னைச் சுற்றியிருக்கும் ஆபத்தைக் கூட உணராமல்... குழந்தை போல அப்படி என்ன வெளியில் வேடிக்கை வேண்டிக் கிடக்கு' அகிலாவின் பக்கத்துப் பேர்வழி லேசாக விரலால் அவளின் கழுத்தை... 'ஓ... இவர்கள் செயின் திருடர்கள்... அகிலாவின் கழுத்தில் பளபளக்கும் அந்த கோதுமைச் செயினை அபேஸ் செய்யும் வேலை நடக்கிறது! பேசாமல் அகிலாவைக் கூப்பிட்டு எச்சரிக்கலாமா? வேண்டாம்; பஸ்ஸில் எல்லோரும் பார்ப்பார்கள்... ஜாடை மாடையாகத் தெரிவிக்கலாமென்றால் பஸ்ஸுக்குள் அகிலா பார்த்தால்தானே...'

அனந்தராமன் ஒரு முடிவுக்கு வந்தான்.

அந்த கேடிகளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருப்பது. தப்பித் தவறி அகிலாவின் செயின் மீது அந்த



கேடிகள் கையை வைத்தால், கத்தி, கூச்சலிட்டு அவர்களைக் கையும் களவுமாகப் பிடிப்பது..

அனந்தராமன் நினைத்ததைச் செயலில் காட்ட முற்பட்டான். அப்பொழுதுதான் அந்த அதிசயம் நடந்தது...

பஸ் ஒரு குலுங்கு குலுங்கி சிக்னலில் நின்றது. அந்த சமயம் பார்த்து, அகிலாவின் செயினை விரலில் மாட்டி இழுக்க முயன்றவன், எதேச்சையாக அனந்தராமன் பக்கம் திரும்ப, சட்டென்று கையை இழுத்துக் கொண்டான். தன்னை யாரோ கவனிக்கிறார்கள் என்பது அந்தப் பேர்வழிக்குத் தெரிந்து விட்டது. அனந்தராமன் அதைத் தான் எதிர்பார்த்தான். அப்பாடாவென்றிருந்தது அந்த இரண்டு பேர்வழிகளும் அடுத்த பஸ் ஸ்டாப்பில் இறங்கினதும்...

தாங்கள் இறங்க வேண்டிய இடம் வந்ததும், அனந்தராமனும், அகிலாவும் இறங்கினார்கள்.

''குட்மார்னிங் சார்! என்ன நீங்க இந்த பஸ்ஸிலா வந்தீங்க...?''

''சரியாப் போச்சு! நீங்க நன்னாத்தான் வெளியில பராக்கு பார்த்துண்டு வந்திருக்கீங்க!''

''என்ன சார் சொல்றீங்க...?''

பஸ்ஸில் அவள் பக்கத்தில் நின்று கொண்டு வந்த அந்த இரண்டு பேர்வழிகளைப் பற்றியும், அவளது செயின் போய் விட இருந்ததைப் பற்றியும் சொன்னான் அனந்தராமன்.

''அப்படியா...?'' பயத்தில் கண்களைப் பெரிதாக்கிக் கொண்டு, நெஞ்சில் ஒரு கையை வைத்துக் கொண்டு கேட்ட அகிலா, கோதுமை செயினை, அரிசிப் பல்லால் கடித்துக் கொண்டே அனந்தராமனுக்கு 'தேங்க்ஸ்' சொன்னாள்.

''நாட் அட் ஆல்...'' பதிலுக்குச் சொல்லிக் கொண்டே ஸ்டைலாகப் பாண்ட் பாக்கெட்டில் கையை விட்ட அனந்து 'ஆ'வென அலறினான்.

''ஏன்... என்னாச்சு...?'' அகிலா திரும்பி அனந்துவைப் பார்த்துக் கேட்டாள்.

வாழ்க்கையில் மிகப் பெரிய தர்ம சங்கடம் நம்மைப் பற்றி உயர்வான அபிப்பிராயம் வைத்திருப்பவர்களிடம், நமது பலவீனங்களைச் சொல்வதுதான்...

எனவேதான் அனந்து தனது பர்ஸ் பிக்பாக்கெட் அடிக்கப்பட்டதை மறைத்து, ''ஒன்றுமில்லை... ஒன்றுமில்லை மேடம்'' என்று வழிந்தான்!

வர்மா கமிஷன் தீர்ப்புக்குக் கவர்னர் ராஜினாமா செய்வாரா?

● செ. கற்குவேல், வேடப்பட்டி.

? ''ஜெயலலிதா அரசைக் கலைத்தாலும் எதிர்ப்போம்!'' என்கிறாரே கருணாநிதி?

! அது சரியான கருத்துத்தான். ஜெ போல, நேற்று 356 பிரயோகத்துக்கு மகிழ்வது; இன்று எதிர்ப்பது என்று கலைஞர் தடம் மாறத் தயாரில்லை. அவர் அன்றும் இன்றும் 356ன் எதிரி. 'ஆட்சியைக் கலைக்கக் கூடாது; ஆனால் முதல்வர் மீது ஊழல் குற்றச் சாட்டுக்கள் இருப்பதால் அவர் பதவி விலக வேண்டும்' என்கிறார். அது நடக்கிற காரிய மாகத் தோன்றவில்லை.

● வி. பி. மகராசி, மதுரை.

? வெள்ள நிவாரணமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ஏர், கலப்பை, மண்வெட்டி, உரம், பூச்சி மருந்துகள் ஆகியவற்றில் 'ஜெ' படம் அச்சிடப்பட்டிருந்ததாமே?

! இந்த அமைச்சர்களும் அதிகாரிகளும் பொல்லாதவர்கள். வழங்கப்பட்ட ஒவ்வொரு மணி அரிசியிலும் 'ஜெ' படம் அச்சிடாமல் விட்டு விட்டார்கள் பார்த்தீர்களா? சஸ்பெண்ட் செய்யணும்!

● ஜி. செல்வராஜன், ரிஷிவந்தியம்.

? மக்களில் அநேகம் பேர் அறிவில்லாதவர்கள் என்றும் தலைவர்கள் சிந்தித்துச் செயல்படுவதில்லை என்றும் சமீபத்தில் நாவலர் கூறியுள்ளது பற்றி?

! மக்களை அறிவில்லாதவர்களாக வைத்திருப்பது தலைவர்களின் சுயநலம்தான். தலைவர்கள் சிந்திப்பதில்லை என்பதற்கு நாவலரும் ஓர் உதாரணம்தான்.

● வெங்கட், நாட்டரசன்கோட்டை.

? ''காமராஜரின் வாரிசு வி.பி. சிங்'' என்று சிவாஜி கூறுகிறாரே?

! பாவம், அவர் பழசையும் மறக்கக் கூடாது; புதுசையும் போற்றணும்... என்ன செய்வார்?

● பி. வேலுமணி, மோரூர்.

? சாகித்திய அகாதமி விருது பெற்ற கோவி. மணிசேகரன் பற்றி...?

! ஏற்கெனவே பெற்ற ராஜராஜன் விருதுக்குச் சன்மானம் அதிகம் என்றாலும் அனைத்திந்திய அங்கீகாரத்தை அளிப்பது சாகித்திய அகாதமி விருதே. வாழ்த்துக்கள்.

● வி. சத்தியப்ரியன், சென்னை. ❑

? இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சாதனம் எது?

! எவ்வளவோ துறைகளில் பிரமிக்கத்தக்க எத்தனையோ முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் அந்த வளர்ச்சிகளுக்கு எல்லாம் அடிப்படை, லாடிலைட், கம்ப்யூட்டர் துறைகளில் ஏற்பட்ட புரட்சி! எனவே இவை இரண்டும் இன்று முதலிடத்துக்குப் போட்டி போடுவதாகக் கொள்ளலாம். ஆனால் என்ன முன்னேறி என்ன பயன், மனிதாபிமானம், அன்பு என்ற ஈடு இணையற்ற சாதனத்தைப் பறி கொடுத்து விட்டு நிற்கும் போது!



* ராஜினாமா செய்வாரா?

● ஜி. ஜி. கிருஷ்ணன், விசலூர்.

? அதிகார துஷ்பிரயோகம் செய்தது சம்பந்தமாக நீதிபதி ராமசாமி பதவி பறிபோகுமா?

! போக வேண்டும். அவர் இன்று வரை ராஜினாமா செய்யாதிருப்பதே அதிசயம். அவரிடம் வழக்கு ஏதும் போகாமல் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி கவனித்துக் கொள்வது நல்லது.

● தி. மா. தமிழழகன், திருச்சி.

? அ.தி.மு.க. அரசைக் ''கள்ளச் சாராயக் கும்பல்'' என்று அருணாசலம் வர்ணித்துள்ளாரே?

! 'ஜெ'யும்தான் செயற்குழு - பொதுக் குழு கூட்டத்தில் ஒப்புக் கொண்டு விட்டாரே!

* தடம் மாறாதவர்



* பல்டி அடித்தார்!



* ''காமராஜர் வாரிசு!''



* சதம் எப்படி?





* அகாதமி பரிசு



* லேட்டஸ்ட் வெடிகுண்டு



* பதவி பறிபோகுமா?

● கு. நாகராஜன், குருசாமிபாளையம்.

? "ஃபைல் தூசி என்றால் ஜெயலலிதாவுக்கு ஒத்துக் கொள்ளாது" என்று சந்திரலேகா கூறியுள்ளாரே?

! அதற்காகத்தான் தூசி படியுமுன்னரே ஃபைல் பார்த்து விட வேண்டும் என்பது!

● கே. ஆர். தேவேந்திரன், கொணவட்டம்.

? "அ.தி.மு.க., இ. காங்கிரஸ் கூட்டணியி லிருந்து யார் விலகினாலும் சரித்திரம் அவர் களை மன்னிக்காது" என்கிறாரே வாழப் பாடி?

! பி.ஜே.பி. கோவிந்தாச்சார்யா கடுக்காய் கொடுத்தாலும் கொடுத்தார், "நடந்ததை மறப்போம்" என்று பல்டி அடித்து விட் டாரே வாழப்பாடி! சரித்திரம் மன்னிக் கிறதோ இல்லையோ, இப்போதைக்கு 'ஜெ' மன்னித்து விட்டால் போதும் வாழப் பாடியாருக்கு!

● கே. ஆர். வேலுச்சாமி, அன்னூர்.

? பாபர் மசூதியை இடிக்கத் தமிழ்நாட்டி லிருந்து வெடிகுண்டுகள் கொண்டு செல்லப் பட்டதாகக் கூறுகிறாரே சு. சுவாமி?

! சு. சுவாமியின் லேட்டஸ்ட் வெடிகுண்டு அது! ஒன்று கவனித்தீர்களா, அவர் வெடி குண்டுகள் நின்று வெடிக்கின்றன! இது எப் படியோ!

● கே. என். பாலகிருஷ்ணன், கும்ப கோணம்.

? "நாம் அரசியலுக்கு வந்தது செல்வம் சேர்க்கவா, மக்களுக்குத் தொண்டு செய் யவா என்பதை நெஞ்சைத் தொட்டுக் கேட்டுக் கொள்ளுங்கள்" என்று தம் கட்சியி னரைக் கேட்டுக் கொண்டுள்ளாரே, ஜெ?

! பின்னதற்காக இருந்தால் நிச்சயம் காண்ட் ராக்டுகள் சமாசாரத்தைப் பேசியே இருக்க மாட்டார் ஜெ!

● பி. ஜெயபிரகாஷ், வேட்டைக்காரன்புதூர்.

? வர்மா கமிஷன் தீர்ப்புக்குப் பொறுப் பேற்று கவர்னர் ராஜினாமா செய்வாரா?

! இதற்குள் நாலு தடவை செய்திருக்கலாம்; இனிமேலா செய்யப் போகிறார்? ஹூம்!

● எஸ். ரவி, கொ. கருப்பூர்.

? ஜெயலலிதா பெயரில் நெல் வந்து விட் டதே?

! சில தலைவர்கள் மக்களின் இதயங்களில் இடம்பிடிப்பார்கள். வேறு சிலர் வயிற்றில் தான் வாசம் புரிய வருவார்கள் போலும்!

● பா. சிவகுமார், குஞ்சரம்.

? கபில்தேவின் சதம் எப்படி?

! ஆபரேஷன் சக்ஸஸ்; ஆள் குளோஸ் கதையா னதுதான் வருத்தம்.

● என். ஜெய குமார், கழனிவாசல்.

? கருணாநிதிக்குப் பத்தாவது இடமும் அத் வானிக்குத் 98ம் இடமும் அளித்துள்ளீர் களே? (நினைவில் நிற்கும் நூறு பேர்)

! அது முக்கியத்துவம் கருதி வரிசைப்படுத் தப்பட்ட பட்டியலும் அல்ல; நல்லது செய் தோருக்கு மட்டுமே இடமளித்த தொகுப் பும் அல்ல. நினைவில் நிற்பவர் என்ற அள வில் மட்டுமே தொடுக்கப்பட்ட கதம்பம்.

● டி. சூர்யமூர்த்தி, சிதம்பரம்.

? "கையை ஒடிப்போம்" என்று பேசிய ஜெ; "கூட்டணி தொடரும்" என்று கூறிய நரசிம் மராவ் - ஒப்பிடுங்கள்.

! முன்னதில் யதார்த்தத்தை மறந்த ஆணவம் பிரதிபலிக்கிறது. பின்னதில் யதார்த்தத்தை உணர்ந்த அடக்கம் தொனிக்கிறது.

● பி. ராஜசேகரன், மதுரை - 10.

? புத்தாண்டில் தங்களை நெகிழ வைத்த நிகழ்ச்சி எது?

! ரேஷன் கார்டைப் புதுப்பிக்கிறேன் என்று தமிழக மக்களுக்கு அளிக்கப்பட்ட பலதரப் பட்ட துன்பம் ஒன்று; "டிரிப்பிங்" என்ற நாகரிகப் பெயரில் தென்னகம் எங்கும் நடந்த இருட்டடிப்பு இரண்டு. முன்னதில் ஏராள மனித மணிகள் விரயமாயின. பின்ன தில் இல்லங்களில் மட்டுமின்றி தொழி லகங்களிலும் பணிக்கு இடையூறு ஏற்பட்டு கோடிக்கணக்கில் நாட்டுக்கு நஷ்டம் உண் டாயிற்று.

● மு. இரவிச்சந்திரன், சேலம் - 9.

? அஷாருத்தீனை மாற்றி விடுவதால் மட்டும் இந்திய கிரிக்கெட் அணி பலம் பெற்று விடுமா?

! புதிய பலம் பெறுவது என்பது வேறு; இருக்கிற பலத்தைச் சரியாகப் பிரயோகிப் பது என்பது வேறு. 'டீம் ஸ்பிரிட்டை' உரு வாக்கி, இருக்கின்ற சக்திகளை இன்னும் சிறப்பாக இயங்கச் செய்ய அவ்வப்போது காப்டனை மாற்றுவது நடைமுறைதான். ஆனால் கபில்தேவை விட்டால் இன்று டீமில் வேறு யாருக்குக் காப்டனாகும் தகுதி இருக்கிறது!

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
வி. சத்தியப்ரியன்,
146, ஆர். வி. நகர்,
கொடுங்கையூர், சென்னை - 51.

சேதி கேட்டோ?

அமைச்சரின் மூன்று மனைவிகள்!



* மாணி

“எனக்கு மூன்று மனைவிகள்” என்று ஓர் அமைச்சர் பேசினார். “முதல் மனைவி எனது தொகுதி ‘பாலா’; இரண்டாம் மனைவி இந்தக் கேரள மாநிலம்; மூன்றாவது நான் தாலி கட்டிய மனைவி.”

- இவ்வாறு கூறிய கேரள அமைச்சர் கே. எம். மாணி பைபிளிலிருந்து மேற்கோள் காட்டினார் : “ ‘நீ சாப்பிடா விட்டாலும் அவளுக்கு ஊட்டு’ என்று பைபிளில் சொல்லப்பட்டுள்ளது. அதைத்தான் என் மூன்று மனைவியரிடத்திலும் கடைப்பிடித்து வருகிறேன்” என்றார்.

தொடர்ந்து 25 ஆண்டுகளாக கேரள சட்டசபைக்கு பாலா தொகுதியிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டு வரும் கேரளா காங்கிரஸ் தலைவர் மாணிக்குப் பாராட்டு விழா நடைபெற்றது.

1986 இல் கேரள அரசுக்கு உபரி பட்ஜெட் தயாரித்ததைத்தான் தமது பணி வாழ்வின் மறக்க முடியாத நிகழ்ச்சி என்கிறார்.

இந்த அபூர்வ அமைச்சரை யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் போய்ப் பார்க்கலாம்; பேசலாம்.

ஊழலா? கூப்பிடு மந்திரவாதியை!

‘கூப்பிடு மந்திரவாதியை!’

பாலக்காடு மாவட்டம், கொழிஞ்சாம்பாறை பஞ்சாயத்து அலுவலகத்தில் முக்கியமான வரி வசூல் கணக்குகள் அடங்கிய ஒரு புத்தகம் திடீரெனக் காணாமல் போய்விட்டது. அதைத் திரும்பப் பெற ஒரு மந்திரவாதி அழைக்கப் பட்டார். அவர் அலுவலக அறையில் ஹோமம் வளர்த்து, ஒரு முட்டையைத் தரையில் வைத்து மந்திரம் சொல்லி, புத்தகத்தை எடுத்தவருக்குச் சாபம் கொடுத்தார். உடனே அந்த முட்டை ஒரு துள்ளு துள்ளியதாம்! சிறிது நேரத்தில், காணாமல் போன புத்தகம் அலுவலக நடையில் கிடந்ததாகச் சொல்லி ஒருவர் எடுத்து வந்து கொடுத்தாராம்.

மந்திரவாதிக்கு ஏராளமாய் தட்சணை கொடுத்தார்கள்.

மந்திரவாதி அழைக்கப்பட்டதைக் கடுமையாக எதிர்த்துப் போராடுகிறது யூனியன். ‘எடுத்தவனைக் கண்டுபிடிக்காமல் மந்திரவாதி எதற்கு? உண்மைகளை மூடி மறைக்கவே இந்த நாடகம் நடத்தப்பட்டது’ என்று கூறுகிறார்கள்.

“மறைந்த புத்தகத்தைக் கண்டுபிடிக்க மந்திரவாதி என்றால் மறைவாக நடக்கும் ஊழல்களையெல்லாம் கண்டுபிடிக்க மந்திரவாதி உதவட்டுமே!” என்கிறார்கள் அந்த ஊர் மக்கள்.

வானில் வட்டமிட்ட மந்திரி

கோழிக்கோடு கரிப்பூர் விமான நிலையத்துக்கு டில்லி மந்திரி எம். எம். ஜேக்கப்பை ஏற்றிக் கொண்டு ஒரு விமானம் காலை எட்டு மணிக்கு வந்தது. ஆனால் தரை இறங்க சிக்னல் கிடைக்காததால் வானிலேயே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.


கலெக்டரும் போலீஸ் அதிகாரிகளும் விசாரிக்க எங்களுக்கு இப்படி ஒரு விமானம் வருவதாகத் தகவலே இல்லை என்று விமான நிலைய அதிகாரிகள் கூறி விட்டனர். அங்கே காலை பத்து மணி முதல் மாலை ஐந்து மணி வரைதான் விமானங்கள் இறங்க முடியும் என்று எடுத்துக் காட்டினர்.

கடைசியில் ஏர்போர்ட் டெபுடி டைரக்டரை அவர் வீட்டுக்குப் போய் அழைத்து வந்து மந்திரியைச் சுமக்கும் விமானம் தரை இறங்க வகை செய்யப்பட்டது.

இது குறித்து விசாரணை நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கூடவே மந்திரிகள் தனி விமானங்களில் பறந்து மக்கள் பணத்தை விரயம் செய்வதற்கும் ஒரு விசாரணை நடந்தால் நல்லது.

- எஸ். எஸ். மணி

தங்க மழையின் தங்க குவியல் திட்டத்தில் சேர்ந்து நீங்களும் அதிர்ஷ்டசாலியாகலாம்!



எங்களின் மாதாந்திர ரூ.500/-, ரூ.250/-, ரூ.100/- நகை சேமிப்புத் திட்டங்களில் சேர்ந்து முதல் பரிசாக மாருதி கார், 25 சவரன் தங்கம், கைனடிக் ஹோண்டா மற்றும் 152 விலைமதிப்பற்ற பரிசுகளைத் தட்டிச் செல்லுங்கள்!!

நகை சேமிப்பு திட்டங்கள்







தனவர்ஷா

சேமியுங்கள் மாதம் ரூ.500/-

பரிசுகள்	அதிர்ஷ்ட சாலிகள்	பரிசுகள்
முதல்	1 நபர்க்கு	மாருதி கார் (800cc ஸ்டாண்டர்ட் மாடல்)
இரண்டாம்	2 நபர்க்கு	கைனடிக் ஹோண்டா ஸ்கூட்டர்
மூன்றாம்	3 நபர்க்கு	21'' கலர் டி.வி.
நான்காம்	4 நபர்க்கு	டி.வி.எஸ் 50 மோபெட்
ஐந்தாம்	5 நபர்க்கு	ரெஃப்ரிஜிரேட்டர்
ஆறாவது	6 நபர்க்கு	வாஷிங் மெஷின்
ஏழாவது	7 நபர்க்கு	தங்க சவரன் (8 கிராம்)
எட்டாவது	8 நபர்க்கு	2-இன்-1 போர்ட்டபிள்
ஒன்பதாவது	9 நபர்க்கு	மிக்ஸி
பத்தாவது	10 நபர்க்கு	ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் காஸ் ஸ்டவ்

தனரத்னா

சேமியுங்கள் மாதம் ரூ.250/-

பரிசுகள்	அதிர்ஷ்ட சாலிகள்	பரிசுகள்
முதல்	1 நபர்க்கு	25 சவரன் தங்கம் (200 கிராம்)
இரண்டாம்	2 நபர்க்கு	21'' கலர் டி.வி.
மூன்றாம்	3 நபர்க்கு	டி.வி.எஸ் 50 மோபெட்
நான்காம்	4 நபர்க்கு	ரெஃப்ரிஜிரேட்டர்
ஐந்தாம்	5 நபர்க்கு	வாஷிங் மெஷின்
ஆறாவது	6 நபர்க்கு	தங்க சவரன் (8 கிராம்)
ஏழாவது	7 நபர்க்கு	2-இன்-1 போர்ட்டபிள்
எட்டாவது	8 நபர்க்கு	மிக்ஸி
ஒன்பதாவது	9 நபர்க்கு	ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் காஸ் ஸ்டவ்
பத்தாவது	10 நபர்க்கு	பிரஸ்டீஜ் பிரஷர் குக்கர்

தனரேகா

சேமியுங்கள் மாதம் ரூ.100/-

பரிசுகள்	அதிர்ஷ்ட சாலிகள்	பரிசுகள்
முதல்	1 நபர்க்கு	கைனடிக் ஹோண்டா ஸ்கூட்டர்
இரண்டாம்	2 நபர்க்கு	ரெஃப்ரிஜிரேட்டர்
மூன்றாம்	3 நபர்க்கு	வாஷிங் மெஷின்
நான்காம்	4 நபர்க்கு	ஸ்டீல் அலமாரா
ஐந்தாம்	5 நபர்க்கு	ஏர்கூலர்
ஆறாவது	6 நபர்க்கு	மிக்ஸி
ஏழாவது	7 நபர்க்கு	ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் காஸ் ஸ்டவ்
எட்டாவது	8 நபர்க்கு	பிரஸ்டீஜ் பிரஷர் குக்கர்
ஒன்பதாவது	9 நபர்க்கு	அமான் பாக்ஸ்
பத்தாவது	10 நபர்க்கு	1 கிராம் தங்க நாணயம்



பொங்கல் விழாக்காலச் சிறப்புச் சலுகை!
13-1-93 — 17-1-93 வரை
கல் காசு, செய்கூலி, சேதாரம் இல்லை.


தனலக்ஷ்மி ஜுவல்லர்ஸ்

59, உஸ்மான் சாலை, (பனகல் பார்க் அருகில்), தி.நகர்,
சென்னை-600 017. தொ.பே.: 443697, 445293, 445242


தலைமை அலுவலகம்: 14/33-A, சுந்தரகிரி தெரு, நெல்லூர் - 524 001.

MERCURY ADS

மேலும், மாதாந்திரச் சிறப்புக் குலுக்கலில் மூன்று சேமிப்புத் திட்டங்களுக்கும் முறையே ரூ.5000/-, 2500/-, 1000/- மதிப்புள்ள தங்க நகைகள் பரிசாக அளிக்கப்படும்.



பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் : ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.



அரவணைப்புக்கு வழிகள் மூன்று !

நம்பிக்கை என்றால் உபாஸனா. உங்கள் செல்வம் தினம் தினம் வளர உறுதியாய் உழைக்கும் நிதிநிறுவனம்.

நேர்மை, நாணயம், மனிதநேயம் என்னும், 'டிவிஎஸ்' ஸின் சீரிய நெறிமுறைகளை கடந்த ஏழு வருடங்களாக பிரதிபலித்து வரும் நிறுவனம். அதிக பலன் தருவதாகக் கூறும் திட்டங்களோடு இணைந்த எந்த அபாயமும் 'உபாஸனா' வின் திட்டங்களில் இல்லை!

உபாஸனா ஃபைனான்ஸ் லிமிடெட்

டிபாசிட் திட்டங்கள்

திட்டம் 1

[illegible]

[illegible]	[illegible]
25 / 36 / 48 / 60	15% [illegible]

திட்டம் 2

[illegible]

[illegible]	[illegible]
25 / 36 / 48 / 60	15% [illegible]

* [illegible]

திட்டம் 3 [illegible]

[illegible]

[illegible]	[illegible]			
	[illegible]	[illegible]	[illegible]	[illegible]
ரூ. [illegible]	ரூ. [illegible]	ரூ. [illegible]	ரூ. [illegible]	ரூ. [illegible]
[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]

** [illegible]

[illegible]

[illegible]

☐ திட்டம் 1 ☐ திட்டம் 2 ☐ திட்டம் 3

பெயர் : ____

முகவரி : ____

____ போன் ____

[illegible]

[illegible]

தொடரும் நம்பிக்கையென்னும் 'டிவிஎஸ்' பாரம்பரியம் !

Stimulus/UFL/173/92

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

